Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 வெள்ளி - 06 01 - 07 - ஏப்பிரல் - 2005



## படித்ததில் பிடித்தது

### தூரத்தில் இருந்து...!

தமிழுக்கு அமுதென்று
பேர்வைத்த
ஆன்றோர் பிறந்த
இந்திய மண் ~ இன்று
அந்நியமாகிப்போவதா

தமிழுக்காக ~ அதன்
தனி உரிமைக்காக
போராடும் ஈழத்தவர்
இனத்தீரவிலே,
தூரத்துப் பார்வையாளராய்
நின்று ரசிப்பதோ?

பேரினவாதிகளுக்கு
சாமரம் வீசி,
பின்புலமாய் இணைசெல்வதோ?

சகோதர ஈழத்தை
சரியாய் புரிந்துகொள்ளாது
எதிராய் செயல்புரிவதோ

சிறுபான்மை அரசு,
சிம்மாசனம் ஏற
பெரும்பான்மை
எதிரணியில் நிற்க

தமிழர் தலைவிதி
சங்கடத்தில் மாட்டி
தடம்புரண்டு போவதோ

இன்பத்தமிழ்
இனியும் இழப்பதோ?
இருக்கும் சிறப்பினை
வங்கக் கடல் பிரிப்பதோ.

ஆங்கிலத்தில்:~பாத்திமா நஜீம்
தமிழில் :- இ.றஜித்

### குலைந்த அழகு

பொருளாசை உந்த
அவர்கள் புதுத் தேசத்தை விழுங்கும்
எண்ணம் கொண்டலைந்தனர்
காட்டுமிராண்டிக் காற்றால்
சாய்க்கப்பட்ட மரத்தின் கிளைக்
காம்புகள் என
முலைகள் வருடிப் போயின
கசையடியின் கொடூரம்
அநாதைகளின் வலியை
மரக்கச் செய்தது.
இனம் ஒன்றின் அழகு குலைந்தது
பணத்தாசைப் பிராமணரின்
மந்திர உச்சாடனம்
உச்சஸ்தாயியில் முழங்க,
இன்று இனமொன்றின் அழகு
சேடமிழுக்கிறது.

ஆங்கிலத்தில்(F) பக்டிப் மறாஜ்
(கருபியன் கவிஞர்)
தமிழில் – சங்கரன்

## கார சாரம்

# யார் உழைப்பது யார் ஒத்துழைப்பது

உலகம் எவ்வளவுதான் பெண்களை முன்னேற்றப் பாடுபட்டாலும், அவர்கள் வெளியே வருகிறார்களில்லை என்பது இன்று முன்வைக்கப்படும் பிரச்சினை. ஏன் வெளியே வரவில்லை என்ற கேள்விக்கு விருப்பமில்லை, பழகிவிட்டது, நேரமில்லை, வீட்டில வேலை முடிஞ்சாத்தானே எனப் பல பதில்கள் வருகின்றன. இவை எவ்வளவுக்கு உண்மை என்பது கேள்விக்குரிய ஆய்வுக்குரிய விடயம்.

போகட்டும் வெளியே வந்த பெண்கள் அனைவரும் நிம்மதியாக இருக்கிறார்களா என்றால் அதுவும் கேள்விக்குறிதான். அநேகமான பெண்கள் வேலைபார்க்கும் இடங்களில் துன்புறுத்தப்படுவது தொடர்கிறது. கூடவே வேலை செய்யும் ஆண்களால் ஒடுக்கப்பட்டும், பால் ரீதியான விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டும் வருவது மிகத் தெளிவாகவே இனங்காணப்பட்டு வருகிறது. "உதில போறாவே மருண்சாறி... ஆள் அமசடக்கம் கேட்டுப்பாருமன் லைனில வருவா."

''சின்ன விசயமடா தட்டிப்பாரன் கிட்டினாலுங் கிட்டும்''

"ஒருத்தருக்கும் மசியிறாளில்ல"

"முதல் வேலை செய்தடத்த லவ்பிறேக்கோ- மாற்றங் கேட்டு வந்தவவாம்..."

"இப்ப வீடு மாறிற்ரினம்.... ஆளும் மாறிற்ரோ தெரியா..."

என்பன போன்ற சீண்டல்கள் பெண்களின் காதுபடப் பொழிகின்றனர். போதாததற்கு யாரும் அசட்டுப் பிசட்டென்று உள்ளவர்களைத் தூண்டி நீ கேளடா நாங்கள் இருக்கிறந்தானே..." என்றும், தூண்டப்பட்டவன் மூக்குடைபட்டு வந்ததும் அவதான் கேட்டவவெண்டு கதையமாத்தடா" என ஆலோசனை வழங்கியும் நெருக்குதல் கொடுக்கும் போது வயிற்றுக் கொடுமைக்கு வேலையில் சேரும் பெண்கள் மேல் எழும் ஆத்திரத்தில் மேலதிகாரிகளிடம் புகார் செய்தால் அங்கும் ஆணாதிக்கமே வெல்ல வேறு வழியின்றிக் கூசிக் குறுகி வேலை செய்துவிட்டுத் திரும்ப வேண்டிய இக்கட்டான நிலைககுள் தான் உள்ளனர். எங்களுடைய நிறுவனத்தில் பெண்களுக்கான சுயமரியாதையை எவ்விதத்திலும் பாதிக்க நாம் விடவேயில்லை என்று நிறுவனங்கள் கூறக்கூடிய நிலைமை வேண்டும்.

சில இடங்களில் ஆண் பெண் சமத்துவம் நிலவத்தான் செய்கிறது. எங்கேயென்று கேட்கிறீகளா- சாப்பாட்டு மேசையிலும், கழிப்பறைகளிலும் ஆம் அந்த இடங்களில் ஆண் பெண் வேறுபாடின்றி இருவருக்கும் ஒரே இடம் அலுவலக முறைமைகளில் கூட குளிரூட்டப்பட்ட அறைகள் கொண்டவைதான் அலுவலகமா? தெரியவில்லை. ஆனால் நில மட்டத்திலிருந்து பத்துப் பதினொரு அடி உயரமான சீற்கூரைகளின் கீழ் வேலை செய்யப் பணிக்கப்பட்டுள்ள தொழிலாளிக்கு இன்றைய வெயிற்காலப் பகல் அவ்வலுவலகத்தை எப்படிக் கருத வைக்கும். இளந்தாய்மார்கள் மாதவிலக்குடையோர் போன்ற பெண்களும் தொழில் செய்தாலும் இவர்களுக்கான ஓய்வறை உண்டா என்று கேட்பதுடன் வர்த்தக நிறுவனங்களிலும் ஏனைய சில நிறுவனங்களிலும் ஓய்வு நேரமுண்டா? பெண் என்றால் பேயும் இரங்கும் என்ற மொழி மாறி பெண்ணென்றால் பேயாக எண்ணு! என்று வந்துவிட்டதோ? மாலையில் தலையிடி மன உளைவுடன் வீட்டுக்கு வந்து வீட்டு வேலைகளையும் செய்ய வேண்டிய பெண்கள் எப்படித் தாங்குவர்.

பெண்களின் நலன்களைக் கவனிக்க எத்தனையோ நிறுவனங்கள் அமைப்புகள் இருந்தாலும் பெண்களுக்காக அவை நேரடியாக என்ன செய்கின்றன. நாலு கருத்தரங்கு வைப்பது இரண்டு கருத்துப் பட்டறைகள் நடத்துவது காலத்துக்குக காலம் ஊர்வலம் நடத்துதல், எழுதிக் கொடுத்த கோசத்தைக் கத்துதல் கருத்துரைகளை செவிமடுக்கச் செய்தல், பின்னணியில் அறிக்கை தயாரித்தல், மேலிடங்களுக்கு அனுப்புதல் "எப்படிச் சனம்..."

"சனம் வராம விட்டுதுகளோ எண்டு பயமாக் கிடந்துது"

"அண்டைக்கு செமினாருக்கும் நல்ல சனம்" என தங்களை ஆள்திரட்டலுக்கு வியந்து கொள்வதுடன் இவர்கள் பணிசரி. பெண்களின் முன்னேற்றத்துக்கு யார் உழைப்பது யார் ஒத்துழைப்பது.

மாயா

# காணாமற் போன சமுர்த்தி

இலங்கை அரசிற்கும் - தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுவதற்கு முன்பு வன்னிப் பெருநிலத்தில் வாழ்ந்த மக்கள் எதுவித அடிப்படை வசதிகளோ அரசின் அடிப்படை அபிவிருத்தி நடவடிக்கைகளோ இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்பு வசதிகளோ எதனையும் செய்யாது புறக்கணித்த வண்ணமே செயற்பட்டது. உலகின் மூன்று மண்டல நாடுகளின் மூலை முடுக்குகளில் கூட கணினியின் பயன்பாடு ஆரம்பக் கல்வி பயிலும் சிறார்கள் அறிந்திருந்தனர். ஆனால் வன்னிப் பெரு நிலப்பரப்பில் வாழ்ந்த மாணவ - மாணவிகளின் கல்வி அறிவு புறக்கணிக்கப்பட்டதாக இருந்தது.

உண்ணப் போதிய உணவின்றி. நோய் தீர்க்க மருத்துவர்கள், மருந்துகள் இன்றி ஒளியேற்றவும் எரிபொருளாகப் பாவிப்பதற்கு மண்ணெண்ணையின்றி அல்லலுற்று சிறிலங்கா இராணுவத்தின் கண்மூடித்தனமான எறிகணை வீச்சு, விமானத் தாக்குதலால் உறவுகளை இழந்து ஏதிலிகளாக வாழ்ந்த மக்களுக்கு அரசுக்கும் - தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து மெல்ல புதிய அறிவிப்புக்கள் அடியெடுத்து வைக்கத் தொடங்கின. ஆனால் சமுர்த்தித் திட்டம் அடியெடுத்து வைக்கத் தொடங்கியதும் அடிபட்டு அடிச்சுவடு தெரியாது தொலைந்து விட்டது.

ஆம் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மிகத்துரிதமாக நேர்முகத் தேர்வுகள் ஏப்ரலில் 10,12ஆம் திகதி 2002 ஆம் ஆண்டு இடம்பெற்றது. இதற்கான ஆட் தெரிவுகள் முடிந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான முதற்கட்ட ஒரு நாள் பயிற்சி வகுப்புக்கள் முறையே கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெற்றன. இப் பயிற்சி வகுப்புக்கள் 13.05.2002 திங்கட்கிழமை இரு மாவட்டங்களிலும், இடம்பெற்றன. இதில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பயிற்சி வகுப்பு திரு. குரூஸ் அவர்களால் 13.03.2005 அன்று புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடாத்தப்பட்டது. இதன் போது நேர்முகத் தேர்வில் தெரிவானோர் அழைக்கப்பட்டனர். பயிற்சி வகுப்பு முடிவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக விரைவில் நியமனக் கடிதங்கள் வந்து சேரும். இதனைத் தொடர்ந்து பயிற்சிகள் மேலதிகமாகப் பெற தென்பகுதிக்குச் செல்ல வேண்டும் என உறுதியாகக் கூறினார்கள் ஆனால ஆண்டுகள் உருண்டோடியது தான் மிச்சம் தெரிவு செய்யப்பட்டவர்களின் நியமனம் கற்பனையில் மிதக்க உத்தரவாதங்கள் காற்றிலே கரைந்தன.

இலங்கை பூராக வறுமை ஒழிப்பிற்காக வெற்றிகரமாக தனது வயதை பத்தாக முடித்து நிற்கும் சமுர்த்தித் திட்டம் வன்னிப் பெருநிலப் பரப்பில் செயற்படுத்த அரசு அலட்சியம் காட்டுவது ஏன்? சம்பந்தப்பட்ட அமைச்சகம், அதிகாரிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மௌனமாக இருப்பது ஏன்?

சமுர்த்தி என்றால் ஒரு பிரதேசத்தில் வாழும் மக்களிடையே வறுமையை இனம் கண்டு அவர்களை அவ்வறுமையிலிருந்து மீட்டு வாழ்வதற்கு வழிகாட்டி அவர்கள் வாழ்வில் சுபீட்சத்தை ஏற்படுத்துதல் என்று கூறப்பட்டது.

இதன் மூலம் வறிய மக்களை நாணயமானவர்களாக சமூகத்தில் வாழ வைத்தல், சுய நம்பிக்கையை ஏற்படுத்துதல், சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தல் கடன் வழங்கும், போது இனங்கண்டு வழங்கல், கூட்டுறவை ஏற்படுத்தல் போன்ற இன்னோரன்ன சேவைகளை வழங்குவதே இச் சமுர்த்தி ஆகும்.

இச் சமுர்த்தித் திட்டத்தின் மூலம் சமூக நலன் உதவிகள் ஒருங்கிணைப்பு கிராம அபிவிருத்தித் திட்டங்கள், சமுர்த்தி சந்தைகள் சமுர்த்தி வங்கித் திட்டம், ஏனைய செயற்பாடுகளுக்கான சமுர்த்தி செயலணி போன்றவற்றின் ஊடாக ஒரு பிரதேசத்தின் வறுமையை ஒழித்து அப்பிரதேச மக்களை சுபீட்ச வாழ்வுக்கு இட்டுச் செல்வதாகும். அப்படி ஆயின் வன்னிப் பெருநிலப்பரப்பில் எப்போது சமுர்த்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். காலங்கள் உருண்டோடியும் கற்பனையில் தானா? கனமான உத்தரவாதங்கள் காற்றிலேயே கரையத்தானா? அரசு இனியும் அலட்சியம் தானா? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்றும் சம்பந்தமே இல்லையென்று வாழாவிருப்பார்களா?

த.அருண்

# சந்திரிகா ஆசைப்படும் ஒரு யுத்தத்தை புலிகள் தொடங்குவார்களா?



**நிலாந்தன்**

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட காலப்பகுதியில் கிளிநொச்சியில் ஒரு பத்தி எழுத்தாளருடன் உரையாடிக்கொண்டிருந்த போது அவர் சொன்னார்... சனங்கள் எல்லாவற்றையும் அனுபவித்துவிடத் துடிக்கிறார்கள். போகக்கூடிய இடங்களுக்கெல்லாம் போய் வாங்கக்கூடிய பொருட்களையெல்லாம் வாங்கிவிடத் துடிக்கிறார்கள். இதெல்லாம் எதுவரையிலும் என்றால்... எப்போது பத்திரிகைகளில் "புலிகள் அதிருப்தி, புலிகள் ஆட்சேபம், புலிகள் விசனம், புலிகள் சீற்றம்," என்று செய்திகள் வரத் தொடங்குகின்றனவோ அதுவரையிலும்தான். அத்தகைய செய்திகள் வரத்தொடங்கிவிட்டன என்றால் சமாதானம் ஆட்டங்காணத் தொடங்கி விட்டது என்று அர்த்தம். அதுவரையிலும்தான் இந்த யுத்தநிறுத்தத்தை சனங்கள் அனுபவிக்கலாம் என்று.

அவர் சொன்னதுபோல அறிக்கைகள் வரத்தொடங்கி சுமார் ஒரு ஆண்டுக்கு மேலாகிவிட்டது. ஆனால், சண்டை இன்னமும் வரவில்லை.

புலிகள் சண்டையைத் தொடங்குவதாக இருந்திருந்தால் கௌசல்யன் கொல்லப்பட்டதோடையே அதை தொடங்கியிருந்திருக்கவேண்டும். ஆனால், அதற்குப் பிறகும் புலிகள் பொறுமை காக்கிறார்கள் என்றால் அதன் அர்த்தம் நிலவும் சமாதானத்தை புரிந்து கொள்வதற்கு ஏற்கனவே இருந்து வந்த பழைய அளவு கோல்கள் மட்டும் போதாது என்பதே.

இம்முறை சமாதான முயற்சிகள் முற்றிலும் புதியவைகளாக முன் உதாரணம் அற்றவைகளாகக் காணப்படுகின்றன. இலங்கைத்தீவின் சமாதானத்தைப் பற்றி இது வரையிலும் இருந்து வந்த முற்கற்பிதங்கள் எடுகோள்கள் எல்லாவற்றையும் பொய்யாக்கி விட்டு மெலிந்த இந்த யுத்தநிறுத்தம் நொண்டி நொண்டி அசைந்து கொண்டேயிருக்கிறது.

அது ஏன் இன்னமும் பொறிந்து விழவில்லை என்றால், அதற்கு மூன்று முக்கிய காரணங்கள் உண்டு. முதலாவது, சர்வதேச அளவில் சமாதானத்துக்கு ஆதரவான விசைகளே பலமாகக் காணப்படுகின்றன என்பது. இரண்டாவது, புலிகள் கடந்த மூன்று ஆண்டுகளாக சர்வதேச அரங்கில் தமது ராஜீய அந்தஸ்தை உயர்த்துவதில் ஆர்வமாகக் காணப்படுவது. மூன்றாவது தனது தனிப்பட்ட கனவுகளை நிறைவேற்றும் பேராசைகளோடு இருக்கும் சந்திரிகா யுத்தத்திற்கும், சமாதானத்திற்குமிடையில் தளம்பிக்கொண்டு இருப்பது.

முதலாவது காரணத்தின் படி அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் இந்தப் பிராந்தியத்தில் சமாதானம் அல்லாத வேறு எந்தத் தெரிவுக்கும் ஆதரவற்றிருப்பதோடு இது விசயத்தில் பிராந்தியப் பேரரசான இந்தியாவையும் இயன்றளவு பங்காளியாக்க முயன்ற வண்ணம் இருப்பதால் இந்தச் சர்வதேச அரசியல் யதார்த்தத்தை மீறிச் செயற்பட முடியாத ஒருநிலை.

இரண்டாவது காரணத்தின் படி, சமாதானத்துக்காக தியாகம் செய்ய தயாராயிருக்கும் புலிகளுக்கு ஐரோப்பாவில் காட்டப்படும் வரவேற்பும் உபசரிப்பும் மதிப்பும் அரவணைப்பும் அவர்களை சர்வதேச சமூகத்திற்கு பதில் சொல்லவேண்டிய பொறுப்புமிக்க ஒரு அமைப்பாக மாற்றியிருக்கும் அதேசமயம், சர்வதேச அளவில் புலிகளின் ராஜீய அந்தஸ்தை முன் எப்பொழுதும் இல்லாத அளவுக்கு உயர்த்தியும் விட்டிருக்கிறது.

மூன்றாவது காரணம் சந்திரிகாவின் தளம்பல் நிலை. சந்திரிகாவுடைய கவலை எல்லாம் யுத்தத்தைப் பற்றியதோ அல்லது சமாதானத்தைப் பற்றியதோ அல்லது சுனாமிக்குப் பின்னரான பொதுக் கட்டமைப்பை பற்றியதோ அல்ல. மாறாக, அவருடைய தலைக்குள் கிடந்து உருள்வது ஒரே ஒரு விசயம் தான். அது என்னவெனில் அடுத்த சனாதிபதி தேர்தலுக்கிடையில் எதைச் செய்தால் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கலாம் என்பதே.

அதற்காக அவர் யுத்தம் செய்யவும் தயார். அல்லது சமாதானம் செய்யவும் தயார். அல்லது குறைந்த பட்சம் சுனாமிக்குப் பின்னரான பொதுக் கட்டமைப்பு ஒன்றுக்கு இறங்கிவரவும் தயார். ஆனால், எதைச் செய்தாலும் அது அவருடைய பேராசைகளை நிறைவேற்ற வேண்டும். இல்லை என்றால் அவர் அதில் இறங்கமாட்டார்.

இப்போதைக்கு அவருக்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது. அதுவரை சுனாமி பொதுக் கட்டமைப்புக்கான யோசனைகள் மாற்று யோசனைகள் திருத்தப்பட்ட யோசனைகள் என்று காலத்தை இழுத்தடிப்பதன்மூலம் மேற்கு நாடுகளை சமாளிக்கலாமா என்று முயன்று பார்க்கிறார்.

மற்றும் படி, சமாதானத்தை விடவும் ஒரு யுத்தம் அவருடைய பேராசைகளை பூர்த்திசெய்யக் கூடிய புதிய வழிகளை திறக்குமாயிருந்தால் அவர் அந்த வழியால் போகத் தயார்.

அண்மைக்காலங்களில் புலிகளைச் சீண்டும் விதத்தில் அதிகரித்துவரும் யுத்தநிறுத்த மீறல்களை தொகுத்துப் பார்த்தால் இது தெரியவரும். அதாவது சமாதானத்தைவிட ஒரு யுத்தம் பரவாயில்லை என்ற ஒரு தெரிவுக்கு கிட்டவாக சந்திரிகா வந்து கொண்டிருக்கிறார். ஆனால், மேற்கு நாடுகளைப் பகைத்துக் கொண்டு இதைச் செய்யாமல் மேற்கு நாடுகளுடன் இசைந்து போவது போல காட்டிக் கொள்ள பொதுக்கட்டமைப்பைப்பற்றிக் கதைப்பது, கிழக்கில் நிகழும் புலிகள் மீதான தாக்குதல்கள் குறித்து விசாரணை கொமிஷன் ஒன்றை உருவாக்குவதுபோன்ற சில சமாளிப்புக்களை செய்துவருகிறார்.

ஆனால், அதேசமயம் உள்ளூர இரகசியமாக புலிகளை யுத்தத்தை நோக்கி தூண்டும் விதத்தில் யுத்த நிறுத்த மீறல்களை ஊக்குவித்து வருகிறார்.

இதில் முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய விசயம் எதுவெனில்- மேற்கு நாடுகளைப் பகைத்துக்கொண்டு தானாக ஒரு யுத்தத்தை தொடங்க சந்திரிகா தயாரில்லை. பதிலாக, புலிகளைச் சீண்டுவதன் மூலம் புலிகள் தாமாகவே ஒரு யுத்தத்தை தொடங்கும் ஒரு கட்டத்திற்கு நிலைமைகளை வளர்த்துச்செல்லவே அவர் விரும்புவது போலத் தோன்றுகிறது.

ஆனால் சந்திரிகாவின் வியூகத்துள் விழும்நிலையில் புலிகள் இல்லைப் போலத் தெரிகிறது. அவருடைய தனிப்பட்ட கனவுகளை பூர்த்திசெய்யும் வழிவகைகளைத் திறந்துவிடும் ஒரு யுத்தம் வெடிக்குமாயிருந்தால் அதற்கு முன்பு அவரை சர்வதேச அளவில் அம்பலப்படுத்த வேண்டும் என்பதில் இம்முறை புலிகள் அதிகம் ஆர்வமாயிருப்பது தெரிகிறது.

சந்திரிகா ஆசைப்படும் ஒரு யுத்தத்தை களத்தில் தொடங்காமல் களத்திற்கு வெளியே சர்வதேச அரங்கில் ஒரு இராஜதந்திர யுத்தத்தை செய்வதே புலிகளின் இப்போதைய சமாதானத்திற்கான உத்திபோலத் தோன்றுகிறது. அதாவது புலிகளின் பொறுமையும் சந்திரிகாவின் கனவுகளும் மோதும் ஒரு கட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது.



புலிகளாகச் சண்டையைத் தொடங்கவில்லை என்றால் சந்திரிகா வேறு ஏதாவது குறுக்கு வழியைத் தேடவேண்டியிருக்கும். ஒப்பீட்டளவில் ஒரு சண்டையால்தான் ஜே.வி.பியைச் சமாளிக்கலாம். ஏனைய எதிர்க் கட்சிகளைச் சமாளிக்கலாம். சமாதானம் செய்யும் மேற்கு நாடுகளையும் சமாளிக்கலாம். அதே சமயம் தனக்குத்தேவையான புதிய வழிகளை திறந்தும்விடலாம். அதுவும் அந்த யுத்தம் புலிகளாகத் தொடங்கிய ஒரு யுத்தமாக இருக்கவேண்டும். ஆனால், புலிகள் தொடர்ந்தும் பொறுமை காப்பார்களாக இருந்தால் அதன் விளைவாக சர்வதேச சமூகம் புலிகளைச் செவிமடுக்கும் ஒரு நிலை மேலும் வளர்ந்து செல்லுமாயிருந்தால் சந்திரிகா புலிகள் பற்றிய பாரம்பரியமான அணுகுமுறைகளை கைவிட்டு ஏதும் புதிய வழிவகைகளைப் பற்றி சிந்திக்கவேண்டியிருக்கும்.

அதன்படி யுத்தநிறுத்த மீறல்களை ஊக்குவிப்பதைவிடவும் அசிங்கமான அரசியல் அமைப்பு மீறல்கள் எதிலாவது அவர் இறங்கக்கூடும்.

---



## விசுக்விசுக் விசாலாச்சி

வந்து சேருதுகள் விளக்குமாத் துக்குப் பட்டுக்குஞ்சம்கட்டினமாரி. சமாதானம் பேச்சுவார்த்தையெண்டு புலுடாக் கதையளக் கதைச்சு ஆட்சி யும் பிடிச்சு அம்மா ஆடாத நாடகமு மில்லைப் போடாத வேசமுமில்லை. என்னவோ சொல்லுவினமே மூக்கி ருக்குமட்டும் சளிதான் எண்டமாரி. இனவாதமுள்ளமட்டும் பிரச்சினை தான்.

மெய்யேடா உவர் கதிர்காமக் குஞ்சியப்பு எங்கயோ வெளிநாட்டில போய் சொன்னாராம். அமைதிப் பேச்சுக்கு இப்ப நேரமில்லையெண்டு.கதிராமத்தானே உனக்குந் தான் கண்ணில்லையோ....ங... இவன் எண்டைக்குத்தான் சமாதானம் கதைக்கப்போறான். இல்லை கதைப்பானெண்டுதான் நினைக்கிறியோ. எடபேய்ப்பெடியா. இண்டைக்கு அவள் இவரை என்னத்துக்கு தன்ர முந்தானையில முடிஞ்சு வைச்சிருக் கிறாள்.ங. இந்தப் புலிப் பிரச்சினை இல்லையெண்டா உவையள ஆர் மதிக்கிற பிரச்சினை இருக்குமட்டுந் தானேயடா தேவானந்தம் கதிராமம் எல்லாம் கொடியேறும், பின்ன இந்தக் கருணைமூர்த்தியளும் ஒண்டியிருப்பினம் புலியள் மட்டும் இறுக்கிப் பிடியாமப் போனா உவை நிண்டடத்த புல்லு முளைச்சுப்போம். பின்ன இதுகள் பாட்டில சண்டை சமாதானம் திண்ட தேங்காய்ப்பூ எண்டு வெளிக்கிட்டா... எத்தின பேருக்கு அந்தரமாப்போகும். எடேய் உவன் ஜே.வி.பிகாரற்ற விளையாட்டும் உதுதானே. "ஒய்யாரக் கொண்டையாந்தாழம்பூவாம் உள்ள இருக்கிறது ஈரும் பேனாம்" எண்டு பொதுசன ஐக்கிய முன்னணிக்க என்னவோ கவர்ச்சியக்கண்டுதானே சனம் வேட்டுப் போட்டவை. இப்ப ரெண்டு கட்சிக் காரரும் எப்பிடி ஒற்றுமை. எடபோடா நித்திய கண்டம் பூரண ஆயுசு. எண்டு உங்க என்னடா நடக் குது. ம்... இப்ப உள்ளநாட்டுப் பேப்பருகள், ரீவியள், ரேடியோக்களெல்லாம் அம்மாட பொறுப்பில வந்துட்டுதாம். வேணுமெண்டாப் பாருங்கோவன் லெக்சன் வரமுன்னம் உதுகளைக் கையுக்க போடாட்டி கடைசி பரியந்தம் வெல்லேலா- பின்ன மங்களத்தாரும் உதை வச்சே இலங்கைக்கு மங்களம் பாடிப்போடப் படாதபாடுபட்டவர். இப்ப யேன்ரா- அவதிப்படுறியள். பேச்சு வார்த்தையுமில்லை. சமாதானமுமில்லை. நான் சொல்லுறன்.

ங... ஓமடா எனக்குக் கரிநாக்குத் தான். பின்ன எனக்கு வந்துதெண்டா எடேயெடேய். என்ர வயசுக்கு நான் எத் தின பேச்சு வார்த்தையக் கண்டனான். ம்... பழமுந்திண்டு கொட்டையும் போட்டவளடா நான். நீ இருந்துபாரன் அவையவை கதிரைபிடி சண்டையில சனத்த மறந்து போச்சினம் நாங்களும பேந்து கடல் வத்திக் கருவாடுதின்ன இருந்தகாகம் குடல் வத்திச் செத்தமாரி, போரோட வாழ்ந்த வாழ்க்கையை மறந்து சொகுசில வாழப்பழகிப் போட்டு அந்தரபடக் கூடாது. என்ன இப்ப கொஞ்சப் பேருக்கு விசிறியில்லாமக் காலம் போகுதில்ல. வெயிலப் பிடி எண்டே சொல்லுறாய் போய்ப்பாரடா சுனாமியடிச்சு நொந்துபோன சனத்துக்கு உந்த வேகா வெயில்ல சீற்றடிச்ச வீடுகள்ள இருக்க விட்டிருக்கிறத- சில இடங்கள்ள மருந்துக்கும் இணலில்ல. உங்களுக்கு ஏயாக் கொண்டிசன் இருந்தாத்தானே எழுதப்படிக்கவும் ஏலுது.

உதைச் சொல்லுறாய் பொடியா- எனக்கெல்லாம் இப்ப நிலத்தில கால்வைக்கக் கூசுதடா... அதுதான்... அரசியல்வாதியப் போல எனக்குமிப்ப சமாதானத் தில விருப்பமில்லையடா உள்ள தைச் சொல்லு. நாங்கள் இவள நாளாக் கண்டதென்ன? அடிபட்டுக் கொண்டிருந்த நேரம் போலேயே அவைக்கும் குளிர்விட்டுப் போச்சு. இல்லாட்டி குஞ்சியப்பர் உந்தக்கதை கதைப்பரே, மாமன்காறன் யாழ்ப்பாணம் பிடிச்சனெண்டு பெரிசா பரிசளிப்புகளெல்லாங் குடுத்து பாராட்டி இப்ப கோட்டுப் படியேற வச்சா சரியில்லயெண்டுதானே எலிகப்பரில கோட்டுக்கு வாறாராம். மெல்லக் காதைக் கொண்டா...எட கிட்டவா சொல்ல... சனாதிபதிக்கொரு தனியதிகாரமிருக்காமடா, குற்றஞ்சாட்டினவற்ற வழக்க நிப்பாட்டியும் வைக்கலாமாம். நினைச்சா மன்னிப்பு குடுக்கலாமாம்•வழக்க நடக்காமலும்... பண்ணலாமாம். அதோட தம்பியும் இப்ப பெரிய எதிர் பார்ப்போட அங்கால இஞ்சால தாவாம அக்காவின்ர காலடியில நிக்கிறான் கண்டியோ. இதெல்லாம் போட்டு நிரப்பித்தான் கதிர்காமக் குஞ்சியப்பு உந்தக் கதை சொல்லியிருக்கிறார். பின்ன இண்டைக்கு நேத்தே உது. அம்மா ஒருகதை, வெளிநாட்டு அமைச்சர் ஒருகதை. மாமா ஒருகதை, பின்னால தம்பி ஒருகதை, என்ன நடக்குது. ஆயிரந்தலை வாங்கி அபூர்வ சிந்தாமணி சந்திரலேகாச் சண்டிராணி- லேசில போகமாட்டா பொடியா நாங்கள் தான் அனுப்ப வேணும்- என்ன நான் சொல்லறது...

# நறுக்கென...

## சொர்க்கத்தை நரகமாக்குவோர்கள்



இப்போது சிறிலங்காவில் நடப்பது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியென எவரும் நம்பினால் பாவம் அவர் அரசியல் நிலை அறியாத அசடாக இருப்பார்.

இன்று அங்கு நடப்பது ஜே.வி.பியினரின் ஆட்சியே...

பெயருக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாக சந்திரிகா அம்மையார் பதவிக் கதிரையில் பவிசாக அமர்ந்திருந்தாலும், அவரையே மிரட்டி அச்சுறுத்தும் அதிகாரம் படைத்தவராக ஜே.வி.பியின் சோமவன்ஸ அமரசிங்க என்ற அரசியல் அலம்பல் பேர்வழியே இருக்கிறார்.

பிரதமர் என்ற பெயருக்கு கதிரையில் அந்த அடர் மீசைக்காரரான மகிந்த ராஜபக்ஷ தோழில் துண்டுடன் அமர்ந்திருந்தாலும் அவரை வாயடைக்க வைத்து விட்டு ஆட்சி செய்பவராக அந்தத் தாடிக்கார விமல் வீரவன்ஸவே இயங்குகிறார்.

அரசில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரின் 'சுதந்திரம்' என்பது முற்றாக முடக்கப்பட்டு ஓராண்டாகப் போகிறது.

இந்த ஓராண்டு காலத்தில் அரசும், சனாதிபதியும், பிரதமரும் ஆட்சியை அமைத்து கூட்டாணிக் குழுக்களும் (இவைகளை கட்சிகள் என்று கூற முடியாது) தங்களுக்குத் தாங்களே அறிக்கைகளையும் மறுப்பறிக்கைகளையும் விடுத்துவருவதைத் தவிர வேறொன்றையும் சாதித்ததாக இல்லை....

ஐந்து சதத்திற்கும் பெறுமதியில்லாதவர் என்று தனது தோழர்களாலேயே அவமான முறையில் வர்ணிக்கப்பட்ட பின்னரும் 'ரோஷ'மற்று இருக்கும் சனாதிபதி...

'கெற்அவுட்' (வெளியாலை போ) என்று வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் அதே தொனிப்பட 'விருப்பமில்லாவிட்டால் வெளியே போகலாம்' என்று அம்மணியார் கூறிய பின்னரும் வெட்கங்கெட்ட பதவிக் கதிரைகளில் ஒட்டிக்கொண்டு அதிகாரம் காட்ட முனையும் ஜே.வி.பியினரும்...

இரு தரப்புக்கும் பிரச்சினை ஏற்பட்டு ஆட்சி கலைந்தால் தனது பதவியும் பறந்துவிடும் என்ற பீதியில் இரு தரப்பினரதும் 'திட்டை' வாங்கிக்கொண்டும் ஓடித்திரியும் கதிர்காமக் கோமாளியும்....

சிறிலங்காவில் பதவிப்பதர்களாகவே பவனி வந்துகொண்டிருக்கையில், பாவம் நாட்டு மக்கள் இவர்களுக்கு வாக்களித்த குற்றத்துக்காக வருந்திக்கொண்டிருக்கிறார்கள்....

-அரசு நிதிக்காக உலகெல்லாம் பிச்சை எடுக்கிறது.

-மக்கள் நிவாரணத்திற்காக அலைகிறார்கள்...

-அமைச்சர்கள் நிவாரணத்தையே அரசியலாக்குகிறார்கள்.

-சர்வதேசம் சமாதானத்தைப் பற்றி வலியுறுத்துகிறது.

-சமாதானமோ சாகும் தறுவாயில் சேடமிழுத்துக் கொண்டிருக்கிறது.

-இதற்கிடையே சுனாமியின் அச்சுறுத்தல் வேறு...

இன்னொரு சுனாமி வந்தால் எல்லாப்பிரச்சினைகளையும் இன்னும் கொஞ்சக்காலம் இழுத்தடிக்கலாம் என்ற 'கனவில்' சனாதிபதியின் குறட்டை ஓங்கி ஒலிக்க...

-கிழக்கின் சொர்க்கம் நரகமாகிக்கொண்டிருக்கிறது.

## ஹக்கீமின் சீற்றம்..., சில வார்த்தைகள்



கடைசியில் ரவூப் ஹக்கீம் ஐயாவுக்கும் ரோஷம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது பாருங்கோ...!

' முஸ்லிம் மக்களின் பாரம்பரிய வாழ்விடப் பிரதேங்களில் விகாரைகளை அமைக்கும் நடவடிக்கைகள் தொடருமானால் பெரும் இனக்கலவரம் வெடிக்கும் என அறை கூவல் விடுத்தே விட்டார்.

இனியென்ன, அவர் முஸ்லிம் மக்களை அணிதிரட்டி பேரினவாதிகளுக்கு எதிராக பௌத்த மத ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக பெரும் போருக்குத் தயாராகிவிடுவார் என்றா எண்ணுகிறீர்கள்....?

பேரினவாத தலைமைகளுடன் அதிகாரத்திற்கும், பதவிக்கும் சமரசம் பேசி கூட்டு வைத்துக்கொண்டு அரசியல் பண்ணுவோரால் அவர்களுக்கெதிராக அறிக்கைகளை விடத்தான் முடியுமே தவிர பேராட முடியாது.

அது தங்களது அரசியல் எதிர்காலத்திற்கு ஆபத்தாகிவிடும் என்பதில் அவர்கள் எச்சரிக்கையாகவே உள்ளார்கள்.

இஸ்லாமிய தமிழ் மக்களை பல்வேறு கட்சிகளாக பிரித்து அவர்களின் ஒரு மித்த பலத்தை சிதைத்து, ஒருமித்த குரலை ஒடுக்கி சுய அரசியல் இலக்குகளை எட்ட முஸ்லிம் தலைவர்கள் காலம் காலமாக செயற்பட்டு வந்தாலேயே சலுகைகளுக்காக பேரினவாதிகளின் பின்னால் அலைந்து திரியும் இனமாக தனித்துவம் மிக்க இஸ்லாமிய தமிழர்களை தம்மிஷ்டத்திற்கு ஆட்டிப்படைக்கலாம் என சிங்களத்தலைமைகள் தீர்மானமெடுத்துவிட்டார்கள்.

இப்போதும் கூட ஹக்கீமுடன் சேர்ந்து பேரியல் அஷ்ரப் சதாவுல் சேகுஇஸ்ஸதீன் என அனைவரும் குரல் கொடுத்திருந்தால் அதற்கு அர்த்தமிதுவாகும்...

-ஹக்கீம் எதிர்க்கட்சியுடன் இருப்பதால் குரல் கொடுத்துள்ளார்.

-மற்றவர்கள் ஆளும் கட்சியுடன் ஒண்டிக்கொண்டிருப்பதால் அடங்கிப் போய் மௌனம் காக்கிறார்கள்.

- அவ்வளவுதான்.

ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுதல் அவசியம்.

பேரினவாதிகள், பௌத்த சிங்கள இனத்தவர்களால் ஆளப்படும் இனமாகவே.... அவர்களிடம் சலுகை பெற்று உரிமைகளை மறந்துவிடும் இனமாகவே சிறுபான்மை இனத்தவரை அதாவது தமிழ் பேசும் மக்களை வரையறை செய்து வைத்துள்ளார்கள் என்பதே அதுவாகும்.

தமிழர்கள் என்னும் போது அது இஸ்லாமிய தமிழர்கள், மலையகத்தமிழர்கள் அனைவரையும் உள்ளடக்கும் என்பதை கருத்தில் கொள்ளல் அவசியம். சிறுபான்மை மக்கள் தமது தனித்துவத்தை பேரினவாதிகளுக்கு முண்டு கொடுத்துக்கொண்டு நிலைநாட்ட முடியாது என்பதை ஹக்கீம், தொண்டமான் போன்றவர்கள் புரிந்துகொள்வது அவசியமாகும்.

அவர்கள் அமைச்சர்கள் ஆகலாம் அதிகாரத்திலும் இருக்கலாம்.

ஆனால் அவர்களின் பின்னால் அவர்களை நம்பி அணிதிரளும் மக்களை பேரினவாதிகள் அடிமைகளாகவே கருதுகிறார்கள் என்பதை புரிந்துகொண்டால் சரிதான்....

## கதிர்காமர்-சங்கரியார் சபாஷ் சரியான போட்டி



"சபாஷ் சரியான போட்டி....!"

என்னபோட்டி...? யாருக்குள் போட்டி.....? எதற்காகப் போட்டி....? என்று கேட்கிறீர்களா?

தமிழின விரோதிகளில் யார் அதிமோசமான துரோகிகள் என்பதை நிரூபிப்பதற்கான போட்டியைத்தான் குறிப்பிடுகிறேன்.

ஏற்கெனவே இந்தியப்படைக்கு முன்னரான காலத்துத் துரோகிகள், பின்னரான காலத்துத் துரோகிகள் என ஒரு நீண்ட பட்டியலேயுண்டு.

எதிரிகளுக்கும், ஆக்கிரமிப்பாளர்களுக்கும் எடுபிடிகளாகி சலுகைகள் பெற்று கைகட்டிச்சேவகஞ் செய்து அவமானங்களை பட்டயங்களாக்கி அநாமதேயங்களாக்கி அழிந்தவர்களுமுண்டு, அடிமைகளாக சுயமிழந்து வாழ்வோர்களுமுண்டு... அவர்களுக்குள்ளும் யார் எஜமான விசுவாசிகளில் சிறந்தவர் என நிரூபிப்பதற்கான போட்டிகளும் இருந்ததுண்டு....

முகமழிந்து முகவரியற்றுப் போனவர்களை நினைவூட்டுதல் அசிங்கம். இப்போது இந்தப் போட்டியில் கடுமையாக களத்தில் இறங்கியுள்ளவர்கள் வேறு யாருமல்ல.... கதிர்காமரும் சங்கரியாரும் தான்...

அண்மைக்காலமாக இருவரும் அடிக்கும் அறிக்கை லூட்டிகளில் ஒருவரை ஒருவர் மிஞ்சும் வகையில் முத்திரை பதிப்பது முக்கியமான விடயம். கடந்த தேர்தலில் 'கட்டிய கோவணத்துடன்' மக்களால் நிராகரிக்கப்பட்டு தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து ஓட ஓட விரட்டப்பட்ட ஆனந்த சங்கரியாருக்கு புகலிடம் பேரினவாதிகளின் திண்ணையாகிவிட்டது.

சங்கரியார் மீது அனுதாபம் காட்டி அவரின் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான பணியைக் கௌரவித்து அவருக்கு தேசியப்பட்டியலில் உறுப்பினர் பதவி வழங்கவேண்டுமென கூறியது ஹெல உறுமய குழுவேயாகும். அதனால் மெய்சிலிர்த்துப்போன சங்கரியார் தலைமழிக்காத ஆனந்த சங்கர தேரராகவே தன்னை நினைத்து செயற்படத் தொடங்கிவிட்டார் என்றே கூற வேண்டும்.

சிங்களப் பேரினவாதிகளினதும் அயலக உளவு அமைப்புகளிலும் கைக் கூலிகளாகிவிட்ட சங்கரியார், இப்போது கதிர்காமருக்குப் போட்டியாக அவரையே தூக்கிச் சாப்பிடும் வண்ணம் விடுதலைப்புலி எதிர்ப்பாளராக மட்டுமல்ல தமிழ்த் தேசிய எதிர்ப்பாளராகவும் தன்னை அடையாளப்படுத்தத் தொடங்கிவிட்டார்.

வாழ்க..!

"பொதுக்கட்டமைப்பு தேவையேயில்லை. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு அரசு எந்த உதவியையும் செய்ய வேண்டிய அவசியமே இல்லை..." என்று சங்கரதேரர்(!?) அறிவித்ததன் மூலம் ஐயா எங்கேயோ போய்விட்டார்.

இதற்கு மேல் என்ன சொல்வது எனத் தெரியாமல் கதிர்காமர் கதிகலங்கிப்போய் விட்டார் போலிருக்கிறது...

எல்லாம் அடுத்த தேர்தலில் தேசியப்பட்டியலில் இடம்பிடிக்கத்தான் பாருங்கோ..

பதவிப்பித்து தலைக்கேறிவிட்டால் தன்மானமாவது... இனமானமாவது...

## செய்திகள் சொல்லும் செய்தி..!



-மட்டக்களப்பு புலிபாய்ந்தகல் பகுதியில் இருபோராளி கள் வெட்டிக்கொலை.

-சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரின் தாக்குதலில் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் உட்பட பத்துப் பேர் படுகாயம்.

-வவுனியா அரசியல்துறை செயலகம் மீதான கைக்குண்டு வீச்சில் மூவர் படுகாயம்.

இந்த மூன்று செய்திகளும் சொல்லும் முக்கிய செய்தி ஒன்றுள்ளது. அதாவது படைத்தரப்பினரும் துணைப்படைக் கும்பல்களும், விடுதலைப்புலிகள் மீது வலிந்து ஒரு போரை தொடர்வதற்கான- விடுதலைப்புலிகளைப் போர்க்கோலம் கொள்ளவைப்பதற்கான திட்டமொன்றின் அடிப்படையில் நகர்வுகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர் என்பதே அதுவாகும்.

இந்தமாதிரியான நிகழ்வுகள் குறித்து அரசுக்கோ, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கோ முறைப்பாடுகளை மேற்கொள்வதில் எந்தவிதமான அர்த்தமும் இருக்கப்போவதில்லை என்பதை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கடந்த ஓராண்டுகால ஆட்சி தந்த அனுபவப்பாடங்கள் மிகத் தெளிவாகவே உணர்த்தி நிற்கின்றன.

படைத்தரப்பினரின் தொடர்ச்சியான யுத்த நிறுத்த மீறல்களும், கதிர்காமர் போன்றோரின் சர்வதேச மட்டத்திலான- சமாதான முயற்சிகளை அவமானப்படுத்தும் அல்லது அச்சப்படுத்தும் மூன்றாந்தர ராஜதந்திர நடவடிக்கைகளும், ஜே.வி.பியினரின் விஷமத்தனமான இனவாத பிரச்சாரங்களும், சனாதிபதியின் கண்ணியமற்ற முன்னுக்குப்பின் முரணான அறிக்கைகளும் சமாதானத்தின் எதிர்காலம் குறித்த தமிழ் மக்களின் சகல நம்பிக்கைகளையும் இழக்க வைத்துவிட்டது.

ஸ்திரத்தன்மையும், அரசியல் கொள்கை உறுதிப்பாடும், தேசநலனில் அக்கறையுமற்ற ஓர் அரசால் பொறுப்புணர்வுடன்- சமூக அக்கறையுடன்- மனித உரிமைகளுக்கும் மனிதாபிமானத்திற்கும் மதிப்பளித்து எதனையும் செய்யவே முடியாது என்பதற்கு ஐ.ம.சு. முன்னணி ஆட்சி ஒரு வெகுசிறப்பான உதாரணமாகும்.

பதவியையும் அதிகாரத்தையும் தக்கவைக்க எதனை வேண்டுமானாலும் (தனது கணவரைப்படுகொலை செய்தவர்கள் என்று தன்னால் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சாமரம் வீசுவதைக்கூட...) செய்யத்தயங்காத சனாதிபதி தனது நிறைவேற்று அதிகார பலத்தைக் கூட ஜே.வி.பி யினரின் காலடியில் சமர்ப்பித்துவிட்டு, படைத்தரப்பினரின் போர்நிறுத்த மீறல்களுக்கு மௌன அங்கீகாரம் அளித்து விட்டு தமிழ் ஆதயுதக் குழுக்களுக்கு 'அபயகரம் ' காட்டி கொண்டு கதிர்காமரின் பிதற்றல்களுக்கு பாராட்டுத் தெரிவித்துக் கொண்டு சமாதானப் பாடலைப்பாடுவதுதான் சுபஸ்வரமாக ஒலிக்கிறது.

இதனை சமாதான ஏற்பாட்டாளர்களும், அதனை வலியுறுத்தும் சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ளாமல் இருப்பது அவர்கள் மீதான தமிழ் மக்களின் எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் அவர்கள் இழப்பதற்கே வழிவகுத்து வருகிறது.

சரி முதலில் குறிப்பிட்ட செய்திகள் தொடர்பாக ஒரு சில வார்த்தைகள் அரசும் படைகளும் 'யுத்தம் சரணம் கச்சாமி' என்று உறுதியாகத் தீர்மானித்துவிட்ட நிலையிலேயே மேற்படி போர்நிறுத்த மீறல்களில் முனைப்புக்காட்டத் தொடங்கிவிட்டது என்றே தெளிவாக உணரக்கூடியதாக உள்ளது.....

'மா' புளிப்பது அப்பத்திற்கு நல்லது புரிகிறதா?

செங்குட்டுவன்

# ‘றோ’வும் ஈழத்தமிழர்களும்





றோவின் விரிவாக்கமே ஆய்வுக்கான அல்லது ஆராய்ச்சிக்கான நிலையம் எனப்பொருள்படுகின்றது. இந்தியா இன்று பரிணாம வளர்சி பெற்று வளர்ந்து வரும் நாடு நவீன உலகின் ஏட்டிக்குப் போட்டியாக வளர்ந்து வருகின்ற நாடு ஆகும். அதன் ஆய்வும் ஆராய்ச்சிகளும் புலிகள் விடயத்தில் பிசகியே விட்டன.

அந்தவகையில் உலகப் புகழ்பெற்ற புலனாய்வு நிறுவனங்களில் இந்தியா உளவுத் துறையும் முக்கிய இடம்பெற்றுள்ளது. றோவின் கரங்கள் உலகின் மூளை முடுக்கெல்லாம் நீண்டு வருகின்றன.

இந்திய வல்லரசின் அரசுக்குள் ஒரு சிற்றரசாகவும் வல்லரசாகவும் றோவின் அதிகாரிகள்தான் கொள்கை வகுப்பாளர்களாகவும் இந்தியாவின் நகர்வைத் தீர்மானிப்பவர்களாகவும் விஸ்வரூபமெடுத்திருக்கின்றார்கள்.

றோவின் ஆற்றல் அளப்பெரியதுதான். அதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. ஆனால் அதன் ஆற்றலும் பலனும் புலிகள் விடயத்தில் வெற்றிபெற்றுக் கொடுக்கவில்லை.

“இந்திய” உளவுத்துறை றோ காஷ்மீரில் கையாண்ட அதே புலனாய்வு உத்தியை தமிழீழத்தில் புலிகள் விடயத்தில் அச்சுப் பிசகாது அப்படியே கையாண்டது. காஷ்மீர் புரட்சியை அடக்கியது போல் ஈழத்துப் புரட்சியை அடக்கமுடியவில்லை அதனால் றோவின் திட்டம் அங்கே வென்றது இங்கே தோற்றது.

றோவின் முயற்சிகள் புலிகள் விடயத்தில் பலிக்காததற்குப் பலகாரணங்கள் உண்டு.

றோ ஈழத்தமிழர் விவகாரத்தில் மக்களின் உணர்வுகளையும் புலிகளின் பலத்தையும் மக்களுக்கும் புலிகளுக்கும் இடையிலான பாசப்பிணைப்பையும் சரியாக மதிப்பிடவில்லை.

தமிழருக்காக புலிகள் முன்னெடுக்கும் விடுதலைப் போராட்டம் தொடர்பாக றோ தகவல்களைச் சேகரித்து ஆய்வுக்கு உட்படுத்தி மதிப்பிட்டதில் கிடைத்த விடை தவறான முடிவாகும். இவ் தப்புக்கணக்கினால்தான் ஈழத் தமிழர்- இந்தியா உறவில் முரண்பாடுகள் முன்தோன்றின.

ஈழத் தமிழர் விவகாரத்தில் றோ தமிழ் மக்களின் உணர்வுகளைச் சரியாக புரிந்து கொள்வதாகத் தெரியவில்லை. யதார்த்தத்திற்கு முரணான கருத்துக்களையே கொண்டிருக்கின்றது.

இந்தியா இலங்கை அரசை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கும் அமெரிக்காவின் காலூன்றலைத் தடுப்பதற்கும் தமிழ் மக்களை பகடைக்காயாகப்பயன்படுத்துகின்றது. இவ் அருவெருப்பான அரசியல் புலனாய்வு சாணக்கியத்தை றோ கைவிடவேண்டும்.

இந்தியா இலங்கையில் காலூன்றுவதற்கும் உலக வல்லரசு நாடுகள் இலங்கையில் காலூன்றலைத் தடுப்பதற்குமான திட்டமாக பல நகர்வுகளை இந்தியா அரசும் றோவும் மேற்கொண்டு வருகின்றன.

ஒரு புறம் புலனாய்வு ரீதியாக சதி வேலையிலும் நாச வேலைகளிலும் ஈடுபட்டிருக்கின்றது. மறுபுறம் இராணுவ ரீதியில் 1987- நேரடியாகவும் அதற்கு முன்னும் பின்னும் மறைமுகமாகவும் ஈடுபட்டது.

இன்னுமொருபுறம் அரசியல் விவகாரத்தில் தலையிடுகின்றது. தமிழருக்கு அல்லது புலிகளுக்கு எவ்வளவு உரிமை வழங்கவேண்டும் எனத் தீர்மானிப்பது இலங்கை அரசு மட்டுமல்ல அது றோவின் விருப்பு வெறுப்புகளும் அங்கம் பெறவேண்டுமென விரும்புகிறது. அதில் பங்கு வகிக்க றோ பிரியத்தனப்படுகின்றது. இந்தியாவின் மானில அரச அதிகாரத்தை மிஞ்சி இங்கு எதனை வழங்கினாலும் றோ அதனைத் தடுக்கும் முயற்சியிலீடுபடவிரும்புகிறது. இது அண்மைக்காலங்களில் நடந்தேறியுள்ளன. தமிழரின் உரிமைகளைத் தட்டிக்கழிக்க இலங்கையரசு இந்தியாவின் தயவை நாடுவதும் வழக்கமாகி விட்டது.

மற்றொரு புறமாக பொருளாதார ரீதியிலும் ஆதிக்கத்தை செலுத்த றோ முனைகின்றது. அதன் ஒரு வடிவம் தான் சுனாமி மீட்புப்பணியில் அமெரிக்காவுக்கு ஏட்டிக்குப் போட்டியாக இந்தியா இலங்கை மீது கொண்ட கரிசனையாகும்.

இவ்வாறான பல்வேறு வடிவங்களில் றோவின் கரங்கள் இங்கு நீளுகின்றன. ஆனால், இந்தியா அரசியல் புலனாய்வு வட்டாரங்களுக்கு இதுவரை எதிலும் எதிர்பார்த்த பயன் கிடைக்கவில்லை.

இலங்கை அரசிற்கு உதவுவது போல் நடிப்பதற்கு றோ இன்று கருணாவையும் துரோகப் பங்குச்சந்தையில் விடப்பட்ட ஏலத்தில் ஒரு பங்கைப் பெற்றுப் பயனடைய முயற்சிக்கின்றது. இவ்வாறாக புலிகளை பலவீனப்படுத்த பல்வேறு வடிவங்களிலும் முயற்சி செய்கின்றது ஆயினும் புலிகளின் பரிணாம வளர்ச்சியை றோவால் தடுக்கவும் முடியவில்லை. அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற எதிரி நாடுகளின் இலங்கை மீதான காலூன்றலைத் தடுக்கவும் முடியவில்லை.

எல்லாக் காலங்களிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை கையாள்வதற்கு றோ போட்ட திட்டங்கள் தோல்வியிலேயே முடிவடைந்தன. இதற்குக்காரணம் புலிகள் தொடர்பான றோவின் தவறான மதிப்பீடுகளும் தப்புக்கணக்குகளும்தான் காரணமாகும்.

ஆனால் புலிப்படையினை றோ தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு இவ்வளவுக்கு கஸ்ரப்பட்டிருக் கத்தேவையில்லை.

வஞ்சகத்தின் குறுக்குவழியை விடுத்து தமிழர் இனப்பிரச்சினை விடயத்தில் நேர்மையான வழியிலும் நீதியான முறையிலும் அணுகியிருந்தால் இந்தியா புலிகள் உறவு சுமுகமாக இருந்திருக்கும். இந்தியாவே முதலில் வஞ்சக வழியில் காலடி எடுத்து வைத்தது. அதனாலேயே இன்றும் சந்தேகப்பார்வை தொடர்கின்றது.

இவ்வாறான நிலையில் இந்தியா தனது கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் இந்தியாவைத் தமிழர்கள் தாய் நாடு எனவும் தந்தை நாடு எனவும் கூறும் வழக்கம் இன்றும் உள்ளது. இந்தியாவின் பெரும் தலைவர்களா தமிழர்களா அடியொற்றி அவர்களைப் பின்பற்றி வரும் பழக்கம் ஈழத் தமிழர்களிடம் இன்றும் உள்ளது. அவ்வாறான ஈழத்தமிழர்களை இந்தியா காலில் போட்டு மிதிக்க முயல்வது நல்லது அல்ல.

ஆனால் சிங்கள தேசம் அப்படியல்ல இலங்கை அரசு இரட்டைவேடம் போடுகின்றது. இது சுனாமிப் படை நகர்தலில் தெளிவாக புரிந்துகொள்ளலாம்.

அதன் இன்னொரு கட்டமே இந்தியப் படை இலங்கையில் குடியிருக்க J.R. ஜெயவர்த்தனா வாவென வரவும் பிரேமதாசா போவெனப் போனதும் அதற்கு இந்தியப் படையினை அடித்து விரட்ட புலிகளுக்கு ஆயுதம் கொடுத்ததும் அதன் மூலம் சிங்கள தேசம் இந்தியவை எப்படி கேவலப்படுத்தி அவமானப்படுத்தியது என்பதனை றோ மறந்துவிடக்கூடாது, இதுவும் றோவின் ஆய்வுக்கும் மதிப்பீட்டிற்கும் கிடைத்த தோல்வியே ஆகும்.

தமிழீழம் சுதந்திரமடைவதை றோ விரும்பவில்லை. அதனாலேயே தமிழ் இயக்கங்களைப் பிரித்தாளுவதற்கு றோ படாதபாடு பட்டது. இந்தியாத்தலைவர்கள் சிலர் தமிழர் இயக்கங்களை ஐக்கியப்படுத்தி தமிழர் விடுதலையை வேகப்படுத்த முயற்சித்தபோதும் றோ அதனை விரும்பவில்லை. இவ்விடயத்தில் றோ புலனாய்வுத் தந்திரத்தையே கடைப்பிடித்தது.

உண்மையான தேசப்பற்றும் கொள்கைப் பற்றுமுடைய விடுதலைப்புலிகள் இயக்கத்தை அழித்துவிடவேண்டும் என்பதிலும் தெளிவான கொள்கையற்ற இயக்கங்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்பதிலும் றோ விடாப்பிடியாக முயன்றது.

றோவின் அந்த முயற்சி வென்றபாடாகவும் இல்லை. அதில் றோ நின்றபாடாகவும் இல்லை. அதற்குக்காரணம் றோவின் புலிகள் தொடர்பான தவறான மதிப்பீடுகளே காரணமாகும்.

கடந்த கால கசப்புணர்வுகளை மறப்போம். இனிவரும் காலத்தில் புதிய உறவை கட்டியெழுப்புவோம், புலிகள் இயக்கம் இந்தியாவின் அரசியல் பிராந்திய நலன்களுக்கு எதிரானவர்கள் அல்ல. மத்திய அரசுடனும் தமிழ் நாட்டு அரசுடனும் அன்புறவாகவே வாழவிரும்புகின்றனர். தமிழர்களை நிம்மதியாக சுதந்திரமாக வாழவிடுங்கள் என்றுதான் கேட்கின்றனர்.

புலிகள் இந்தியாவுடன் முரண்பட விரும்பவில்லை, இந்தியாதான் புலிகளுடன் முரண்பட்டுக் கொண்டிருக்கின்றது. இலங்கைக் கடற்படையுடன் இந்தியாக் கடற்படை இணைந்து கூட்டுப்பயிற்சியிலும் கூட்டு நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றது. இவ்வாறாக புலிகளை அச்சுறுத்துவதும் முரண்நிலையினை தோற்றுவித்த வண்ணமுள்ளது. இந்தியா கடற்புலிகளால் தமக்கு ஆபத்து என்று பூச்சாண்டி காட்டுகின்றது.

இந்தியாவுக்கு மிகவும் பலம் பொருந்திய மிகவும் பெரிய எதிரியாக பாகிஸ்தானும் சீனப்பேரரசும் அருகிலிருக்க புலிப்படை தனது பிராந்திய நலனுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றது எனக் கருதுவதும் கூச்சலிடுவதும் வேடிக்கையாகவேயுள்ளது.

றோவின் உளவறிஞர்களும் கொள்கை வகுப்பாளர்களும் ஈழத்தமிழர்களின் உள்ளத்து உணர்வுகளைச் சரியாக நாடி பிடித்துப்பார்த்துப் புரிந்து கொள்ள வேண்டும்.


ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் வாழ்வதற்கு நம்பிக்கையினை இந்தியா கட்டி வளர்க்க வேண்டும். சீரழிந்து போயிருக்கும் இந்தியா ஈழத்தமிழர் உறவினை மீண்டும் கட்டி வளர்க்க இந்திய அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும்.

ஆகவே பாரத தேசம் ஈழத்தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பான தனது கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

**ச.சங்கரன்**

---

## நெஞ்சு... பொறுக்குதில்லை...!



முகமாலையிலிருந்து பரந்தன் வந்து அங்கிருந்து புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம் சென்று அவ்விடத்திலிருந்து முல்லைத்தீவுக்கு அந்தப் பேருந்து செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்தது.

அப்போது நேரம் பிற்பகல் 2.30 மணி ஆலயத்திற்குச் செல்வதற்கென பரந்தன் பேருந்து தரிப்பிடத்தில் பெருமளவான பக்தர்கள் காத்திருந்தனர்.

ஏற்கனவே பெருமளவு பயணிகளை முகமாலையில் இருந்து ஏற்றிக்கொண்டு அந்தப் பேருந்து வந்திருந்தது.

பரந்தனில் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் உட்பட பெருமளவாக காத்திருந்த பயணிகள் அப்பேருந்தில் ஏறிக்கொண்டனர். கால் வைப்பதற்குக் கூட இடம் இல்லை. அவ்வளவு பயணிகள். ஆண்களில் பெரும்பாலானவர்கள் மிதி பலகையில் நின்றே பயணம் செய்ய வேண்டியிருந்தது. சரி அடுத்த பேருந்தில் செல்லலாம் என்றால் அன்றையதினம் சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சகல பேருந்துகளுமே நிரம்பி வழிந்து கொண்டிருக்கும் பயணிகளுடனேயே வந்து கொண்டிருந்தது.

இதனாலேயே வழமைக்கு மாறாக அன்றையதினம் பேருந்துகள் நிரம்பி வழிந்தன. போக்குவரத்து சேவையினரால் விசேடமாக ஆலயத்திற்காக போக்குவரத்து சேவைகள் நடத்தப்பட்டாலும் பயணிகள் தொகை சகல பேருந்துகளிலும் அதிகரித்தே காணப்பட்டது.

இந்த நிலையில் பரந்தனில் இருந்து புறப்பட்ட அந்தப் பேருந்தும் முடிந்தளவு தன்னால் கொண்டு செல்லக்கூடிய அளவு பயணிகளை ஏற்றிக்கொண்டு பரந்தனிலிருந்து முல்லை வீதியில் சென்றுகொண்டிருந்தது. முரசுமோட்டை இரண்டாம் கட்டைப்பகுதியில் பயணி ஒருவர் தனது இடத்தில் இறங்கவேண்டி இருந்தது. அப்பயணியோ பேருந்தின் நடுப்பகுதியில் நின்றுகொண்டிருந்தார்.

கிட்டத்தட்ட பத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பேருந்தில் இருந்து இறங்கி அப்பயணி இலகுவாக இறங்க வழிவிட்டனர்.

அவ்வாறு கீழிறங்கிய பயணிகளில் ஐம்பது வயது மதிக்கத்தக்க அம்மா ஒருவரும் பதின்மூன்று வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவனும் இருந்தனர்.

குறிப்பிட்ட பயணி அவ்விடத்தில் இறங்கியதும் கீழிறங்கி நின்ற பயணிகள் தமது பயணத்தைத் தொடர பேருந்தில் ஏறிக்கொண்டனர்.

அப்போது அந்த பதின்மூன்று வயதுச் சிறுவன் “அம்மா என்னை கீழே தள்ளிவிட்டு விட்டு உங்களால் செல்ல முடியுமா?” என்று கேட்டான்.

அப்போது அங்குநின்ற எல்லோரும் சிறுவனை திரும்பிப் பார்த்தனர். “இந்த அம்மா என்னை பஸ்ஸில் இருந்து கீழே தள்ளிவிட்டு விடுவாராம். நாங்கள் எல்லோரும் இந்த பஸ்ஸில் எவ்வளவு நெருக்கடியுடன் பயணம் செய்கிறோம். அதை புரிந்து கொள்ளாமல் நான் அவரை நெருக்குவதாகக் கூறி அந்த அம்மா என்னை கீழே தள்ளிவிட்டு விடுவேன் என்று கூறுகின்றார். இது சரியா?” என்று அங்கிருந்தவர்களை பார்த்துக் கேட்டான்.

அங்கிருந்தவர்களால் திருப்பி பதில் எதுவும் கூற முடியவில்லை.

அதில் நின்ற பெரியவர் ஒருவர் சிறுவனை அன்பாகத் தடவி தம்பி “அம்மா தவறுதலாகச் சொல்லி விட்டார் கோபித்துக் கொள்ளவேண்டாம்” என்று கூறினார். ஆனால் சிறுவனின் கோபம் அடங்குவதாக இல்லை. “கீழே விழுந்து நான் செத்தால் என்ன நடந் திருக்கும் என்று தெரியுமோ” “என்று திருப்பிக் கேட்டன்”

ஆயினும் அங்கிருந்தவர்களின் அன்பான கதைகளினால் சிறுவனின் கோபத்தை ஓரளவு சமாளிக்க முடிந்தது.

சிறுவனும் அமைதியாகப் பயணம் செய்தான். சிறுவர்களாயினும் அவர்களின் நிலையறிந்து பெரியவர்கள் செயற்படாது விட்டால் இவ்வாறான பிரச்சினைகள் பொதுவான இடங்களில் தவிர்க்க முடியாததாகவே போகும்.

**சிவியா**

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 01 . 04 . 2005
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# எதுவரை தொடரும்...!

போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதுமான தாக்குதல்கள் தொடர்ந்தவண்ணமேயுள்ளது.

கடந்த வாரங்களில் கிழக்கிலும் வடக்கிலுமாக புலிகள் இயக்கத்தின் அரசியல் அலுவலகங்கள் மற்றும் போராளிகள் மீதான தாக்குதல்கள் என்பன எல்லை கடந்தவையாகவுள்ளன.

போராளிகளைத் தாக்குவதற்கு தயாராக படைத்தரப்பு குண்டர்களைப்போல பொல்லுகளோடு காத்திருந்து அரசியல் வேலைகளை மேற்கொள்ளும் போராளிகளை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தாக்குவதும் அரசியல் பணிமனைகள் மீது குண்டுத்தாக்குதல்களை மேற்கொள்வதுமென புரிந்துணர்வு உடன்படிக்கையினை மீறிய செயற்பாடுகளில் அரச படையினர் ஈடுபட்டுவரு கின்றனர்.

மேலும் அரச படையினர் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் இராணுவத்துணைப்படை முகாம்களை நிறுவி புலிகள் இயக்க பிரதேசத் தலைவர்களையும், போராளிகளையும் இலக்கு வைத்து கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்குள்ளும் வெளியிலுமாக தனது இராணுவ நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

அரச படையினரின் இந்த நடவடிக்கையானது புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட காலந்தொட்டு தொடர்ந்து நீட்சிப்பெற்றுவருவதையே காணமுடிகிறது.

அரசின் இந்த செயற்பாட்டை புலிகளும், மக்களும், சர்வ தேச அமைப்புகள் மற்றும் நாடுகள் என்பன கண்டித்தபோதும் அரசு இந்த செயற்பாட்டை நிறுத்தியதாக இல்லை.

காரணம், அரசு இத்தகைய செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்களின் சீர்கெட்ட இயல்பு வாழ்வையும் அரசியல் ஸ்திரத் தன்மையற்ற ஒரு நிலையையும் தோற்றுவித்து புரிந்தணர்வு உடன்படிக்கையினை ஒரு மிதப்பு நிலையில் வைத்திருக்க முயற்சிக்கிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதன் பின்னர் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்தநிறுத்த மீறல்கள் அதிகரித்த வண்ணமேயுள்ளது.

ஆயினும் புரிந்துணர்வு உடன்படிக்கையானது மூன்றாண்டுகள் கடந்து செவ்வனே செல்கிறது.

இதற்கு புலிகள் காட்டிவரும் அசாதாரணபொறுமையும் சமாதான முயற்சி மூலமாக தமிழ்மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்ற செயற்பாடுமேயாகும்.

சுருங்கக் கூறின் புலிகளின் பொறுமையால் புரிந்துணர்வு உடன்படிக்கையானது பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இறுதியாக கிழக்கில் குயிலின்பன் மற்றும் போராளிகள் மீதான தாக்குதல், இரண்டு போராளிகளை வெட்டிக்கொன்றமை, வவுனியாவில் புலிகளின் அலுவலகம் மீதான தாக்குதல் என புலிகள் இயக்கத்துக்கு எதிரான நடவடிக்கையின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

ஆயினும் புலிகள் பொறுமை காக்கின்றனர். இந்த பொறுமையும் விட்டுக்கொடுப்பும் என்பது தமிழ் மக்களின் விடுதலை தொடர்பாக புலிகளின் கொள்கையில் எந்த சோதனையும் ஏற்படுத்தாதவரை மட்டுமே.

இதிலும் கீறல்கள் ஏற்படுத்த முயற்சிக்கப்படுமாயின் இந்த இலங்கைத்தீவு என்றோ ஒருநாள் இரண்டு நாடுகளாக உருவாவதைத் தவிர்க்கமுடியாத ஒரு கட்டத்தை விரைந்து முன்னுக்கு கொண்டுவருவதாகவே அமையும்.

அரசு தொடர்ந்து புலிகள் மீதான தாக்குதல்களை மேற்கொண்டு இத்தகையதொரு நடவடிக்கையை முன்னுக்கு கொண்டு வரும் ஒரு நிலையைத்தான் உருவாக்கி வருகிறது.

புலிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைப் பொறுத்த வரை கண்காணிப்புக்குழுவால் இதனை கண்காணிக்க மட்டுமே முடிகிறது. அதற்கு அப்பால் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க முடியாத அளவுக்கு அதன் அதிகாரங்கள் வரையறை செய்வனவாக உள்ளது.

அதிலும் கண்காணிப்புக்குழு தனது செயற்பாடுகளில் அதிக வினைத்திறனுடன் செயற்படுகிறதா என்ற ஐயங்களும் எழவே செய்கிறது.

காரணம் புலிகள் இயக்க போராளிகள் மீதும், மக்கள் மீதும் அரச படைகள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் தொடர்பான கண்காணிப்புக்குழுவின் அறிக்கைகள் உரிய முறையில் அமைவதாக இல்லை.

இந்த நிலையில் உறங்கும் ஒரு அபாய மேடையின் மேல் தொடர்ந்தும் சமாதான முயற்சி வைக்கப்பட்டுள்ளது.

# திங்கள் நள்ளிரவு இலங்கை விழித்ததா..?

இந்த வாரம் திங்கள் நள்ளிரவு முழு இலங்கைத் தீவு உட்பட ஆசிய கண்டம் எங்கும் விழித்துக்கொண்டது.

இந்தோனேசியா சுமாத்திரா கடலடியில் ஏற்பட்ட எட்டு தசம் ஏழு ரிச்டர் அளவு நில அதிர்வே முழு ஆசியாவையும் விழிக்கச்செய்தது.

கடலில் கடற்படையினரின் அபாய சங்கொலிகள் எங்கும் எதிரொலித்தன தொலைக்காட்சியிலும் வனொலிகளிலும் நாட்டின் தலைவர்கள் தோன்றி அபாய எச்சரிக்கைகளை விடுத்தவண்ணமிருந்தனர்.



ஆனால் மீண்டும் சுனாமி ஏற்படவில்லை அச்சத்தால் நசியுண்டு கிழக்கில் நான்கு உயிர்கள் காவுகொள்ளப்பட்டது.

உண்மையில் இலங்கைத் தீவு கடந்த திங்கள் நள்ளிரவு விழித்துக் கொண்டதா? இல்லவே இல்லை. இலங்கைத்தீவு விழிக்கு மானால் திங்கள் நள்ளிரவுக்கு பின்னரான காலப்பகுதியில் இலங்கையில் பல மாற்றங்களுக்கான அடியெடுப்புக்கள் முன் வைக்கப் பட்டிருக்கும். ஆனால் இலங்கையில் அப்படியெதுவுமே நடைபெறவில்லை.

தூங்கியவனை எழுப்பலாம் ஆனால் தூங்குபவன் போல நடிப்பவனை ஒரு போதும் எழுப்பவே முடியாது.

இப்படியானதுதான் இலங்கைத்தீவின் அரசியல் தலைவர்களின் நிலையும்.

ஏனென்றால் திங்கள் நள்ளிரவில் தாங்கள் விழித்துக் கொண்டதுபோல இந்த அரசு தலைவர்கள் தொலைக்காட்சியிலும், வானொலியும் கணக் கச்சிதமாக மக்களுக்கு நடித்துக்காட்டினார்கள்.

இந்த நடிகர்களின் நாடகம் மக்களுக்கு ஏற்படக்கூடிய அழிவிலிருந்து அவர்களை காப்பாற்றுவது என்பதாகவே இருந்தது.

ஆனால் இந்த நில அதிர்வு கிடையச்சாக அதிர்ந்த அளவுக்கு நிலைக்குத்தாக அசையாததினால் எந்த சுனாமிப் பேரலையும் எழவில்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

இந்த கிடையச்சும் நிலைக்குத்தச்சும் அசையும் அசையாமலும் விடும்.

இது அரசியலுக்கும் பொருந்தும்.

ஆனால் இந்த சுனாமி அழிவு என்பதிலிருந்து மக்களை காப்பாற்றுவதில் விழித்துக் கொண்டவர்கள் போல தங்களைக் காட்டிக் கொண்ட இலங்கையின் அரசியல் தலைவர்கள் ஏனோ ஒரு யுத்த அழிவிலிருந்தும் தங்களின் புறமொதுக்களின் விளைவால் ஏற்படும் அழிவிலிருந்தும் நாட்டு மக்களை காப்பாற்ற விழித்துக் கொள்ள மறுக்கின்றார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படு வதற்கு முன்னர் இந்த இலங்கைத்தீவில் நிலைக்குத் தசைவு யுத்தமொன்று நடைபெற்றது. இதனால் நாட்டில் பெரும் உயிரழிவும் சொத்தழிவும் ஏற்பட்டது.

இதனை நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கையின் மூலம் புரிந்துணர்வு உடன் படிக்கையினை தோற்றுவித்து மூன்றாண்டுகள் கடந்து அது வேகநடை போட்டபோதும் எந்த நம்பிக்கையும் மெய்யாக்கப்படவில்லை.

யுத்தத்தின் அழிவுகளை நினைவுகளை புள்ளிவிபரங்களாகவும் பணப்பெறுமதிகளாகவும் மீண்டும் இலங்கையை கட்டியெழுப்புவோம் என்ற பொதிக்குள் போட்டு மக்களின் முதுகில் சுமக்க விட்டு வேடிக்கை பார்க்கிறது அரசு.

ஆனால் மக்கள் இன்னும் சிலுவை சுமப்பாளர்களாக உலகின் முன் காட்சிப் பொருளாக்கப் பட்டுள்ளனர்.

இந்த அவல வாழ்வைதான் வடகிழக்கு தமிழ் மக்கள் இந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வரும் துயர்மிகுவாழ்வு,

போரின் துயரத்தில்தான் சிங்கள தேசம் தனக்கு பங்கு கேட்கிறது 'என்றால் இப்போது சுனாமிபேரழிவால் ஏற்பட்ட இந்த இயற்கை அழிவாலும் தனக்கு பங்கு கேட்கும் ஒரு கேவல நிலை இலங்கையில் நடக்கிறது.

இந்த நிலையில் தான் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உருப்படியான உதவிகளை வழங்க புலிகள் இயக்கம் முன்வைத்த பொதுக்கட்ட மைப்புத்திட்டம் இன்னமும் நோர்வே-புலிகள்-அரசு என பயணம் செய்கிறது. ஆனால் எந்த பொதுக்கட்டமைப்பும் வரவில்லை.

**சிறி .இந்திரகுமார்**

ஒருவேளை திங்கள் நள்ளிரவும் ஒரு சுனாமி பேரலை ஏற்பட்டிருக்குமானால் இது சுனாமி இரண்டு என பெயர் பெற்றிருக்கும் இதற்கும் தமிழ் மக்கள் பொதுக்கட்டமைப்பு இரண்டு என ஒரு திட்டத்தை முன் வைத்திருக்க வேண்டியிருக்கும்.

ஆனால் எந்த திட்டத்தின் பலனும் வந்து சேர்வதாக இல்லை இதனை வந்து சேர அரசு விடுவதாகவும் இல்லை.

ஆக தமிழர்கள் தமக்கான வாழ்வைசமைக்க சந்தித்த போர்கள் மட்டும் மூன்று கட்ட ஈழப்போர்களை தாண்டியிருக்கிறது.

இந்த அரசு நிலைக்குத்தசைவாக இருந்த யுத்தத்தை சமாதானத்தின் பெயரால் புலிகள் அசைவற்றதாக்கி இருக்கும் நிலையிள் அரசு இப்போது அதனை கிடையச்சு அசைவாக மாற்றிவருகிறது.

இந்த நிலையில் அரசின் எல்லா அசைவுகளும் மீண்டும் ஒரு நிலைக்குத்தசைவு யுத்தம் ஒன்றுக்குள் தள்ளிவிடும் சூழலே அதிகமாக காணப்படுகிறது.

அரசின் எல்லா அசட்டையீனங்களும் தமிழ் மக்களுக்கு வாழ்வு என்பது ஒரு நிலைக்குத்தான யுத்தம் மூலமே பெற்றுத் தரும் என்பதை அல்லவா உணர்த் துகிறது.




*நாடு அழிவுப்பாதையில் செல்வதை அனுமதிக்க முடியாது- ரவி கருணாநாயக்க-*
-"அதுக்கு அனுமதி தேவையில்லை"

*மட்டு. விடுதலைப்புலிகள் மீதான தாக்குதலை விசாரிக்கும் சனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளிக்க பொதுமக்கள் புலிகள் விண்ணப்பிக்கவில்லை.*
-"விளையாட நேரமில்லை"

*அரசின் மாற்றுக்காணிகளில் குடியேற நாம் தயாராகவில்லை. இடம்- பெயர்ந்தோர்.*
-"நாம் தயார்- இராணுவம்-"

*யாழ்ப்பாணத்தில் பத்தாயிரம் தாமரை மலர்களுடன் சுனாமியால் பாதிக்கப்பட்டவருக்கு இராணுவம் வழிபாடு-*
"புத்தரை புதைத்த செம்மணிக்கு எப்பவாம்..."

*மின் கட்டணங்கள் விரைவில் உயரும் மின்சாரசபை.*
"இன்னும் உயராம இருக்கிறது நாங்கள் மட்டுந்தான்- மக்கள்"

*இந்தியாவுக்கு அதிசக்திவாய்ந்த போர் விமானங்களை வழங்க அமெரிக்கா ஏற்பாடு-*
"சுறாபிடிக்க ரால்தூண்டில்"

# இறுதி வெற்றி யாருக்கு?

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு இவ்வாரம் ஒரு சோதனைக்களம் ஏற்பட்டது. அந்தக் களத்தின் உடனடிப் பெறுபேறு தோல்வியாக முடிந்தது மட்டுமல்லாது ஜே.வி.பிக்கு மேலும் மமதையை அதிகரிக்கச்செய்திருக்கிறது.

அதாவது, மின்சாரசபை மறுசீரமைப்பு பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்குகளை வெளியாருக்கு வழங்கல் ஆகியவற்றுக்கு ஒப்புதல் பெறுவதற்காக கடந்த திங்கள் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டமை ஜே.வி.பிக்கு ஒரு வெற்றியாக அமைந்துவிட்டது.

இந்த இரு நடவடிக்கை "தேசத்தின் சொத்தை அந்நியருக்கு விற்றல்" என்ற அடிப்படையில் அதனைத் தடுத்து நிறுத்திவிட்டதாக தேசப்பற்றாளருக்கு பெருமை பேச ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுவிட்டது.

இந்த நடவடிக்கைக்கு எதிராக தொழிற்சங்கங்களும் போர்க்கொடி தூக்கியிருந்தமை உண்மையே. ஆனால், தொழிற்சங்கங்களின் போராட்டத்துக்கெல்லாம் மசிந்து குடுக்கக் கூடியவர்கள் அல்ல சிறிலங்கா ஆட்சியாளர்கள். முன்னரும் இவ்வாறான தனியார் மயமாக்கலுக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளபோதிலும் அவை எல்லாவற்றையும் முறியடித்துத் தான் தனியார் மயமாக்கல் இடம்பெற்றிருக்கின்றன.

இப்பொழுதும் கூடதொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்து சந்திரிகா கவலைப்பட்டிருக்கமாட்டார். முக்கிய சக்தி வளங்களை வழங்கும் பெற்றோலியம் மின்சாரம் இரண்டையும் வெளியாரின் கையில் கொடுத்துவிட்டாலும் இவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கைகள் எல்லாம் பயன்தராது என்பது அவருக்குத் தெரியும். எனவே அவர் அஞ்சியது ஜே.வி.பிக்குத்தான், அதுவும் சுயநல நோக்கம் கொண்டதுதான் என்பதும் வெளிப்படை.

ஆனால் இந்த நிறுவனங்களை வெளியாருக்கு விற்பனை செய்தால் அதனால் ஏற்படும் விளைவுகள் எதிர்காலத்தில் எப்படியிருக்கும் என்பதற்கு தற்போது கோதுமை



மா படும்பாடு புரியவைக்கிறது. இலங்கையரின் முக்கிய உணவுப் பொருட்களில் ஒன்றாகவும் ஆட்சியையே தீர்மானிக்கும் பொருளாகவும் இருந்துவரும் கோதுமை மாவின் விலையையோ விநியோகத்தையோ ஆட்சியாளர்களால் கட்டுப் படுத்த முடியவில்லை. இந் நிலையில் முக்கிய சக்தி வளத்திற்கும் அதே நிலை ஏற்படக் கூடும்.

ஆனால் அது பற்றியெல்லாம் சந்திரிகா குமாரதுங் காவிற்கோ ஜே.வி.பி யினருக்கோ கூடக்கவலையில்லை. அவர்களின் குறி முழுவதும் தமது அரசியல் சக்தியை எவ்வாறு வலுப்படுத்திக் கொள்வது என்பதிலேயே இருக்கிறது.

இன்றுள்ள சூழ்நிலையில் இவ்வாறு நாட்டின் வளங்களை தனியாருக்கு வழங்கல் என்பது உடனடித் தேவையாகவே அரசாங்கத்துக்கு உள்ளது. ஏனெனில் உடனடிப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரசாங்கத்திற்கு அதைவிட வேறு வழியில்லை.

சக்திக்கு மிஞ்சிய வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி ஆட்சியின் தலைவர் என்றவகையில் அதன் சுமைகள் சனாதிபதி சந்திரிகா மீது சுமத்தப்பட்டுள்ளன. சுனாமிக்கு முதல் நாள் வரையில் மோசமான நிதிநிலைமையிலிருந்த நாடு சுனாமிப் பாதிப்புக்கு நிவாரணமாகக்கிடைத்த நிதி மூலம் புத்துயிர் பெற்றாலும், தொடர்ந்து கிடைக்கவிருக்கும் நிதியைப் பெறுவதில் பல முட்டுக்கட்டைகள் உள்ளன.

அதாவது இதற்கு உதவ முன்வந்துள்ள நாடுகள் நிதியை அரசாங்கத்தின் கைகளில் கொடுத்துவிடவோ அன்றி கண்காணிப்பின்றி அவற்றை வழங்கி விடவோ தயாராக இல்லை. அவ்வாறில்லாது நேரடியாக நிதி கிடைக்குமாயின் பாதிப்புக்குள்ளானோரைப் புறந்தள்ளிவிட்டு நிதியை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே வழமையான தேவைகளுக்கான நிதியை பெறுவதில் அரசாங்கம் சிரமப்படவேண்டியுள்ளது.

அதேவேளை இந்த நிதியை வழங்குவதற்கு விடுதலைப் புலிகளுடனான பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என சர்வதேசம் குறிப்பாக நிதி உதவியாளராக உள்ள நாடுகள் வலியுறுத்துகின்றன. எனவே அதனைச் செய்யாவிட்டால் வாக்குறுதி வழங்கப் பட்ட நிதி முழுமையாக-சிலவேளைகளில் முற்றாகவே கிடைக்காது போகலாம். இது சந்திரிகா அரசாங்கத்துக்கு மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

ஆனால் இவ்வாறான ஒரு பொதுக்கட்டமைப்பு உருவாகுவதற்கும் தேசப்பற்று என்று கூறிக்கொண்டு ஜே.வி.பி இடையூறு விளைவித்துவருகிறது. இதன் காரணமாக புனரமைப்பு நடவடிக்கைகள் தாமதமடைவதால் பாதிக்கப்பட்ட மக்கள் அரசாங்கத்திற்கு எதிராகக் கிளந்தெழுந்து வருகின்றனர்.

ஆனால் அரசாங்கம் சந்திக்கும் நிதிநெருக்கடிகளிலெல்லாம் தமக்குச் சம்பந்தம் இல்லை என்பது போல ஜே.வி.பி நடந்து கொள்கிறது. அதாவது சரி தவறுக்கு அப்பால் சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளுக்கு ஜே.வி.பி இணங்கவுமில்லை. இந்த நெருக்கடிகளிலிருந்து மீள ஜே.வி.பி எவ்வித திட்டங்களையோ செயற்பாடுகளையோ மேற்கொள்ளவுமில்லை.

இன்று சந்திரிகா குமாரதுங்கவை ஆட்டிப் படைப்பதன் மூலமும் தமது நடவடிக்கைகள் தேசப்பற்றுமிக்கவை எனக் காட்டிக்கொள்வதன் மூலமும் வீராவேசப் பேச்சுக்கள் மூலமும் மக்களிடம் தமக்கு செல்வாக்கு அதிகரிக்கும் என ஜே.வி.பி நினைக்கக்கூடும். அதேவேளை தனது அரசியல் வாழ்வு முடிவடைந்து விடக்கூடாது என்பதற்காக ஜே.வி.பியின் மிரட்டல்களுக்கெல்லாம் சனாதிபதி சந்திரிகா பணிந்து நடக்கலாம். ஆனால் மக்களுக்கு ஒட்டுமொத்தமாக இந்த ஆட்சியாளரால் நன்மை எதுவும் கிடைக்காத நிலையில் "உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டாய்" என இருதரப்பும் புலம்பும் நிலையே இறுதியில் ஏற்படும்.

இப்பொழுது ஜே.வி.பி நடந்துகொள்ளும் விதத்திலிருந்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். அதாவது அவரது அரசியல் எதிர்காலம் நீடிக்கப்படுவதற்கு ஜே.வி.பியை இணங்கச்செய்வதாயின் அதற்கு அவர் மிகப்பெரியவிலை கொடுக்கவேண்டியிருக்கும் என்பதே அதுவாகும்.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்படவேண்டும்

இலங்கையில் மனித உரிமை மீறல் என்பது எல்லை கடந்து எழுந்து நிற்கின்றது. அதாவது தமிழர்கள் எந்த இடத்திலும் தாக்கப்படுவதும் தடுத்து வைக்கப்படுவதும் படுகொலை செய்யப்படுவதும் நாளுக்கு நாள் இந்த சமாதான காலத்திலும் அதிகரித்த வண்ணமுள்ளன. உலக வரலாற்றுப் புத்தகங்களை எடுத்துக் கொண்டால் மனித உரிமை மீறல் கள் உருவெடுக்கின்ற சந்தர்ப்பத் திலே அங்கு உரிமைப் போராட்டம் முளைவிடுகின்றது. அந்தவகையிலேதான் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தபோது தான் தமிழீழ விடுதலைப் போராட்டம் முளைவிட்டு இன்று பெரும் வெற்றிகளை ஈட்டி உலகின் திசை எங்கும் எமது இனத்தின் இருப்பை அடை யாளப்படுத்தி வருகின்றது. இதற்கு முக்கியகாரணம் தமிழர்கள் மீது அன்று ஆட்சியில் இருந்த அரசுகள் பிரயோகித்த மனித உரிமை மீறல்கள் ஆகும்.

மனித உரிமைகள் தொடர்பாக இலங்கையில் செயற்பட்டு வரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்டத்தின் கீழ் வெளி யிடப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் மனித குடும்பத்தைச் சேர்ந்த சகலரினதும் உள்ளார்ந்த கௌரவத்தையும் அவர்கள் யாராவது சமமான பாரதீனப்படுத்தமுடியாத உரிமை களையும் அங்கீகரித்தலே உலகில் சுதந்திரம், நீதி, சமாதானம் என் பனவற்றுக்கு அடிப்படையாகவுள்ள தையும் மனித உரிமைகள் பற்றியும் அவற்றை அவமதித்தலும், மனித குலத்தின் மனச்சாட்சியை அவமானப் படுத்தியுள்ளன. காட்டு மிராண்டித் தனமான செயற்பாடுகளுக்கு இட மளித்தலும் பேச்சுச் சுதந்திரம், நம் பிக்கை சுதந்திரம், அச்சத்தில் இருந்தும் வறுமையில் இருந்தும் விடுதலை பெறுதல் ஆகியன மனித உரிமையின் குறிக்கோளாக எடுத்துக் கொள்ளப்பட்டாலும், கொடுங்கோண் மைக்கும் அடக்குமுறைக்கும் எதி ரான இறுதி வழியாக எதிரெழுச்சியை ஏற்படுத்துவதற்கு மனிதன் கட்டாயப் படுத்தப்படாமல் இருக்கவேண்டுமெனில் சட்டத்தின் ஆட்சியில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது அவசியமாகும் என அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன்,



சில உறுப்புரைகளையும் கொண்டுள்ளது அதாவது.

*. வாழ்வதற்கும், சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் சகலருக்கும் உரிமையுண்டு.

* எவரும் அடிமையாகாது வைத்திருக்க படுதலோ அல்லது அடிமைப்படுத்தப்பட்ட நிலையில் வைத்திருக்கப்படுதலோ ஆகாது. அடிமை நிலையும் அடிமை வியாபாரமும் அவற்றின் எல்லாவகையும் தடை செய்யப்படவேண்டும்.

* எவரும் சித்திரவதைகளுக்கோ அல்லது கொடிய மனிதத் தன்மையற்ற அல்லது இழிவான நடைமுறைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தலாகாது.

* ஒரு தலைப்பட்ட மனப் போக்கான வகையில் கைது செய்யப்படல், தடுத்து வைக்கப்படல் நாடு கடத்துதல் ஆகியவற்றுக்கு எவரையும் உட்படுத்தலாகாது.

* ஒவ்வொரு நாட்டினதும், எல்லைக்குள் சுதந்திரமாகப் பிரயா ணம் செய்வதற்கும் வசிப்பதற்கும், உரிமையுண்டு.

* ஒரு தேசிய இனத்தவராக இருக்கும் உரிமையுண்டு. இவ்வாறு அவ்வறிகையில் 23 உறுப்புரைகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

ஆனால் அதில் எவையும் தமிழ் மக்களுக்கு உரிய முறையில் இல்லை என்றே கூறவேண்டும். இன்று தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் தமக்கான நீதி, நிர்வாகம். சட்டம், ஒழுங்கை பேணிக் கொள்ளவும், தமக்கான உரிமைகளை உரியமுறையில் பெற்றுக்கொள்ள அவர்களுக்கு தமிழீழ நீதி நிர்வாகத்துறை தமிழீழ காவல் துறை போன்ற கட்டமைப்புக்கள் உரிய முறையில் செயற்பட்டு வருகின்றன. இவ்வாறான பகுதி களில் குற்றம் மிகமிகக் குறைவாகவே உள்ளது. சர்வதேச நியமத்திற்கு அமைவாகவே இங்குள்ள சட்டம் ஒழுங்கைப்பேணுகின்ற அமைப்புக்கள் ஒரு நெறிப்படுத்தலில் செயற்பட்டு வருகின்றது.

சிறிலங்கா படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மனித உரிமை மீறல்கள் தொடர்கதையாக இன்றும் இருந்து வருகின்றன. கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிர்வாகம் சிறிலங்காப் படையினரிடம் என்பதால் அவர்கள் அதனை செம்மையாகக் கடைப்பிடிக்க வேண்டிய தேவையில்லை. அது அவர்களின் இனமும் அல்ல. நாடும் அல்ல என்ற கோட்பாட்டில் எதையும் எவரும் செய்து விட்டுப் போகலாம் என்ற வகையில் சில விடயங்களை தெரிந்து கொண்டும் குற்றவாளிகளைத் தப்பிச்செல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள் கின்றனர். சில இடங்களில் சிறிலங் காப் படையினரின் உதவியுடன் சில மனித உரிமை மீறல்கள் நடந்தேறு கின்றன. இதனை எவரும் மறுக்க முடியாது. இன்று தமிழர் தாயகப் பகுதியில் ஒருகொலைச்சம்பவம் அல்லது குற்றச் செயல் நடக்குமாக இருந்தால் அதனுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளி மிகவிரைவில் இனங் காணப்பட்டு அவருக்கு உரிய தண்டனை வழங்கப்படுகின்றது. ஆனால் சிறிலங்காப் படையினரின் கட்டுப் பாட்டுப்பகுதியில் நடந்த எந்த ஒரு பாரிய குற்றத்திற்கும் சிறு குற்றத் திற்கும் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படவுமில்லை சட்ட ரீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்படவும் இல்லை, இது இன்று நேற்றல்ல தொடர்ந்தே நடைபெற்று வருகின்றது. அண்மையில் சிறிலங்கா அரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்கா ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார். அதாவது சிறிலங்காவின் நீதி நிர் வாகத்துறை மிகவும் ஊழல் நிறைந்து காணப்படுகின்றது என்று அதே வேளை சிறிலங்கா படை அதிகாரி ஒருவர் விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாக கட்டமைப்பை பெரிதும் பாராட் டியுள்ளார். சீரான முறையில் சட்டம் ஒழுங்கை கட்டிப்பாதுகாக்க முடியா தவர்கள் எவ்வாறு மனித உரிமை மீறல்களை செய்யாமல் இருக்க முடியும். அல்லது மனிதஉரிமை மீறல்களை இனங்கண்டு தீர்வுகாண முடியும்.

**சு. பாஸ்கரன்**

# பாடசாலையில் விளையாட்டுப்போட்டிகள்

## சில சிந்தனைகள்

**பெருமாள் கணேசன்**

இது பாடசாலைகள் தோறும் மெல்வல்லுனர்போட்டிகள் அன்றேல் விளையாட்டுப் போட்டிகள் அத்துடன் உடற்பயிற்சிப் போட்டிகள் மும்முரமாக நடைபெற்று நாளாந்தம் பாடவிதான நடவடிக்கைகள் 'குறுகி ஒலிக்கும்' காலம்.

இலங்கையின் கல்விச் செயலொழுங்கில் அன்றேல் பாடசாலைக் கட்டமைப்பில் பாடவிதான, புறப்பாடவிதான என்ற இருவகை கலைத்திட்டம் உள்ளது.

பாடவிதானக் கலைத்திட்டம் மாத்திரம் ஒருபிள்ளையை பூரண ஆளுமை உடையவனாக, அன்றேல் தான் வாழும் உலகிற்கு இசைவுடையவனாக மாற்றப் போதாது என்ற கருதுகோளின் முனைப்பிலே புறப்பாடவிதான கலைத்திட்டம் எனச் சொல்லக் கூடிய ஒரு செயல் முறை நவீனபாடசாலைக் கல்விக்கு அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த பல தசாப்தங்களாக நல்ல அறுவடைகளை இந்தச்சமூகம் ஈட்டிக் கொண்டது.

ஆனாலும் சோம்பல், நம்பிக்கை இன்மை ஊதியத்துக்காக வேணும் உழைக்க மறுத்தல், அர்ப்பணிப்பு இன்மை, கல்விச்சிந்தனை இன்மை, சமூகத்தின் மீது பற்று, பொதுநல நோக்கு ஆகியன இன்மையால் கல்விச் சமூகம் தனக்கு அளிக்கப்பட்ட பொறுப்புக்களை புறந்தள்ளி பராமுகமாக இருந்து விட நினைக்கின்ற வேதனைதரும் சம்பவங்கள் கல்விப்புலத்தில் சில நேரங்களில் நிகழ்ந்து வருகின்றன.



அவற்றில் ஒன்றுதான் இம்முறை பரவலாக நடத்தப்பட்ட "சிக்கனத் தெரிவு" முறைமையிலான மெய்வன்மைத் தோற்றுநர் தெரிவுகள் காதோடு காதாக விடயத்தை சிக்கனமாக (கச்சிதமாக அல்ல) முடித்து 'என்ரி' எனப்படும் உயர் போட்டியொன்றுக்கு செலுத்தும் பதிவுகளை/விண்ணப்பங்களுக்கு மாணவர்களைத் தெரிந்து எடுத்து வைத்துள்ளமை.

ஒரு விளையாட்டுப் போட்டி ஒரு மாணவனுக்கும், ஆசிரியனுக்கும் உருப்படியாக நடத்தும் பட்சத்தில் வழங்கும் அனுகூலங்களைப் பார்ப்போம்.

* வகுப்பறையில் நிகழாத மாணவன் ஆசிரியன் உறவுப்பலம் Rapprot உருவாகி ஆரோக்கியமான சமூக சம்பவங்களுக்கு முறையிடுதல்
* வகுப்பறையில் பெற முடியாத மெய்வன்மைச் சிந்தனை (சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்)
* பாடசாலை வேளைக்கு மேலதிகமாக ஆசிரியன் மாணவன் அர்ப்பணிப்பு.
* மெய்வன்மையாளருக்கான வாய்ப்பு, அதனால் தன்னம்பிக்கை வளர்த்தல்.
* அவர்களுக்கான கணிப்புத்தேவை நிறைவுறல்.
* தலைமைத்துவம், சகிப்பு, பங்குபற்றல், பிறரை அனுசரித்தல்.
* வெற்றி தோல்வியை ஏற்றுக்கொள்ளல், பாராட்டுதல், ஒற்றுமை.
* கருத்துக்களை அனுசரித்தல் முதலிய பல மாணவனை சமூகமயமாக்கலுக்குள் நனைத்து விடுகிறது.

மொழிகளை, இனங்களை, நாட்டின் எல்லைகளை, சமயங்களை, விழுமியங்களை, கலாச்சார, பொருளாதார நிலைமைகளை எல்லாம் கடந்து மனிதன் எல்லோரும் குரங்கின் குட்டிகள்தான் என்ற உண்மைக்கு இட்டுச் செல்லும் ஒரே ஒரு சாதனம் இன்று விளையாட்டுத் துறை என்பதை யார் மறுக்க முடியும்.

மணவெழுச்சி வளர்ச்சி, நற்பண்புகள் பல சவால்களை வாழ்வில் எதிர்கொள்வது எப்படி, சினத்தை அடக்குவது, கட்டளைகளை மதிப்பது குழு மனோ நிலையை வளர்ப்பது, ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல் தனது சூழலுக்கு அப்பாலுள்ளவருடன் தொடர்புபெற என்பன எல்லாம் விளையாட்டின் செயல் வெளிப்பாடு Practical என்பதை எல்லோரும் அறிவர்.

நவீன உலகில் விளையாட்டுப் பெறும் இடம் சிறப்பானது. பண்டைய கிரேக்கத்தில்..... முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒலிம்பிக் எதற்காக? பலகாலங்களாக சண்டையிட்டுக் கொண்டிருந்த இனங்கள், நாடுகள், மதங்கள், பிராந்தியங்களடிப்படையிலான மக்கள் விளையாட்டுப் போட்டிகளால் ஒற்றுமைப்படுத்தப்பட்டனர். வேறு எவையும் செய்யத்தவறிய பல அரிய செயல்களை இந்த விளையாட்டுக்கள் வாயிலாக மனித இனம் சாதித்துள்ளது. உதாரணமாக சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பரந்தனில் கிரிக்கெட் கிராமம் இன்று உருவாக்கப்படுகிறது. இவை எல்லாம் விளையாட்டு மனித மனங்களுக்குச் செய்துள்ள சிகிச்சையின் விளைவே எனலாம். இவை எல்லாம் மலை போல் கண்முன்னே இருக்க இப்பொழுது பாடசாலைகள் விளையாட்டுப் போட்டியை சின்னஞ்சிறார்கள் உளம் பூரிக்க, மனம் மகிழ சற்று வனப்பாக நடத்துவதற்கு தயாராக இல்லை.

ஆடம்பரமாக ஒரு விழாவை நடாத்துவதென்பதும் ,சிறுவர்களின் அபிலாஷை, குதூகலத்துக்காக அவற்றை வனப்பாக நடாத்துவதென்பது வேறு வேறானவை.

(சுற்று நிரூபம் சொன்னது ஆடம்பரமாக நடத்த வேண்டாம் என்பது மட்டுமே)




ஆனாலோ இந்தப் பாடசாலைகள், 'Closemeet' என்ற புதுவித முறைமை அதிலும் பாடசாலை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக சற்றேனும் குழந்தைகள் மனங்கவர இதனை ஏற்பாடு செய்யாது போயின.

கட்டடத்திறப்பு விழாச் செய்கின்றோம். அதனால் இம்முறை விளையாட்டுப் போட்டி வெறும் தெரிவாக நடத்தப் போகிறோம் என்று சில அதிபர்கள் கூறுகிறார்கள் இது நியாயமா? கட்டடத் திறப்பு விழா இலங்கை பாடசாலை பாடவிதானத்தில் கலைத் திட்டப்பாடமாக உள்ளதா?

எனவே சின்னப்பிள்ளைகளின் ஒரு வருட வாழ்வு என்பது முக்கியமானது. ஒவ்வொரு வருடமும் விளையாட்டு விழா நடைபெறுவதால் அந்தப் பிள்ளை ஊக்குவிக்கப்படுகிறது. (Motivation) சிறந்த வீரன், வீராங்கனை, சாதனையாளன் கலாநிதி எதிர்வீரசிங்கம் தமிழ் மண்ணில் பிறந்த ஒலிம்பிக் சாதனையாளர் அவரை அவரது பாடசாலை ஊக்கியது ஒவ்வொரு மாணவரிடமும் உள்ள திறமையை இனங்காண்பதே "ஆசிரியம்" எனப் புரிதல் வேண்டும்.

'எம்பணி செய்து கிடப்பதே' எமக்குப் பணி மாணவனை பூரண ஆளுமையை நோக்கி இட்டுச் செல்லல். பாடசாலை ஒழுங்கானதாக அமைந்தவர்கள் அனைவரும் ஆளுமை குறைவுபடாதவர்களாக எம்முன் மிளிர்வதைக் காண்கிறோம்.

ஏட்டுக்கல்வியை வெற்றிகரமாக நிறைவு செய்த பல நிர்வாகிகள் தங்கள் நிர்வாகத்தைப் போட்டுடைக்கிறார்கள். அவர்களுடைய பாடசாலை புறப்பாடவிதான முயற்சிகளில் அவர்களை ஈடுபடவைக்க, வழிகாட்டவில்லை.என்பதை துணிந்து கூறலாம்.

கல்வியறிவு முழுமையான ஆளுமையைத் தருமென்று இல்லை. அத்தோடு சமூகமயமாக்கல் அவனுக்குள் நிகழாதபட்சத்தில் அவன் ஏட்டுக்கல்வியை வைத்து பிழைகளையே அதிகம் செய்ய முடியும்.

பாடசாலைகளைப் பொறுத்த வரை தம்பிள்ளைகள் விளையாட்டுப் போட்டியில் ஈடுபட, பெற்றோர் அதனைக் கண்டுகளிக்க அவாவுறும் சந்தர்ப்பங்களை கண்கூடே காண்கின்றோம். அந்தப் பிஞ்சு உள்ளங்களின் குதூகலத்துக்காக தம்மை அர்ப்பணித்து நிற்கும் ஆவலோடு கண்மலர்ந்திருக்கும் அவர்களது வெற்றியில் பங்குபற்றுதல்களைக் கண்டு உளம் உவகித்து நிற்கும் நிலையை, விளையாட்டுப் போட்டிகள் செய்யாத பாடசாலைகள் தோற்றுவிக்க, ஏற்படுத்தத் தவறிவிட்டன என்பது பெரும் வேதனை தரும் விடயமாகும்.

படித்தவர், பாமரர், பணக்காரன், ஏழை என சமூகத்திலுள்ள பெற்றோரை அணைக்கும் அவர்களையும் மகிழ்விக்கும், அவர்களை ஆசுவாசப்படுத்தும் , தனக்கு வாழ்வில் கிடைக்காத சந்தர்ப்பத்தை தன்பிள்ளையைக் கொண்டு நிறைவேற்றக் கிடைத்ததால் ஆத்மதிருப்தி கொள்ளும் ஆயிரம் ஆயிரம் பெற்றோரை பாடசாலைகள் மகிழ்விக்க மதிக்கத் தவறியே விட்டன.

பாடசாலை விளையாட்டுப் போட்டிக்கு தாயை, தகப்பனை உள்ளெடுக்காத பாடசாலை நிர்வாகம் ஒரு முரண் நிர்வாகமே.

சில பாடசாலைகள் பெற்றோருக்கும் வாய்ப்பு சந்தர்ப்பத்தை வழங்கி அவர்கள் இறுதி நிகழ்வுகளில் கூட பெற்றோர் நிகழ்வில் கூட பங்குபற்றுவர் இதனை ஏன் பாடசாலை செய்ய வேண்டுமெனில் பாடசாலையின் வளர்ச்சிக்கு பெற்றோர் தயங்காது அபிமானத்தோடு தாழ்வுச்சிக்கலின்றி ஒத்துழைப்பை பெறவே அவர்களை தமது பெற்றோராக பாடசாலை கருதும் ஒரேயொரு முக்கிய நிகழ்வு விளையாட்டுப் போட்டியாகும். பேராசிரியர் உடகம ஒரு முறை குறிப்பிட்டார் பாடசாலை சமூகத்துக்குள், சமூகம் பாடசாலைகள் பரஸ்பரம் நுழையவேண்டுமென பொதுவாகப் பார்க்குமிடத்து பாடசாலையின் ஏட்டுக் கல்வி மீதான அக்கறை அதிகரித்துள்ளமையும் விளையாட்டு, நாடகம், பொதுஅறிவு, அழகியற்கலை, தொழில்முன்நிலைக் கற்கைகள், வாழ்க்கைத் தேர்ச்சி கற்கைகள் என்பன மீதான அக்கறை பாடசாலையில் குறைந்து பரீட்சை மையக் கல்விக்கு ஆசிரியர்கள் வழிசமைத்துக் கொடுக்கின்றமையையும் பார்க்கமுடிகிறது.

உதாரணமாக உடற்பயிற்சிப் போட்டிக்கோ, விளையாட்டுப் போட்டிக்கோ, நாடகப்போட்டிக்கோ, நடனப்போட்டி வாய்ப்பாட்டுப் போட்டிக்கோ பாடசாலையினர் நேரமொதுக்கிப் பயிற்சிகள் செய்து சாதிக்கமுனைவதில்லை.

இதிலும் குறிப்பாக நகரத்தையண்டிய பாடசாலை மாணவர்கள் இவ்வாறு புறப்பாடவிதானத்தில் அக்கறை இன்றி இருப்பதைக்காணமுடிகிறது. இது ஒருவகை வாழமறுத்தல் நிலை எனலாம்.

பாடசாலையில் படிப்பர் அதனையே தனியார் கல்விநிலையங்களிலும் படிப்பர். அன்றாடம் அவர்களது பொழுது போய்விடும்.

இறுதியாக கிளிநொச்சியில் நடந்த மாவட்ட/வலயமட்ட உடற்பயிற்சிப் போட்டிகளில் நகர்ப்புறத்துப் பாடசாலைகள் தோல்வியுற்று, கிராமத்துப் பாடசாலைகள் வெற்றியீட்டியுள்ளன. இவை எழுமாறாக இடம்பெறாமை கிராமத்துப் பாடசாலைகளைவிட ஆசிரியர் வளம், மாணவர் வளம், பௌதீகவளம், மேலோங்கிநிற்கும் இப்பாட சாலைகள் தங்களை மறு பரிசீலனைக்குட்படுத்துவதனால் மட்டுமே எமது தேசக்குழந்தை களின் நிறைவான பிரஜைகள் உருவாக்க சாத்தியம் அன்றேல் சுயநலமும், சோம்பலும், அடிமைத்தனமும், தங்கிவாழும் நிலையுமுள்ள இளம் சமூகத்தை உருவாக்கும் நிலை தொடர்ந்துவரும்.

பாடசாலைக் காலத்தை நிறைவுசெய்து வெளியேறும் மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்ததில் அவர்கள் வெற்றிகரமாக தமது வாழ்க்கையை நடத்தும் தகுதியற்றநிலை தென்படுகின்றது எனக் கல்வி அவதானிகள், சமூகவியலாளர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். இது ஏன்.

பாடசாலைகள் வழி நடத்தும் அரைக்கிணறு பாயும் செயல் மூறையே இதற்குக் காரணம்.

9 தேசிய நோக்குகளையும் 5 தேர்ச்சிகளையும் உள்ளடக்கிய புதிய கல்விச்சீர்திருத்தம் பாடசாலைக்காலம் முடிந்தபின் பூரணமான திருப்தியான, செழுமையான அர்த்தமுள்ள வாழ்வொன்றை ஒருவன் பெறும் நோக்கில் ஆக்கப்பட்டதே.

பாடசாலைப் பிள்ளைகளைப் பொறுத்தவரை பல்வேறு இயல்பான ஆற்றல் உள்ளவர்கள் உள்ளனர். மெல்லக்கற்போர்-விரைவாக ஓடுவோராக இருப்பதுமுண்டு. எனவே தனக்கு முடிந்த சிலவற்றில் அவன் மிளிரவாய்ப்பு இருப்பதால் பாடசாலையின் ஏனைய கலைத்திட்ட முயற்சிகளில் அவன் பங்குபற்றுவான். (உதாரணமாக சில பிள்ளைகள் விளையாட்டுக் காலங்களில் மட்டும் பாடசாலை வர கூடுதலாக விரும்புவர்) அதனால் அவனுக்கும் கணிப்புத்தேவை என்ற உளத்திருப்தி ஏற்பட்டு ஊக்கல் நிகழ்கிறது. இவ்வூக்கல் அவனது சமநிலை ஆளுமைக்கு அவனை இட்டுச்செல்கிறது.

தன்னோடு கற்கும் சகபாடிகளிடமுள்ள கெட்டித்தனங்களை அறிந்து கொள்ளல் மூலம் பிறரை மதிக்கும் மனப்பாங்கை புதிய சமூகத்தில் தோற்றுவித்தல், இணைப்பாடவிதான அமுல்படுத்தலால் நடைபெறும் பிரதான அனுகூலமாகும்.

நாடகம், ஓவியம், கட்டுரைப் போட்டி, நாவன்மைப்போட்டி முதலியன இத்தகு வாய்ப்புக்களையும் இத்தகு சூழமைவுகளையும் தோற்றுவிக்கின்றன.

பாடசாலைகளில் வெளியிடப்படும் கையெழுத்துச் சஞ்சிகைகள், மலர்கள் என்பனவும் பிள்ளைகளிடமுள்ள மறைந்து இருக்கும் திறன்களை வெளிக்கொணர்கின்றன.

(மிகுதி அடுத்தவாரம்)

# தப்பியவன்



**சு.ஞாலவன்**

முன்பெல்லாம் கதை சொல்வதற்கு பாட்டிமார்கள் இருந்தார்கள். கேட்பவர் ரசிக்கும் வண்ணம் சுவைபடக்கதைகளைச் சொல்லும் திறன் அவர்களிடம் நிறையவே இருந்தது. எழுதாத வாய்வழி இலக்கியங்கள் பல அவர்களினால் வாழ்ந்து வந்தன. கதை கேட்கவென்று அவர்களை அணுகுபவர்களுக்கு சொல்வதற்கென்று, நவரசங்களும் நிறைந்த பல கதைகள் அவர்கள் கைவசம் இருந்தன. இருந்தாலும் என் காலத்தில் கதைசொன்ன பாட்டிகளைப்பற்றிய கதைகள் மட்டுமே எஞ்சியிருந்தன. என்னுடைய காலத்துப் பாட்டியிடம் சொல்வதற்கு கதைகள் இருக்கவில்லை. ஆனாலும், பழைய காலத்து சம்பவங்களை ஆர்வத்துடன் சொல்வதில் அவர் தீவிரமாயிருந்தார்.அவற்றிற்கெல்லாம் தகவல், சுவை, சோகம், வீரம், வறுமை, சிரிப்பு, மாயம் என்று பலதும் நிறைந்திருக்கும். கூடவே அம்புலிமாமாவும், சந்தமாமாவும் என ஆரோக்கியமான ஆரம்பத்தை அனுபவிக்க முடிந்தது. இரண்டு தசாப்தங்களில் இன்று எவ்வளவோ மாற்றம். கதை சொல்வதைப் பாட்டிமாரும், கேட்பதைப் பேரப்பிள்ளைகளும் கிட்டத்தட்ட முழுமையாகவே மறந்து விட்டார்கள் என்றுதான் கூற வேண்டும். இடையிலுள்ள பெற்றோர்களும் பத்திரிகைத் தலைப்புக்களை மட்டுமே வாசித்துவிட்டு ஓய்ந்து விடுகிறார்கள். அத்தியாவசிய தேவையென சராசரியாக உணரப்படும் இடங்களில் மட்டுமே 'வாசிப்பு' ஏதோ அரைவயிற்றுடன் வாழ்ந்து வருகிறது. பல பின்னடைவுகளுக்குக் காரணமாக உள்ள யுத்த சூழலே இதற்கும் காரணமென நாம் கொண்டுவிட முடியாது. இலக்கியம் என்பது வெறுமனே வெளியீட்டு விழாக்களிலும், கௌரவ அரங்குகளிலும் மாத்திரம் குறிப்பிடப்படுவதனால் மட்டுமே வாழ்ந்துவிடாது. ஏனிந்த வெறுமை என எண்ணித்தேடும் வாசிப்புப் பசியினால் வாழவேண்டும். நாமும், நம் மொழியும். 'எண்ணும், எழுத்தும் கண்ணெனத்தகும்' எனக் கூறிக்கொள்ளும் நம்மிடையே தங்கள் ஆக்கங்களை வெளியிடும் படைப்பாளிகள் யாவரும் 'சூடு காட்டப்பட்ட பூனைகளாக' ஒதுக்கப்படுகிறார்கள். வாசிக்கும் ஆர்வம் குறைவு, அதனால் எழுதுபவர்களும் நலிந்துபோனால்... தமிழ் என்ன செய்யும் இனி வரும் நாளில்? ?

இப்படியான தேவையான நிலையிலும் நம் தாய்மொழி தன்னை சகல வழிகளிலும் சுதாகரித்து வாழ்ந்து கொண்டுதான் வருகிறது. சளைக்காமல் படைப்பாளிகளும் தத்தம் ஆக்கங்களை வெளிக்கொண்டுதான் வருகின்றனர். முன்னொருகாலத்தில் வாழ்ந்துவந்த அரசனை பற்றிய கதை மரபிலிருந்து நாம் வாழும் இக்காலகட்டம் முற்றிலும் மாறுபட்டது. மொழி வளர்ச்சி, கலைச்சொல்லாக்கம் பற்றியெல்லாம் அதிகளவில் பேசப்படும் தற்காலத்தில் நம்மிடையே வெளிவரும் இலக்கியங்களும் மொழியியலை வளப்படுத்தும் பணியில் முக்கிய பங்காற்றி வருகின்றன. இந்த வகையிலே தமிழுக்கு சற்றே புதிதாக வரவு தான் "தப்பியவன்" மொழிபெயர்ப்பு நாவல். பிரிட்டிஷ் சிறப்புப் படையைச் சேர்ந்த ராணுவ வீரனும், எழுத்தாளருமாகிய கிறிஸ் ரயன் என்பவர் எழுதி, 1995இல் வெளியிட்ட "The one that got away" என்ற நாவலை "தப்பியவன்" ஆக பெண் போராளி சந்திரமதி 293 பக்கங்களில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். இந்த நாவலினால் நமக்கு என்ன பயன் என்று அலசுவதற்கு முன்பாக, இதன் கதைநகர்வை சுருக்கமாகப் பார்ப்போம்.

1991ஆம் ஆண்டு அமெரிக்கக் கூட்டுப்படையினால் 'பாலைவனப் புயல்-Desert Strom' என்ற பெயருடன் ஈராக் மீது நடாத்தப்பெற்ற போரின் பின்னணியிலேயே இந்த உண்மைக்கதையும் நகர்ந்து செல்கின்றது. வெற்றிக்கான படை மேலாண்மை தமது விரல் நுனியிலேயே உள்ளது போன்று அனைத்தையும் சாதிக்கும் திறன் தம்மிடம் உள்ளதென்ற எச்சரிக்கைச் செய்தியை குறிப்பாக முஸ்லிம் அடிப்படைவாதப் போக்கினைக்கொண்ட நாடுகளுக்குத் தெரிவிக்கும் முகமாக, மறைமுகமாக கடுமையான பிரயத்தனங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எப்படியென்றாலும் பெற்றுத்தீர வேண்டிய வெற்றியாக அன்றி, மிக எளிதாகவே பெற்றெடுத்த வெற்றி என்று வெளியுலகம் நம்பவேண்டும் என்பதற்காக நவீன தொழில்நுட்பத்துடன் பல்வேறான போர்வியூகங்கள் கூட்டுப்படையினரால் வகுக்கப்படுகின்றன. இப்படியான வியூகங்களை மையப்படுத்தி பொருத்தமான நடவடிக்கைக்குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன. எதிரிநாடான ஈராக்கிலுள்ள ஏவுகணை நிலைகள், கேந்திர மையங்கள் மற்றும் விநியோக வீதிகளைப் பற்றிய மேலதிக தகவல்களை உள்ளே சென்று திரட்டிக்கொள்வதும், முடிந்தவரையில் அவற்றை நிர்மூலம் செய்வதுமென ஒரு நடவடிக்கை. இதற்காக பிரிட்டனின் விசேட பிரிவாகிய SAS இன் 'பிறாவோ ரூ சீறோ' அணி தெரிவு செய்யப்படுகின்றது. Special Air service (SAS) ஆகிய 'சிறப்பு வான்படை' இதற்கு மேலதிகமாக... (சிறுமாற்றம்வரும்) Speed Aggression Surprice என வேகம், போரிடும் மூர்க்கம் திகைப்பிலாழ்த்தல் ஆகிய மூன்று தன்மைகளின் விரிவாக்கமாகத் திகழும் SAS பிரிவு மரபுரீதியான ராணுவ செயற்பாடுகளிலிருந்து சற்றே மருவி நாசகார நடவடிக்கைகளுக்கான விசேட பயிற்சித் திட்டத்துக்கு உட்படுத்தப்பட்ட ஒன்று.

இப்படியான அணியொன்று தான் ஈராக் நிலப்பரப்பிலே தரையிறக்கப்படுகிறது. காண்பவரை எல்லாம் சுட்டுத்தள்ளும் வழமையான ராணுவப் பாணியிலிருந்து மாறி இட்டப்பட்ட இலக்குகளைத் தாக்குவது மட்டுமே இவர்களின் பணி. இருந்தும் எண்ணியது போலவே எல்லாம் நடைபெறவில்லை. அதியுயர் நவீன ராணுவ சாதனங்களுடன் இறங்கியதாக நம்பிய இவர்கள் தாம் அநாதரவாக விடப்பட்டதை காலம் கடந்தே உணர்ந்தார்கள். பாலைவனக் காலநிலையின் கொடுங்கரங்களிலே, நெருக்கமாக நிலைகொண்டிருந்த ஈராக்கிய படைகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்த இவர்களின் நாட்கள், இவ்அணியிலே ஒருவராக இருந்த போர் வீரனும் எழுத்தாளனுமாகிய கிறிஸ்ரயனினால் சிறப்பாகவே சித்தரிக்கப்பட்டுள்ளன. யுத்தச்சூழல் நம் அனைவருக்கும் பழக்கப்பட்டுப்போன ஒன்றுதான். இருந்தாலும் நமக்கு முற்றிலும் அந்நியமான பாலைவன நிலப்பரப்பின் கொடூரம் நன்றாகவே இந்நாவலில் வெளிப்பட்டு நிற்கிறது. இது மட்டுமன்றி மேலைத்தேச ராணுவங்கள் பற்றி நாம் கொண்டிருக்கும் மிகைப்படுத்தப்பட்ட தோற்றமும், அவர்களிலே ஒருவரான கிறிஸ் ரயனின் பேனா வழியாகவே மறைந்து, நன்றாக பயிற்றுவிக்கப்பட்ட சாதாரண மனிதர்களே அவர்களும்! என்பதும் புலப்படுத்தப்பட்டுள்ளது. இங்கே மேலைநாட்டவரின் முக்கியமானதொரு சாதகமான குணாம்சம் பல இடங்களிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது நிகழ்காலச் சிக்கல்களை அனுபவங்களினூடாக ஒப்பிட்டுக் கேள்விகளை எழுப்பி தீரத்தெளிந்து கொள்வது தான் அது. எடுத்துக் காட்டாக இருள்மண்டிய திறந்த வெளிகளிலே, எங்கே எதிரி தன்னைக் கண்டுகொள்வானோ என்று அச்சம் கொள்ளும் கிறிஸ்ரயன் 'உன்னால் எப்படி அவர்களைக் காணமுடியாதுள்ளதோ? அதேபோலத்தான் அவர்களாலும் உன்னைக் கண்டு கொள்ளமுடியாது' என்று சிறிய வயதில் வேட்டைக்குப்போன வேளையில் தன் தந்தையார் தனக்குக் கூறியதை நினைவுகொள்கிறார். அடிப்படையில் சிறுபிள்ளைத்தனமாக ஒலிப்பினும் இதே வாக்கியம் சோர்வுறும் சந்தர்ப்பங்கள் பலதிலும் நமக்கு பலம் தந்து பலனடைய வைக்கும் வல்லமை படைத்தது. இவை தவிர நூலாசிரியரினூடாக மேற்குலக ராணுவத்தினரின் நடைமுறைகள், மனோநிலைகள் என பலதையும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் மொழிபெயர்ப்பாளர் போராளி சந்திரமதியின் முறிவற்ற தமிழ் நடையின் பயனாக அரேபிய மண்ணில் நாமும் வாழ்ந்துகொள்வது போன்ற சிந்தனைப்பின்னணி தானாகவே உருவாகின்றது. கூடவே இந்நாவலின் 293 பக்கங்களினூடாக இங்கிலாந்திலிருந்து ஈராக், சிரியா உட்பட பலநாடுகளுக்கும் நாம் மனப்பயணம் மேற்கொண்டு பல அனுபவங்களைப்பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.

நாவலை வாசித்து முடிக்கும் போது நாம் பெற்றுக் கொண்டது வெறுமனே கதையறிந்த அனுபவம் மட்டுமல்ல என்பதை மேலே பார்த்திருந்தோம். இதற்கும் மேலாக பொதுப்பாவனையில் இல்லாத கலைச்சொற்களைப் பாவனைக்கு வரக்கொணரும் ஒரு முயற்சியும் இதனூடாக மேற்கொள்ளப்பட்டிருப்பதும் மகிழ்வானதொரு விடயமாகும். வெறுமனே ரமணிச்சந்திரனின் புண்ணியத்தில் மட்டும் தமிழ் இலக்கியம் உயிர்பிழைத்துக் கொண்டிருக்குமேயானால் அறிவியல் விஞ்ஞானம் தொடர்பான கலைச்சொற்கள் நம்மிடம் அறிமுகப்படுத்தப்படும் வாய்ப்புகள் மிகக் குறைவாகவேஇருக்கும். நம்முடைய சூழலை மையப்படுத்திய இலக்கியங்கள் ஒருபுறமும், உலகியலின் ஓட்டங்களை உள்வாங்கி நம்மை வலுப்படுத்தி வளம் சேர்ப்பதற்கான பிறமொழி இலக்கியங்கள் மறுபுறமும், நம் ஒவ்வொருவராலும் உள்வாங்கப்படவேண்டும். இது குறுகிவரும் உலக சமுதாயத்தில் நிர்ப்பந்திக்கப்படாத ஒரு அவசியமுமாகும். இந்த வகையில் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் ஊக்குவிக்கப்படவேண்டும். முன்னொரு காலத்தில் மொழி பெயர்ப்புக்கான ஆர்வமும், முயற்சியும் சீன, ரஷ்யசார்புகளோடு மட்டுமே புலம் கொண்டிருந்தன. பின்னர் அவையும் ஆதரவு குறைந்து மந்தகதி நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தன. மீண்டும் இப்போது முன்னெடுக்கப்படும் புதிய முயற்சிகள் வரவேற்று ஆதரவளிக்கப்பட வேண்டியன. வெறுமனே அத்திய வசியமான தேவைகளைப் பூர்த்தி செய்வதே 'போதுமென்ற மனம்' என்று நாம் வாழாதிருக்கலாகாது. ஏனென்றால் இன்றைய உலகம் பல்வேறு காரணங்களாலும் குறுகி வருகின்றது. அமெரிக்க பங்குச் சந்தைகளின் புனித ஸ்தலமாகிய 'வோல்ஸ்ற்றீற்' நினைத்தால் உங்கள் கழுத்தில் தொங்கும் தாலிக்கொடியின் பெறுமதி நொடி நேரத்திலேயே குறைக்கலாம். புரியாத வகையில் உலகம் சூட்சுமமானது. புரிய முனைந்தாலோ சுகமான சுமையென்பது தெளிவாகும்! வாசிக்கும் தரமான புத்தகங்கள் ஒவ்வொன்றும் வாழ்க்கையின் வெளிச்சவீடுகள்!






## சந்தேக மணியத்தார்...

எனக்கொரு சந்தேகம் வந்தால் நித்திரைவராது பாருங்கோ...

என்னதான் இருந்தாலும் சந்தேகம் வந்த விஷயத்தை கிளியர் பண்ணவேணும் எண்டால் பக்கத்திலை இருக்கிற வெத்திலைப் பெட்டியைத் திறந்து அதில் ஒரு அகலமான வெத்திலையை எடுத்து சடக்கெண்டு காம்பை நகத்தால வெட்டி எறிஞ்சுபோட்டு அப்பிடியே முதுகில சுன்னாம்பைத் தடவி என்ர முதுகில இல்ல, வெத்திலையின்ர முதுகில தடவி அதோட காஞ்ச பாக்க வாயில போட்டு பல்லு உடைஞ்சுதோ பாக்கு டைஞ்சுதோ எண்டு தெரியாம எல்லாத்தையும் வாய்க்கபோட்டு குதப்போ குதப்பெண்டு குதப்பி தீர்வுகாணுற சுகம் இருக்கே அது ஒரு சுகம்தான்.

என்னசெய்ய போர்த்துக்கீசன் இஞ்சகொண்டு வந்து அறிமுகப்படுத்தின இந்த வெத்திலையின்ர "சென்ரிமென்ற்" இருக்கே அது பல கதை.

அதில ஒருகதை இன்னுமொரு கதை. இஞ்ச இருந்து பாகிஸ்தானுக்கு ஐந்நூறு மெற்றிக்தொன் வெத்திலையை அனுப்பப் போகினம்.

இதுசரி அப்பிடியெண்டா பாகிஸ்தான் காரர் இவையளுக்கு ஏதாவது கைமாறு செய்யவேணுமே.

செய்யாம விடுவினமே- இலங்கை கடற்படைக் காரருக்கு விமானங்களைக் கண்டுபிடிக்கிற ராடர் வசதியை செய்துகொடுக்கினமாம்.

அப்பிடியெண்டால் வெத்திலையை கொடுத்து ராடர் வாங்கிற கதையில்ல இது. இது ஒரு சென்ரிமென்ற்.

ஆனால் உந்த ராடரும் பாகிஸ்தானும் இலங்கையோட ஒட்டிக் கொண்டு வருயினம். இந்தியாவின்ர பெருமளவு இராணுவபலம் தென்னிந்தியாவில இருக்குதெண்ட கதையும் உங்களுக்கு தெரியுமெல்லே.

ஆகவே இந்த ராடரும், சாடரும் எங்கள அச்சுறுத்தப்போவதில்லை.

இதப்பார்த்து யார் பயப்படவேணுமெண்டு நினைக்கிறியள்.

நான் சொல்லமாட்டன் நீங்களாகவே ஊகிச்சுக் கொள்ளுங்கோ.



# குருத்தோலைகளுக்கு முதுசங்களின் செய்தி...

வளர்ந்த சில பிள்ளைகள் தமது வயது முதிர்ந்த பெற்றோர்களை தங்கள் வாழ்க்கையின் சுமையாகக் கருதுகின்றனர். அதன் வெளிப்பாடே முதியோர் இல்லங்களிலும் அநாதைகளாகவும் இன்று பல முதியோர்கள் காணப்படுகின்றனர்.

பெரும்பாலான பிள்ளைகள் தமது வயது முதிர்ந்த பெற்றோர்களை கைவிட்டு விடுவதற்கு பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன. அதாவது நாகரிக மாற்றத்திற்கேற்ப தங்களின் பெற்றோர்கள் நடந்துகொள்ளாமை இதனால் தமது நண்பர்கள் மற்றும் உறவினர்கள் தங்கள் வீடுகளுக்கு வருகின்றபோது வயது முதிர்ந்த பெற்றோர்களினால் தமது மரியாதை கௌரவம் பாதிக்கப்படுவதாக எண்ணுகின்றனர். மேலும் திருமணத்தின் பின் மருமகன், மருமகள், பிரச்சினைகள். இதனால் ஏதோ ஒரு பக்கத்தில் ஆதிக்கம் ஏற்பட மகனால் அல்லது மகளால் கைவிடப் படல் மேலும் தங்களின் பல்வேறுபட்ட செயற்பாடுகளுக்கு வயது முதிர்ந்த பெற்றோர் இடையூறுகளாக இருப்பதாக நினைக்கின்ற பிள்ளைகளாலும் வயதான காலத்தில் நோய் வாய்ப்படுகின்ற அவர்களை தங்களால் பராமரிக்க முடியாதென கருதுகின்ற பிள்ளைகளாலும், இப்பிரச்சினை ஏற்படுகிறது என அன்னை இல்ல உளவளத் துணையாளர் சசிகலா கூறுகின்றார். இதை விட ஒரு சில பிள்ளைகள் மேலும் ஒரு படி முன்னேறி தங்களின் வயது முதிர்ந்த பெற்றோரை தங்களின் பெற்றோர் எனக்கூட கூறுவதில்லை.

தங்களை பெற்று வளர்த்து இந்தச் சமூகத்தில் ஏதோ ஓர் நல்ல நிலைக்குக்கொண்டு வந்தவர்கள் அந்தப் பெற்றோர்கள் தான் என்பதனை ஏனோ இந்த கல்மனம் கொண்ட பிள்ளைகள் நினைக்கின்றார்கள் இல்லை. நாளைய உலகில் நாங்களும் காவோலைகள் என்பதனை இவர்கள் மறந்து விட்டனரா? எதிர்காலத்தில் இவர்களது பிள்ளைகள் இவர்களை இந்நிலைக்குத் தள்ளி விட்டால் அப்போது இவர்களது நிலைமை எப்படியிருக்கும் சற்று கற்பனை செய்து பாருங்கள் இன்று.

பல்வேறுபட்ட ஆசைகளை இப்போதே உங்கள் மனங்களில் ஏற்படுத்தி வைத்திருப்பீர்கள். வயது முதிர்ந்த காலத்தில் பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் சந்தோசமாக வாழ வேண்டும். நான் இறந்து போனாலும் எனது இந்த மகனே இறுதிக் கிரியைகள் எல்லாம் செய்ய வேண்டும் என உங்கள் உள்ளங்களில் வகை வகையான ஆசைகள் இருக்கும் அவை அனைத்தும் வீணடிக்கப்பட்டு நிறைவேறாமல் போகும் ஓர் நிலைமை உங்கள் பிள்ளைகளால் ஏற்பட்டால் உங்கள் நிலைமை எப்படியிருக்கும்?

**சுழியன்**

பிள்ளைகள் இல்லாமல் பராமரிக்க எவருமற்ற ஓர் நிலையில் முதியோர் இல்லங்களில் இருப்பது வேறு விடயம். ஆனால் இன்று நிலைமை அவ்வாறு அல்ல நாம் சந்தித்த அனைவரும் நிறைய பிள்ளைகளுடனும் வசதி வாய்ப்புக்களுடனும். வாழ்ந்தவர்கள் இன்று கோயில்களிலும் முதியோர் இல்லங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். சில வீடுகளில் உள்ள வசதி வாய்ப்புக்களை விட முதியோர் இல்லங்களில் நிறைய வசதி வாய்ப்புக்களுடன் வாழ்கின்றார்கள். ஆனால் வயது முதிர்ந்த காலத்தில் அவர்கள் எதிர்பார்ப்பது அதுவல்ல இறுதிவரை பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் ஒரு வேளை கஞ்சி என்றாலும் குடித்துக் கொண்டு ஒன்றாகவே மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பது தான் அவர்களது ஆசைகள். இவ்வாறான தமது பெற்றோரின் ஆசைகளைக் கூட நிறைவேற்றாத பிள்ளைகளை எந்த வகையினுள் சேர்ப்பது?

இங்கு நாம் கைவிடப்பட்ட பல முதியோர்களைச் சந்தித்தோம். அவர்களது வேதனையான உணர்வுகளை உங்களுக்காகத் தருகின்றோம்.

முதலில் எமது பயணம் கிளிநகர் முருகன் கோயில் நோக்கிச் சென்றது. அங்கு ஒருவர் தனது இரு கைகளையும் தலையணையாய்க்கொண்டு அழுக்கான ஆடைகளுடன் உறங்கிக்கொண்டிருந்த அவரை தட்டியெழுப்பியபோது சிறுமுனகலுடன் எழும்பி எம்மை பார்த்தபோது நிம்மதியான உறக்கத்தை குழப்பி விட்டீர்களே எனக் கேட்பது போல் இருந்தது. முகச்சவரம் செய்த நாள் நீண்டதாக இருக்க வேண்டும். மழைக்கால மேகக்கூட்டம் நடுநடுவே உள்ள வெண்முகில் கூட்டம் போன்று தலை மயிர்கள் நீண்டு அடர்ந்து காணப்பட்டன. அண்மையில் குளித்ததற்கான அறிகுறிகள் ஏதேனும் தென்படவில்லை. இருந்து என்ன இறந்து என்ன என்பது போல எழுந்து இருந்த அவர் சைகை மூலம் என்ன...? எனக் கேட்டார். அப்போது நாம் யார் என்பதனை அவருக்குக் கூறியபோது அதை செவிமடுத்ததாகத் தெரியவில்லை. பின்பு அவருடன் கதைத்த போதுதான் தெளிவாகியது. அவர் ஒழுங்காக பேசமுடியாதவர் என்பது இருந்தும் அவர் வழியில் சென்று கதைத்த வேளை விளங்கியது. அவர் ஐந்து பிள்ளைகளுடன் பூநகரியில் வாழ்ந்தவர் என்றும் பிள்ளைகள் திருமணம் செய்துவிட்டார்கள். (சைகை மூலம் கழுத்தில் தாலி கட்டுவது போல் செய்து காட்டுகிறார்.) பின்பு பிள்ளைகளுக்கும் தனக்கும் சண்டை எனவும் (இரு ஆட்காட்டி விரல்களை ஒன்றாகக் கொழுவி) அதனால் தான் இங்கு வந்து விட்டதாகவும், கூறுகின்றபோது வேதனையாக இருந்தது.

ஐந்து பிள்ளைகளையும் எவ்வாறான கஷ்டங்களையெல்லாம் அனுபவித்து வளர்த்து விட்டிருப்பார். ஆனால் இன்று இவரின் பிள்ளைகளோ இவரை அநாதையாக விட்டார்கள். சில வேளை இவர் நோய்களால் பீடிக்கப்பட்டுவிட்டுள்ளார்கள் இவரின் நிலை? இவரின் எதிர்காலம்? எல்லாமே கேள்விக் குறியா கவே உள்ளது.

அடுத்து நாம் அன்புச் சோலை மூதாளர் பேணலகத்திற்குச் சென்று பலரைச் சந்தித்தோம். அவர்களில் ஒரு சிலரின் நிலைமைகளைப் பாருங்கள் ஒருவயது முதிர்ந்த தாய் கூறுகின்றார். “எனக்கு நான்கு பிள்ளைகள் கடைசி மகன் மாவீரர், இரண்டு மகன்மார் சுவிஸ் நாட்டில், ஒரு மகள் கொழும்பில் மகள் என்னை வந்து கூட்டிக்கொண்டு போறன என்றுதான் சொன்னவ என்ன தான் இருந்தாலும் பிள்ளை



களுடன் இருக்கிறமாதிரி வராதுதானே.

அடுத்து திரேசம்மா என்கின்ற தாய் எனக்கு நான்கு பிள்ளைகள் நான் நான்கு வருசமாக இங்கு இருக்கிறன். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எல்லோரையும் பார்க்கவேண்டும் என்ற ஆசை இருக்கின்றது. இருந்தும் என்ன செய்யிறது அழுது அழுது எனக்கு ஒரு கண்ணும் தெரியாமல் போயிட்டுது (அவரது ஒரு கண் பார்வையற்றது)

இதை விட பத்துப் பிள்ளைகளை பெற்று வளர்த்து அளாக்கி விட்டு இன்று யாருமற்றவர் போல் முதியோர் இல்லத்தில் இருக்கும் இராசம்மா நிலைமையைக் கேளுங்கள்;

எனக்கு எழுபத்தேழு வயது. இரு பிள்ளைகளை ஆமிக்காரர் சுட்டுப்போட்டாங்கள் ஏனைய பிள்ளைகள் என்னை கவனிக்கிறதில்லை. எனது ஒரு மகன் எனது காணிகளை எல்லாம் எடுத்து விட்டு மருமகளின் பேச்சினைக் கேட்டுக்கொண்டு என்னை வெளியே போகச் சொல்லிவிட்டார். எனக்கும் நிறைய ஆசைகள் இருந்தது. ஆனால் இப்போது எல்லாம் வெறுத்துப் போய் விட்டது என அழுகையுடன் கூறுகிறார்.

இதைவிட எழுபது வயது நாகம்மா கூறும் போது தனக்கு ஏழு பிள்ளைகள் என்றும் ஒவ்வொருவரும் திருமணம் செய்து விட்டார்கள் என்றும் என்னை ஒருவரும் பராமரிக்காததால் தான் இங்கு வந்தேன் எனவும் கூறுகிறார்.

மேலும் வில்சன் ஐயா கூறும் போது, தனக்கு நான்கு பிள்ளைகள் எனவும் ஒருவர் மாவீரர் என்றும் ஏனையோர் திருமணம் செய்து ஒவ்வொரு இடத்தில் இருக்கின்றார்கள் எனவும் சோகமாகக் கூறுகின்றனர்.

இவர்களது நிலை இவ்வாறு இருக்க வேறு இரு முதியவர்களைச் சந்தித்தோம். அதில் ஒருவர் கிளிநகர் பகுதியில் துவிச்சக்கர வண்டி திருத்தும் கடை வைத்திருக்கிறார். தனக்கு ஒரு மகன் என்றும் அவா வவுனியாவில் உள்ளார் என்றும் தன் மகனிடம் செல்வதில்லை எனவும் முடியும் வரை உழைத்தே வாழ்வம் எனவும் கூறுகின்றார்.

மேலும் 93 வயதுடைய உதய நகரைச் சேர்ந்த சின்னையா என்பவர் தனக்கு பன்னிரண்டு பிள்ளைகள் எனவும் தான் ஒரு மகனின் பராமரிப்பில் உள்ளதாகவும் எவ்வித பிரச்சினையுமின்றி சந்தோசமாக இருப்பதாகவும், கூறுகின்றார். மருமகளும் தன்னிடம் மகள் மாதிரி நடந்துகொண்டிருப்பதாகவும், மகிழ்ச்சியாகக் கூறுகின்றார்.

இன்றைய குருத்தோலைகளாக இருக்கின்ற நீங்கள் நாளைய காவோலைகள் என்பதனை மறந்துவிடாதீர்கள். உங்கள் பெற்றோர்களை யாருமற்ற அநாதைகளாக தெருவிலும் முதியோர் இல்லங்களிலும் விடுவது மனிதநேயமற்ற நாகரிகமற்ற செயல். உங்களால் முடிந்த வரை அவர்களைப் பராமரியுங்கள். உங்களின் ஒரு சில நடவடிக்கைகளுக்காக அவர்களை ஒதுக்கி விடாதீர்கள். அவர்கள் ஆடம்பர வாழ்க்கையை விரும்பவில்லை இறுதிக் காலங்களில் பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் ஒன்றாக சந்தோஷமாக வாழவே விரும்புகின்றனர். பூஜிக்கப்பட வேண்டிய பெற்றோர்களை புறந்தள்ளி விடாதீர்கள்.




# சிந்திக்கத்தூண்டும் அறிவியல்

சந்திரனில் கால் பதித்துவிட்ட அறிவியலுக்கு இந்த பிரபஞ்சம் (உலகம்) பற்றிய முற்றுமுழுதான ஒரு பார்வை இன்னமும் கிடைக்க வில்லை. இதனால்தான் பிரபஞ்சத்தின் ஆரம்பம் பரிணாமம் அதன் முடிவு போன்ற சிக்கலான கேள்விகளுக்கு விடைதேடி அலையும் அறிவியலாளர்களால் சுனாமி, சூறாவளி, பூகம்பம் என்பவற்றினை கட்டுப்படுத்தமுடியாது போகின்றது.

எமது புவியை சுற்றியுள்ள வளி மண்டலமானது பிரபஞ்சத்தில் நெடுந்தூரத்திலிருந்து வரும் ஒளிக் கதிர்களுக்கு பெரும் தடையாக இருக்கின்றது. இதனால் விஞ்ஞானிகள் தொலைக் காட்டிகளை விண்கலங்களுடன் (satellite) இணைத்து விண்வெளியில் ஒரு ஒழுங்கில் சுற்ற விடுகின்றனர்.

விண்வெளியில் சுற்றும் இந்த தொலைக்காட்டிகள் பிரபஞ்சத்தில் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள விடயங்களை எல்லாம் படம்பிடித்து அவற்றைப் பற்றிய தகவல்களை ஆராய்ந்து பூமியில் இருக்கும் விஞ்ஞானிகளுக்கு அனுப்புகின்றன.

இதனடிப்படையிலேயே பிரபஞ்சத்தில் காணப்படும் ஏனைய கோள்கள் பற்றிய அறிவை நாம் பெறுவதோடு அதில் குடியேறும் சிந்தனையும் எம் மனதில் எழுந்துவிடுகின்றது. இதற்கு நாம் வாழும் புவிக்கோளில் காணப்படும் சூழ்நிலையே காரணமாக அமைத்துவிடுகின்றது.

அதாவது அண்மையில் ஏற்பட்ட சுனாமி அழிவும், அடிக்கடி தோன்றும் பூகம்பங்களும், திடீரென வெடிக்கும் யுத்த சூழ்நிலையும் மக்கள் மனநிலையினை மாற்றமடையச் செய்துள்ளது. இதுவே அறிவியல் மாற்றத்திற்கு ஏற்ப மக்கள் தமது இருப்பிட மாற்றங்களை தேர்வு செய்யத் தூண்டியுள்ளது.

ஆனால் மக்கள் இன்று கண்டம் விட்டு கண்டம் நகர்ந்து வசிப்பது போல கோள்விட்டு கோள் நகர்ந்து. தமது புதிய வாழ்வினைத் தொடங்கக்கூடிய வசதி வாய்ப்பினை அறிவியல் தொழில் நுட்பம் இன்னும் கொடுக்கவில்லையாகும்.

இதற்கு நீண்ட காலமும் அதிக செலவீனமும் அறிவியல் பாரம்பரியத்தில் தேவைப்படுகின்றது. இவ்வாறு தொடர்ந்து செல்லும் அறிவியல் புரட்சி காரணமாக ஒரு காலப்பகுதியில் மனிதன் சந்திரன், செவ்வாய் போன்ற மாற்றுக் கோள்களில் வாழ்வியல் போராட்டத்தினை தொடங்க வாய்ப்பு இருக்கின்றது.

இத்தகைய மாற்றுக்கோள் ஆய்விற்கு விண்வெளித் தொலைக் காட்டிகள் பலவிதமான தொழில்நுட்பங்களை உபயோகிக்கின்றன. இவற்றின் தொழில் நுட்பத்திற்கேற்ப பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

I. றேடியோ விண்வெளி ஆராய்ச்சி நிலையம்.
(Radio observato Ries)

II.மைக்ரோவேவ் விண்வெளி ஆராய்ச்சி நிலையம்.
(Microwave observaries)

III. இன்பிராட் விண்வெளி ஆராய்ச்சி நிலையம்.
(Infrared observories)

IV.சாதாரண ஒளிக்கதிர் விண்வெளி ஆராய்ச்சி நிலையம்.
(Visible spectrum observatories)

V.காமாக்கதிர் விண்வெளி ஆராய்ச்சி நிலையம்.
(Gammaray observatories)


VI.எக்ஸ்றே விண்வெளி ஆராய்ச்சி நிலையம்.
(X-Ray observatories)

என்பனவாகும்.

இவற்றில் X-Ray வடிவமானது 1895ஆம் ஆண்டு வில்கெம் றோஞ்சன் எனும் ஒரு ஜேர்மனிய பௌதீகவியலாளரால் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் கதிர்வீச்சின் முழுமையான குணாம்சத்தினை புரிந்துகொள்ளாத வில்கெம் றேஞ்சன் அதற்கு "X"கதிர் எனப் பெயரிட்டார்.

இந்த எக்ஸ்றேயின் சிறப்பு என்னவெனில் சாதாரண மனித கண்ணுக்குத் தெரியும் ஒளியை உறிஞ்சக்கூடிய ஊடகங்களினூடு இது உறிஞ்சப்படாது ஊடுருவிச் செல்வதேயாகும். ஒளியானது எமது உடலை ஊடுருவிச் செல்லாது இதனால்தான் சூரிய ஒளியில் எமது நிழல் நிலத்தில் தெரிகின்றது. ஆனால் எக்ஸ்றே கதிரானது எமது உடலை இலகுவாக ஊடுருவிச் செல்லக்கூடியது.

இன்று வைத்தியத்துறையில் எக்ஸ்றே எடுப்பது என்பது ஒரு சாதாரண விடயமாகிவிட்டது. இங்கே எக்ஸ்றே படம் எடுக்கும் இயந்திரத்தில் இரண்டு முக்கிய பாகம் உண்டு.



I.எக்ஸ்றேக் கதிரை வெளியேற்றும் பகுதி அல்லது எக்ஸ்றே முதல் (X-RaY Source)

எஸ். ஜெயர்

II.எக்ஸ்றேயை படமெடுக்கும் எக்ஸ்றே கமரா (X-Ray camera)

எக்ஸ்றே முதலில் இருந்து வெளிவரும் கதிரானது எமது உடலில் இருக்கும். தசையினூடு இலகுவாக ஊடுருவிச் சென்றுவிடுகின்றது. ஆனால் எமது எலும்பானது பெரும்பாலான எக்ஸ்றேக் கதிர்களை தடுத்துவிடுவதால் எக்ஸ்றே (Negative film) படத்தில் எலும்பு இருக்கும் இடமானது மற்றைய இடத்தினை விட வெள்ளையாகக் காட்சி தருகின்றது.

இவ்வாறு வைத்தியத்துறையில் எக்ஸ்றேயைப் பாவிப்பது போன்றே இன்று விண்வெளி ஆராய்ச்சியிலும், விண்வெளியில் இருக்கின்ற கருமைத் துவாரங்கள், சுப்பர் நோவாக்கள், கலக்கிகள் போன்றவற்றைப் படம் பிடிப்பதற்கும் அவற்றினை ஆராய்வதற்கும் பயன்படுகின்றன.

விண்வெளி எக்ஸ்றேக்கும் வைத்தியத்துறை எக்ஸ்றேக்கும் இருக்கும் முக்கியமான வேறுபாடு என்னவெனில் விண்வெளி எக்ஸ்றேயானது, எக்ஸ்றேயை வெளிவிடும் எக்ஸ்றே முதல்களையே படம்பிடிக்கக்கூடியது. அதாவது எக்ஸ் றேக் கதிரை வெளியிடும் ஒரு சுப்பர் நோவாவை விண்வெளி எக்ஸ்றே கமராவானது படம் எடுக்கக் கூடியது. வைத்தியத்துறையில் காணப் படும் கமராவால் முதலைப் படம் பிடிக்க முடியாது. வைத்தியத் துறை கமராவானது முதலுக்கு வெகு அருகில் இருப்பதால் முதலில்

(20ஆம். பக்கம் பார்க்க)




# யானைக்கால் நோய்

யானைக்கால் நோய் ஃபைலேரியா ஒட்டுண் ணிப் புழுக்களால் ஏற்படுகிறது. கியூலெக்ஸ் எனும் நுளம்பின் மூலம் இந்த ஒட்டுண்ணிகள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுகிறது. நுளம்பு ஒருவரது உடலில் இரத்தத்தை உறிஞ் சும் போது இந்த ஒட்டுண்ணிகளையும் சேர்த்து உறிஞ்சுகின்றது. பின் மற்றொருவர் உடலிலிருந்து இரத்தத்தை உறிஞ்சும் போது ஃபைலேரியா கிருமி அவரது உடலில் புகுந்து கொள்கின்றது.

எமது உடலின் கணுக்கால் பகுதிகளில் Lymphatic Fluid எனும் திரவம் மிகக் குறுகிய குழாய்கள் வழியாக மேல் நோக்கி சென்று கொண்டே இருக்கிறது. இத்திரவத்தை எடுத்துச் செல்லும் குழாய்களை ஃபைலேரியா கிருமிகள் தாக்குவதால் கணுக்காலுக்கு உள்ளேயே நீர் தேங்கி கால் வீக்கம் ஏற்படுகிறது. சிறிய எண்ணிக்கையில் உடலில் புகும் இக்கிருமிகள் அறிகுறிகள் இன்றி வளர்ந்து பெருகுகிறது. ஒரு மில்லிலீற்றர் இரத்தத்தில் 1000 கிருமிகள் வரை வளர்கின்றன.

இந்நோய் ஐந்து வயது வரையான குழந்தைகளை தாக்குவதில்லை. 15 முதல் 45 வயதுக்குட்பட்டவர்களையே அதிகமாக தாக்குகிறது. குளிர் காய்ச்சல் நெறிகட்டுதல், கணுக்கால் வீக்கம், குளிர்காய்ச்சல் வரும் போது கால்கள் சிவப்பு நிறமாக மாறுதல் ஆகியவை இந்நோயின் அறிகுறிகளாக இருக்கும்.

இந்நோயை பரப்பும் நுளம்புகள் இரவில் மட்டுமே யானைக்கால் நோயை பரப்புகின்றன. எனவே இந்நோய்க்கான அறிகுறிகள் உள்ளவர்களை இரவு பத்துமணிக்குப் பின்னரே இரத்தப் பரிசோதனை செய்யவேண்டும். இந்நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து விட்டால் குணப்படுத்துவது எளிது. கார்போமைசின் என்ற மாத்திரையை மூன்று வேளையும் தொடர்ந்து 12 நாட்கள் எடுத்து வந்தால் நோயைக் குணப்படுத்திவிடலாம்.

ஆனால் நோய் முற்றிவிடும் நிலையில் சிகிச்சை மூலம் காலில் ஏற்படும் கொப்புளங்களை பக்ரீரியாக்கள் மூலம் காலில் ஏற்பட்ட கொப்புளங்களை வீக்கத்தை குணப்படுத்துவது கடினம். இதற்கு பிரத்தியேகமான சிகிச்சை மேற்கொள்ளவேண்டும்.

யானைக்கால் நோயில் பாதிக்கப்பட்ட ஒருவர் பின்வரும் சில நடைமுறைகளை மேற்கொள்வது நன்று.

★ பாதிக்கப்பட்ட கை, கால்களை தினமும் இருமுறை சவர்க்காரம் பயன்படுத்தி கழுவ வேண்டும்.

★ குறிப்பாக இரவில் படுக்கமுன் கண்டிப்பாக கை, கால்களை சுத்தம் செய்யவேண்டும்.

★ கால்களை கழுவும்போது வெந்நீரை பயன்படுத்தக்கூடாது. சுத்தமான நீரையே பயன்படுத்தவேண்டும்.

★ கால்களை மேலிருந்து கீழாகக் கழுவ வேண்டும். கைகளாலேயே கழுவ வேண்டும். தேங்காய்நார், நகம், பிரஸ் போன்றவற்றை பயன்படுத்தக்கூடாது. கழுவிய பின் மெலிதான துணியால் ஒற்றி எடுக்கவேண்டும்.

★ ஏதாவது காயங்கள் இருப்பின் சோப்ராமைசின் போன்ற ஆண்டிபயாடிக் அல்லது மீட்டாடீன் போன்ற அண்ட்டி செப்டிங் களிம்பை பயன்படுத்த வேண்டும். அப்போது நகங்களை வெட்டி சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

★ உறங்கும்போது தலையணை அல்லது மென்மையான பலகையின் மேலே கால்களை உயர்த்திவைத்துக்கொண்டு உறங்குவது நன்று.

★ வெளியில் செல்லும்போது அவசியம் காலணிகள் அணிந்து செல்ல வேண்டும்.

யானைக்கால் நோய் வருமுன் காப்பது எளிது. வந்தபின் குணப்படுத்துவது கடினம். நுளம்புப் பெருக்கத்தை தடுத்து சுத்தமான சூழலை உருவாக்கி சுகமாக வாழுங்கள்.

# ஆஸ்துமாவை நிர்வகித்தல்

உங்கள் மருத்துவருடன் ஒன்றிணைந்து உங்கள் ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்துவது அல்லது கையாள்வது முக்கியமானதாகும். காற்று வழிகளின் கூருணர்வு மீள் செயற்பாடு ஆகியவற்றின் காரணமாகவே ஆஸ்துமா ஏற்படுகின்றது என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். தூண்டுதல் காரணமாக காற்றுவழிகள் சுருங்கும்போது சுவாசித்தல் கஷ்டமாக விளங்குகின்றது.

உங்கள் ஆஸ்துமாவை சரிவரக் கையாள்



வதன் மூலம் உங்கள் நுரையீரல்கள் இயன்றளவு திறமையாகச் செயற்படுவதையும் கடுமையான ஆஸ்துமா தாக்கத்தைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தைக் குறைப்பதையும் (நீக்கமுடியாவிட்டாலும்) நீங்கள் உறுதிப்படுத்துவீர்கள்.

உங்கள் ஆஸ்துமாவைக் கையாள்வதன் கருத்து என்னவெனில்,

*உங்கள் ஆஸ்துமாவின் கடுமையை அறிதல்.

*ஏதாவது தூண்டற் காரணிகளை இனங்காணுவதுடன் அவற்றை எவ்வாறு தவிர்த்தல்.

*சரியான மருந்துகளை எடுத்தல்.

*உங்கள் மருத்துவர் மூலம் கிரமமாக பரிசோதனைக்குட்படுவதை நிச்சயப்படுத்திக் கொள்ளுதல்.

உங்கள் மருத்துவரை நாடுங்கள்.

உங்கள் ஆஸ்துமாவைக் கையாள்வதற்கு உதவி புரியும் குழாயின் மிகவும் முக்கியமானதொரு உறுப்பினராக உங்கள் வைத்தியர் விளங்குகிறார். உங்கள் ஆஸ்துமா தொடர்பான வினாக்கள், கரிசனைகள் அல்லது விடயங்கள் குறித்து உங்கள் வைத்தியருடன் பேசுங்கள். ஏதாவது கட்டத்தில் எந்தளவில் சீர்கெட்டுள்ளது என்பதை அளவிடும் முகமாக உங்கள் ஆஸ்துமாவை கண்காணிக்கும்படி உங்கள் வைத்தியர் உங்களைக் கேட்கலாம். இது நீங்கள் ஆஸ்துமா நோய்க் குறிகளைக் கொண்டிருக்கும் போது நீங்கள் எந்த மருந்தை உபயோகித்தீர்கள் என்பதைப் பதிவுசெய்தலே ஆகும். அல்லது ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் "உச்ச ஓட்டமானியை" (Peak Flow Meter) உபயோகித்து பெறப்பட்ட பெறுமதிகளை உபயோகிப்பதாகும்.

உங்கள் "உச்ச சுவாசிப்பு ஓட்டத்தை" அல்லது உங்கள் நுரையீரலில் இருந்து எவ்வளவு வேகமாகக் காற்றுவெளியேறுகின்றது என்பதை உச்ச ஓட்டமானி அளவிடுகின்றது. உங்கள் ஆஸ்துமாவின் கடுமையை மதிப்பிடுவதற்கும், உங்கள் "சிறந்த நுரையீரல் தொழிற்பாட்டை" நிர்ணயிப்பதற்கும் இது உங்களுக்கும் உங்கள் வைத்தியருக்கும் உதவுகின்றது.

நீங்கள் சேகரித்த தகவலை உபயோகித்து உங்களுக்கான ஒரு நிர்வகிப்புத் திட்டத்தை வைத்தியர் உருவாக்குவார். உங்களுக்காக ஒரு எழுத்து மூல செயல்திட்டம் அல்லது உங்கள் ஆஸ்துமா மருந்து பற்றியவிளக்கங்கள் எழுதப்பட்ட ஒரு சிறிய அட்டை வழங்கப்படலாம். தினக்குறிப்பு அட்டைகள் உட்பட ஏனைய படிவங்களும் உபயோகிக்கப்படலாம்.

**ஆஸ்துமாவுக்குச் சிகிச்சை**

ஆஸ்துமா சிகிச்சைக்கு உபயோகிக்கப்படும் மருந்துகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1.நிவாரணிகள். 2. தடுப்பான்கள்.

நீங்கள் கற்பனை செய்வது போல இந்த மருந்துகள் வித்தியாசமான செயற்பாடுகளைக் கொண்டிருப்பதுடன் வித்தியாசமான வழிகளில் உபகோகிக்கப்படுகின்றன.

(தொடரும்)

# விடுதலை அமைப்புகளிடம் விமானங்கள்?

**குறைந்தபட்ச தேவை இவைதான்!**

சுலபமாகக் கையாள- manual control
இரண்டு பேர் இயக்க-Duel contol panel.
சிறிய ஓடுபாதைக்கு-Hydraulically operated Speed breaks.
குறைந்த தூரத்தில் மேலுயர-Low MTW (Maximum Takeoff Weight)



சர்வதேச அளவில் பல நாடுகளைத் தூங்க விடாமல் செய்து கொண்டிருக்கும் தலைப்பு இது. எந்தெந்த நாடுகளுக்கெல்லாம் எதிராக விடுதலை அமைப்புக்கள் ஆயுதப் போராட்டங்களில் ஒரு குறிப்பிட்ட அளவுவரை வளர்ந்து விட்டிருக்கிறார்களோ, அந்தந்த நாடுகள் எல்லாம் ஏதோ ஒரு காலகட்டத்தில் இந்தச் சாத்தியத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்தே தீரும்.

அது உடனடியாகவும் இருக்கலாம். அடுத்த மாதம் அல்லது அடுத்த வருடமாகவும் இருக்கலாம். நாலைந்து வருடங்களின் பின்னராகவும் இருக்கலாம்.

இந்தக் காலகட்டம் "சம்பந்தப்பட்ட" நாட்டுக்கு எதிராக போராடும் விடுதலை அமைப்பின் Capabilityயில் தங்கியிருக்கிறது.

சில விடுதலை அமைப்புக்கள் இப்போதே விமானங்களுடன் தயாராக இருக்கலாம்.
அப்படியிருந்தால்-
அந்த நாடு கவலைப்படுவதற்கு நிறையவே பிரச்சனைகள் இருக்கின்றன.

விடுதலை அமைப்புக்களிடம் துப்பாக்கிகள் இருக்கின்றன. ஏவுகணைகள் இருக்கின்றன. வேகப் படகுகள் இருக்கின்றன. medium size கப்பல்கள் இருக்கின்றன என்பதெல்லாம் அவ்வப்போது செய்திகளில் அடிபடும் விஷயம்தானே. இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு ஒரு நாட்டின் ராணுவத்தை எதிர்த்துப் போராடி வருகிறார்கள். இவற்றையெல்லாம் வைத்திருக்கும் போது கிடைக்கும் advantageஐ விட ஓரிரு விமானங்களையும் கையில் வைத்திருப்பதால் கிடைக்கும் advantage ஏன் அவ்வளவு பெரிய முக்கியத்துவமாகப் பாவிக்கப்படுகிறது என்ற கேள்வி உங்களுக்குத் தோன்றலாம்.

நியாயமான கேள்விதான்.

இந்த advantageக்குப் பெயர் military balance-ராணுவச் சமநிலை.

விடுதலை அமைப்பு ஒன்றிடம் விமானங்கள் இருக்குமென்றால், அந்த விடுதலை அமைப்புக்கும் அவர்கள் எதிர்த்துப் போராடும் நாட்டின் ராணுவத்திற்கும் இடையிலுள்ள ராணுவச் சமநிலை தலைகீழாக மாறிப் போகும்.
அது எதில் கொண்டு போய் விடுமென்றால்-
Military of a country Vs Freedom fighters என்பதிலிருந்து களம் Military of a country Vs military of a territory என்ற வித்தியாசமான களத்தில் போய்ச்சேரும்- போரின் போக்கே தலைகீழாக மாறிப்போகும்.

இதைக் கொஞ்சம் எளிமையாக விளக்கிப் பார்க்கலாம்.

ஒரு நாடு தனது படையின் கேந்திர நிலைப்பாட்டுத் திட்டமிடலை (That's locational deployment of military) எப்படித் திட்டமிட்டிருக்குமென்றால் அவர்கள் எதிர்த்துப் போராடவேண்டியிருக்கும் எதிரியின் பலத்தை கணக்கில் எடுத்துத்தான்.

அந்த நாடு எதிர்த்துப் போராட வேண்டியிருப்பது ஒரு விடுதலை அமைப்பு என்றால் இந்தத் திட்டமிடல் இலேசான காரியமல்ல. அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

1. விடுதலை அமைப்பின் முழுமையான பலம்-ஆள் பலம், ஆயுதபலம், தளபாடநகர்வு வசதிகள்- ராணுவத் திட்டமிடல்காரர்களுக்கு துல்லியமாக தெரியவராது. ஒரு குத்து மதிப்பான ஊகத்தில்தான் திட்டமிட வேண்டியிருக்கும்.
2. விடுதலை அமைப்பின் ஆயுத வளர்ச்சி விகிதம் சீராக இருக்காமல் அதீத ஏற்ற இறக்கங்களுடன் இருக்கலாம் என்பதால் வருங்கால போர்த் தளபாட சாத்தியங்களை ஊகித்து அதற்கேற்பத் திட்டமிடுவது கஷ்டம்.

இந்த இரண்டும்தான் ஒரு நாட்டின் ராணுவம் அவர்களை எதிர்த்துப் போராடும் விடுதலை அமைப்புக்கு எதிராக கேந்திர நிலைப்பாட்டுத் திட்டமிடலைச் செய்யும் போது இருக்கும் மிகப்பெரிய சவால்கள்.

சம்பந்தப்பட்டது நாடு Vs விடுதலை அமைப்பு என்றில்லாமல் நாடு Vs நாடு என்ற ரீதியில் இருந்தால் இந்தத் திட்டமிடல் அந்தளவு கஷ்டமில்லை. உதாரணமாக இந்தியாவையும் பாகிஸ்தானையும் எடுத்துக் கொண்டால் இந்தியாவின் ராணுவப் புலனாய்வுப்பிரிவு பாகிஸ்தான் ராணுவத்தின் Future developments பற்றி ஒரு கணக்கே வைத்திருக்கும். அதாவது 2005ல் அவர்களிடம் புதிதாக என்ன ஆயுதங்கள் வந்து சேரும், 2006ல் என்ன யுத்த தளபாடங்கள் கிடைக்கலாம், அவை எந்தெந்தப் பகுதிகளில் நிலைகொள்ள வைக்கப்படலாம் என்பது போன்ற ஒரு timeline sketch இருக்கும். அதற்கு ஏற்ற விதத்தில் இவர்களது கேந்திர நிலைப்பாட்டுத் திட்டமிடல் இருக்கும்.

இந்தியாவின் ராணுவப் புலனாய்வுப் பிரிவின் timeline sketchன்படி பாகிஸ்தான் 2007ல் 5 long range surface to surface missilesகளை ராணுவத்தில் புதிதாக சேர்த்துக் கொள்ளச் சந்தர்ப்பம் இருக்கிறது என்று தெரிந்தால், உடனே-

- -அந்த ஏவுகணைகளை எந்தப் பிரதேசத்தில் வைப்பார்கள் என்பதை ஊகிக்கலாம்.
- -எத்தனை ஏவுகணைகளை ஒரேயிடத்தில் வைப்பார்கள் என்பதை ஊகிக்கலாம்.
- -அதற்கான புதிய ஏவுதளம் ஒன்று அமைக்கப்படுமா என்பதை ஊகிக்கலாம்.
- -அப்படி அமைக்கப்பட்டால் அந்தத்தளம் இந்திய-பாகிஸ்தான் எல்லையின் எந்தப் பிரசேத்தில் அமையலாம் என்பதையும் ஊகிக்கலாம்.

இந்த ஊகங்களின் அடிப்படையில் இந்தியா தனது படைத்தளங்களை எந்தெந்தத் திக்கில் எவ்வளவு விஸ்தீகரிக்க வேண்டும் என்று அடுத்த 5 ஆண்டுகளுக்குத் திட்டமிடும்.

ஆனால் ஒரு நாட்டுக்கு எதிராக போராடுவது ஒரு நாட்டின் ராணுவமல்ல, ஒரு விடுதலை அமைப்பு என்றால் இந்தத் திட்டமிடல் உன்னைப்பிடி என்னைப்பிடி என்று தலையிடி பிடித்த வேலை.

ஒரு மாதிரியாக ஊக அடிப்படையில் அப்படி இப்படி ஒப்பேற்றித் திட்டமிட்டு அதன்படி locational deployment of militaryயை அமைக்கலாம். ஆனால் இவர்களை எதிர்க்கும் விடுதலை அமைப்பு இவர்கள் எதிர்பாராத யுத்த தளபாடம் ஒன்றைக் களத்தில் கொண்டு வந்தால் நாட்டின் ராணுவ கேந்திர நிலைப்பாட்டுத் திட்டமிடல் பொல பொல வென்று சரிந்து போகும்.

அப்போதுதான் ராணுவச் சமநிலை குழப்பும்! விடுதலை அமைப் பின் கை ஓங்கும்!

அத்துடன் என்ன நடக்குமென்றால்

## விடுதலை அமைப்புக்களின் Shoppin[g lis]... இருக்கக்கூடிய சில விமான[ங்]...



### T-3A Firefly

Thrust-260 Horsepower.
நீளம்-24அடி 9அங்குலம்.
உயரம்-7அடி 9அங்குலம்.
அதிகபட்ச மேலேறுநிறை-1159Kg.
வேகம்-155Miles/Hr.
விலை-3லட்சம் டொலர்.

அமெரிக்க விமானப்படை பயிற்சிகளுக்கு பயன்படுத்தும் விமானம்.

இரண்டு விமானிகள் அமரக்கூடிய விமானம்.

முழுமையான composite structure இருப்பது பிளஸ் பொயின்ட்.

Fixed landing gear இருக்கிறது.

AEIO-540-D4A5 என்ஜின்.

1991ல் முதன்முதலில் பறக்கத் தொடங்கிய மொடல். பெரியளவில் இதுவரை விபத்துக்கள் இல்லை. மூன்று விபத்துக்களில் இரண்டு விமானிகளின் கவலையீனத்தால் ஏற்பட்டவை! இலகுவில் பாகங்களாக கழட்டிப் பூட்டலாம். The fuel is automatically transferred by an engine-driven pump. பெரிய சிக்கல் கொடுக்காத விமானம்..



### Pilatus P-7...


நீளம்-33அடி 3அங்குல...
உயரம்-10அடி 8அங்குல...
அதிகபட்ச மேலேறுநி...-22...
அதிகபட்ச வேகம்-5Km/...
விலை-4லட்சத்து 40ஆம் ...

சுவிஸ் தயாரிப்பு. புதிய ...
um external load-1,040kg (22 lb...
ப்பது பிளஸ்ஸும் இல்லைமை...
இல்லை என்ற அளவில் பாயி...
முதல் விமானம் பறந்தது 4ல்...
விமானம் என்றாலும் இதேறுவ...
தயாரிப்பான PC-9ஐ விட தி ...
என்ஜின்-ஆனால் நடுத்தர oad...
யான என்ஜின். Low acquin a...
operating costs. தொழில்நுட்பரீதி...
ம் Plus points:

Global Positioning System S)
Radar Altimeter
Attitude Heading Referencstem
Emergency Locator BeacoT)
Air Data Computer

நல்ல விமானம். ஆனால் ...ல அதிகம்! Primary Flight DisPFD ...dary Flight Display (SFD) ...e an...ry Instruments Display ParSDP... cockpitல் இருப்பது விமா... சுலபமாக்கக்கூடியது.

**சர்வதேச புலன...**
**கனடாவிலிருந்து ரிஷி**



ர்!
ntrol
anel.
erated

MTW



இவர்கள் எதிர்ப்பது விடுதலை அமைப்பு என்ற நிலைப்பாடு போய், பிரதேச ராணுவம் என்ற நிலை ஏற்படும்.

இந்த இடத்தில்தான் விமானங்கள் வருகின்றன!

ஒரு நாடு தனது ராணுவ முகாம்களை அமைக்கும் போது அவை தங்களை எதிர்க்கும் விடுதலை அமைப்பின் தாக்குதல் rangeக்குள் வராமல் இருக்கும்படி திட்டமிட்டுத்தான் அமைத்திருக்கும்.
அந்தத் திட்டமிடலுக்கு அவர்கள் பயன்படுத்துவது சம்பந்தப்பட்ட விடுதலை அமைப்பின் கைகளில் இருப்பதாக இவர்கள் நம்பும் ஆயுதங்களின் rangeஐ மனதில் வைத்துத்தான்!

உதாரணமாக ராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ள location மூன்று திசையிலும் நெடும் தரையாகவும், ஒரு திசையில் 3 kmக்கு அப்பால் கடலாகவும் இருக்கிறதென்றால் இவர்கள் முக்கியமாக கவனத்தில் எடுப்பது தரைப்பகுதியிலுள்ள மூன்று திசைகளிலும் விடுதலை அமைப்புக்களின் தரை நகர்வு, அவர்களிடமிருக்கும் ஆயுத rangeக்கு குறைவாக வராதபடி பார்த்துக் கொள்வதும், நான்காவது திசையிலிருக்கும் கடலில் இருந்து வரக்கூடிய தாக்குதல், ஒரு சிறு படகிலிருந்து ஏற்படுத்தப்படக் கூடிய தாக்குதல் rangeஐவிட தூரம் அதிகமாக இருப்பதும், கடல் இருக்கும் திசையில் விடுதலை அமைப்பு கடலுக்கும் ராணுவ முகாமுக்கும் இடையிலுள்ள தரைப்பகுதிக்குள் ஊடுருவ விடாது செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் மாத்திரமே! (புரிகிறதா?.. புரியாவிட்டால் வாக்கியத்தை மீண்டுமொருமுறை படித்துப் பார்க்கவும்)

இதே பாணியில்தான் நாட்டிலுள்ள சகல ராணுவ முகாம்களும் திட்டமிடப்படும்.

ஆனால்-

விடுதலை அமைப்பிடம் விமானம் கிடைத்து விட்டால் இந்தத் திட்டமிடலில் நிறையவே ஓட்டைகள் விழுந்து விடும்.

விமானத்தின் altitude, speed, இவர்களின் கையிலிருக்கும் விமான எதிர்ப்பு பீரங்கிகளின் range, விமானத்தை detect பண்ணும் raderகளின் செயல்திறன், விமானம் வருவது கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வளவு குறுகிய நேரத்தில் இவர்களால் தங்களது விமானப்படை விமானமொன்றை அந்த இடத்திற்கு கொண்டு வர முடியும் என்ற கணக்கு, இவர்களது விமானப்படைத்தளம் சம்பந்தப்பட்ட ராணுவ முகாமிலிருந்து இருக்கும் தூரம் என்று பல விஷயங்களை கணக்கில் எடுத்து இவர்களது முகாம்களை மாற்றியமைக்க வேண்டும். அல்லது நகர்த்த வேண்டும்.

இது இலேசில் முடியக்கூடிய காரியமல்ல!

இதனால்தான் விடுதலை அமைப்புக்களின் கைகளில் விமானம் கிடைக்கிறது என்று தெரிந்தால் நாடுகள் அலறுவது.

இப்படியான சூழ்நிலையொன்று ஒரு நாட்டுக்கு ஏற்பட்டால், அந்த நாடு செய்யக்கூடிய முன்னேற்பாடு இரண்டே இரண்டுதான்.


ஒன்று நான் ஏற்கனவே கூறியதுபோல் அவர்களது locational deploymentஐ முழுமையாக மாற்றியமைக்க வேண்டும். (இது பலவிதமான operational disadvantageகளை ஏற்படுத்தி, தலையிடி கொடுக்கும்.)

அல்லது இரண்டாவது சம்பந்தப்பட்ட நாட்டைச் சுற்றி கடல் இருந்தால் Ocean to air battleல் திறமைசாலியான ஒரு நண்பனை வைத்திருக்கவோ,
அல்லது,
20-25 நிமிடங்களுக்குள் நாட்டின் Airspaceக்குள் நுழையக்கூடிய தூரத்தில் பலமாக இருக்கும் வேறு ஒரு நண்பனை வைத்திருக்கவோ வேண்டும்.

இரண்டும் இருந்தால் இன்னும் விஷேசம்!

சரி. விடுதலை அமைப்புக்களுக்கு விமானங்கள் வைத்திருப்பதால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்கள் என்ன?

முக்கியமான advantage நான் ஏற்கனவே கூறியது போல எதிரியின் பொருத்தமற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களை சுலபமாக நிர்மூலமாக்குவது. இதற்கு அவசியம் தேவையானது விமானம் என்பதை விட சில குறிப்பிட்ட வகை விமானங்கள் அல்லது சில குறிப்பிட்ட செயற்பாடுகளைச் செய்யக் கூடிய விமானங்கள்!





இந்த விஷயம் தான் இதிலுள்ள trump card!

விடுதலை அமைப்பு, சரியான செயற்பாடுடைய சரியான விமானத்தை சரியான நேரத்தில் கொண்டு வர முடியுமென்றால் அவர்கள்தான் ராஜா!

எப்படியான வகை விமானங்களை விடுதலை அமைப்பக்கள் வைத்திருக்கலாம்? அல்லது, எப்படியான வகை விமானங்களை வைத்திருப்பது நன்மை தரும்?

இது விடுதலை அமைப்புக்கு விடுதலை அமைப்பு அவர்களது situationக்கு தக்கபடி மாறுபடும்.

உதாரணமாக ஒரு விடுதலை அமைப்பு ராணுவ ரீதியாக இயங்குவது முற்று முழுதாக அவர்களை எதிர்க்கும் நாட்டின் எல்லைக்குள் என்றால் ஒரு வகை விமானங்கள் கை கொடுக்கும்.
அதேபோல் ஒரு விடுதலை அமைப்பு எதிர்க்க வேண்டிய நாட்டிற்கு அண்மையிலுள்ள வேறு நாடு ஒன்றில் இரகசிய விமானத்தளம் ஒன்றை வைத்திருக்க முடியுமென்றால் வேறு வகை விமானங்கள் கை கொடுக்கும்.

இதில் சொல்லப்பட்ட முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் இடையிலுள்ள முக்கிய வேறுபாடு-
முதலாவதில் தாக்குதல் விமானம் தாக்கப்பட வேண்டிய நாட்டின் வான் எல்லைக்குள்ளேயே எழுப்பி, பறந்து, தாக்கி, தரையிறங்க வேண்டும்.
இரண்டாவதில், சம்பந்தப்பட்ட நாட்டின் Airspaceக்கு வெளியே take off, landing இரண்டையும் செய்யலாம் என்பதால் கூடுதல் வசதி.

முதலாவதில் உள்ள சூழ்நிலைக்கு எந்த வகை விமானங்கள் தேவைப்படும்.

அது, சில காரணிகளைப் பொறுத்திருக்கிறது. அவற்றையும் பாருங்கள்.

1. விடுதலை அமைப்பு விமானத்தை ஒரு நாட்டுக்குள் அந்த நாட்டின் ராணுவத்திடம் அகப்படாமல் கொண்டு வந்து சேர்க்கக்கூடிய வகையில் விமானம் இருக்க வேண்டும்.

2. சம்பந்தப்பட்ட விமானம் 5 இலிருந்து 10 பாகங்களாகப் பிரிக்கப்பட்டு மீண்டும் சுலபமாக ஒன்று சேர்க்கப்படக்கூடிய விமான ரகமாக இருக்க வேண்டும்.

3. இலகுவாக மறைத்து வைக்கப்படக் கூடிய விமானமாக இருக்க வேண்டும்.


4. விடுதலை அமைப்பின் runwayக்கு அந்த விமானம் taxi பண்ணப்பட்டுத்தான் கொண்டு வரப்பட வேண்டும் என்ற ரீதியிலான விமானமாக இருக்கக்கூடாது. (அத்ாவது விமானம் அதன் hangerஇலிருந்து சக்கரங்கள் அல்லது towing truck மூலமாக நகர்த்பதப்பட்டுத்தான் runwayக்கு வரவேண்டுமென்ற நிலைமை இல்லாமல், விமானத்தை runwayயில் வைத்தோ, அல்லது runwayக்கு மிக அருகிலுள்ள கட்டடமொன்றில் வைத்தோ ஓரிரு மணி நேரத்துக்குள் quick assemple பண்ணக்கூடிய விமானமாக இருக்க வேண்டும்.)

5. Single Engine விமானமாகவும் இருக்கலாம். Twine engine விமானமாகவும் இருக்கலாம். ஆனால், நிச்சயமாக Duel crew operated விமானமாக இருக்க வேண்டும். (இரண்டு விமானிகள்)

6. Duel Control functions இருக்கும் விமானமாக இருக்க வேண்டும்- முக்கியமாக Dual throttles, Duel elevation control போன்றவை இருந்தேயாக வேண்டும்.

(22ஆம் பக்கம் பார்க்க..

## opping listல் இருக்கவேண்டிய அல்லது விமானங்களும் விபரங்களும்.



### tus PC-7

டி 3அங்குலம்.
அடி 8அங்குலம்.
லேறுநிறை-2250Kg.
வேகம்-556Km/Hr.
40ஆயிரம் டொலர்.

திய தொழில்நுட்பம். Maxim 040kg (2,292 lbs) ஆக இரு இல்லை மைனஸ்ஸும் ளவில் பரவாயில்லை ரகம். றந்தது 1994ல்(MK2). புதிய ம் இதே நிறுவனத்தின் விட சக்தி குறைவான டுத்தர payloadக்கு அருமை w acquisition and life-cycle ாழில்நுட்ப ரீதியில் இருக்கு

System (GPS)

eference System (AHRS)
Beacon (ELT)

னால் விலை கொஞ்சம் ght Display (PFD) Secon SFD) Engine and Seconda ay Panel (ESDP)ஆகியவை விமானிக்கு வேலையைச் து.




### T-37 Tweet

என்ஜின்கள்-2
என்ஜினின் நீளம்-29அடி 3அங்குலம்.
அதிகபட்ச மேலேறுநிறை-2981Kg.
அதிகபட்ச வெடிகுண்டுகள்-250Kg.X2.
Hydraulically operated speed brakes.
விலை-1லட்சத்து 65ஆயிரம் டொலர்.

இது கொஞ்சம் பழைய மொடல் ஆனால் இன்னமும் பாவனையில் இருக்கிறது. முதல் விமானம் பறந்தது 1955ல்(T37A) 1959ல் T37B பாவனைக்கு வந்தது. இதுவரை சுமார் 1000 விமானங்கள் தயாரிக்கப்பட்டு விட்டன-அதில் 507 விமானங்கள் இன்னமும் அமெரிக்க விமானப்படையிடம் இருக்கின்றன. அமெரிக்கா தவிர்ந்த வேறு நாடுகளின் விமானப்படைகளிடமும் பாவனையில் இருக்கும் விமானம். போத்துக்கல், கொலம்பியா, பெரு, கிரீஸ் போன்ற கொஞ்சம் அப்படி இப்படியான நாடுகளின் விமானப்படைகளிலும் இது இருந்ததால், ஆயுதக் கருப்புச் சந்தையிலும் கிடைக்க சந்தர்ப்பம் உள்ள விமானம்! 16mm gun camera பொருத்தப்படக்கூடிய விமானம்-அத்துடன் Six rubber-cell, interconnected fuel tanks in each wing feed the main tank in the fuselage. விலை குறைவான, இலகுவில் இயக்கப்படக்கூடிய விமானம்.

னாய்வு






# கல்

முல்லைக்கோனேஸ்

இரண்டாவது மைல் கல் முல்லைத்தீவில் இருந்து திருகோணமலைக்குப் போகும் நெடுஞ் சாலையில் இருக்கிறது. 'வெள்ளக்காறன்ர காலத்தில மலைக்குப் போறதுக்கெண்டுதான் இந்த றோட்டுப்போட்டது. பிறகு இடையில பறையனாறு பாயிறதால நிண்டுபோச்சு.' ஐயா சொன்னார். திருகோணமலையை மலை என்றுதான் சொல்வார். அந்தக் கல் வீட்டிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் முல்லைத்தீவைப் பார்க்க வலப்பக்கமாக வீதியிலிருந்து சற்றுத் தள்ளி மேடான பகுதியில் இருந்தது. அதைச் சுற்றி கோரைப்புல்லும், தகரைச் செடியும் முடிதும்பையும் மண்டிக் கிடந்தன. எனக்கு ஞாபகம் தெரிந்த நாட்களிலிருந்து அதனைப் பார்த்திருக்கிறேன். வெள்ளைப் பெயின்ரடித்து கறுப்பு நிறத்தில் 2 என்று எழுதப்பட்டிருக்கும். நான் பள்ளிக்குச் செல்லாத பருவத்தில் அந்தக் கல்லடிக்குப் போவதற்கு ஐயாவைக் கேட்பேன். ஐயா வழுவழுவென்று பளபளக்கும் தோழில் என்னை வைத்துக்கொண்டு கல்லடிக்குப் போய் அதன் மேல் இருத்தி விடுவார். நான் அதில் இருந்தபடியே கால்களை முன்னும் பின்னுமாக ஆட்டுவேன். ஏதோ மிகப்பெரிய ஆனந்தமான விசயமாகவே அப்போது எனக்கது இருந்தது. தெருவில் போவோர் வருவோரைப் பெருமிதமாகப் பார்ப்பேன்.

2ஆவது 'மைல்' சிலாவத்தை, முல்லைத்தீவு இப்படிப் போட்டால் தான் கடிதம் எங்களுக்கு வரும். அப்படி இந்தக் கல்லுக்கு ஒரு அடையாளம் இருந்தது. நான் பாடசாலைக்குப் போற காலத்தில் நடந்துபோய் அந்தக் கல்லை ஒருமுறை தொட்டுவிட்டுத்தான் போவேன். அப்போது இளவெயில் சாலையெங்கும் படர்ந்திருக்க மைல் கல்லின் நிழல் நீண்டு கிடக்கும். கல்லைச்சுற்றி இருந்த முடிதும்பைச் செடியில் இளம்பச்சையும், மஞ்சளும் கலந்த குளிர்வர்ணத்தில் வண்ணத்துப் பூச்சிகள் மொய்த்திருக்கும். அரவம் கண்டதும் எல்லாம் ஒரே சேரச் சிறகடித்து எழுந்து, பறந்து மீண்டும் அமர்ந்துகொள்ளும். தகரைச் செடியின் மஞ்சள் வர்ணப் பூக்கள், இதழ் விரித்து பச்சைப் பசும் தளிர் இலைக் கடலில் பரவுரூப அலங்காரம் போல அழகு சேர்த்துக்கிடக்கும். அந்தப் பசுமையான ஈரமான மேட்டு நிலத்தில் செயற்கை ரூபம் கொண்ட அந்த மைல் கல் ஏதோ சாமியின் சிலைபோல நிமிர்ந்து நின்றது. சில வேளைகளில் சிவலிங்கம் போன்று தோற்றம் தருவது போலவும், சில வேளைகளில் விரிந்த கண்களும், புன் சிரிப்பும் கைகளில் ஆயுதங்களுடனும் தோற்றம்தரும் சிற்பமாகவும் அச்ச மூட்டும். அப்போது மனது அதிர்ந்து கண்களை மூடித் தலையை ஆட்டிவிட்டுப் பார்த்தால் மறுபடியும் மைல்கல்லாக அமைதியின் வடிவமாக நிற்கும். எனக்கும் அந்த மைல் கல்லுக்கும் என்னுடைய முப்பது வயதுவரை பந்தமிருந்து வ்ந்ததை நான் இப்போதுதான் உணர்கிறேன்.

பதினைந்து வயதில் முல்லைத்தீவு ரவுணுக்குச் சினிமாவுக்குப் போய் வரும்போது கொக்கிளாய் போகும் பஸ்ஸில் ஏறி றைவருக்குப் பின்னால் நின்றுகொள்வேன். வீட்டின் அடையாளம் பிடிப்பதற்காய் மைல்கல்லைக் கண்கள் தேடும். பாலமுடக்கில் பஸ் திரும்பும் போது ஒளி பீச்சியடிக்க வெள்ளை வெளேர் என்று மைல்கல் பிரகாசிக்கும். ஆறாம் வகுப்பில் முதன்முதலாக முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திற்குப் போனபோது வகுப்பாசிரியர் எல்லாரிடமும் முகவரி கேட்கும் போது 2ஆவது மைல் சிலாவத்தை, முல்லைத்தீவு என்று சொன்னதும் 'ஆற்ற மகன் தம்பி நீர்?' என்று யாராவது கேட்கும் போதெல்லாம் நடராசாவின் மகன் என்று நான் சொல்ல, ஆர் 2ஆம் கட்டை நடராசாவின் மகனோ? என்கின்ற பொழுதுகளிலும் எங்களுக்கும் அந்த மைல் கல்லுக்கும் இருக்கின்ற உறவு ஆழமானதாக அர்த்தப்படும். அது எங்கள் ஐயா, ஐயாவின் ஐயா காலத்துக்கும் முந்திய உறவின் நீட்சியாகத்தெரியும். 'பூலிப் பெத்தாச்சி கடகத்தை அந்தக் கல்லில் வைத்துவிட்டுத்தான் பஸ்சுக்காய்க் காத்திருப்பா?' அம்மா கூறிய சின்ன வயது ஞாபகம்.

என் இருபதாவது வயதில் திருகோணமலையில் இருந்து இடம்பெயர்ந்து வந்த சுபத்திரா எங்கள் மாமாவின் காணிக்குள் குடியிருந்தாள். காவுளாயும் காயாம்பற்றையுமாயிருந்த காணி புதுப்பொலிவு பெற்றது. பசுமை பொழியும் புது நிலமாக, ஊரின் அழகெல்லாம் ஊற்றிவைத்திருக்கும் எழில் நிலமாக என் கண்முன்னால் அது மாறக்கண்டு நான் வியந்து நின்றேன்.

அவள் காணிக்குப் போகும் நடைபாதையை அந்த மைல் கல்லுக்குப் பக்கமாகப் புழக்கத்தில் வைத்திருந்தாள். காலைக் கடனுக்காக சாறத்தை மடித்துக் கட்டிக்கொண்டு தெருவைக் கடந்து நான் பனை வடலிப் பற்றைக்குப் போகும்போது அவள் தண்ணீர்க் குடத்துடன் தெருத் தாண்டித்தான் வீடு நோக்கிப் போய்க்கொண்டிருப்பாள். ஆரம்பத்தில் எதேச்சையாகத்தான் நான் அவளை அவ்வாறு சந்தித்தேன். பின்னர் அவள் தெருவைக் கடக்கும் நேரம் பார்த்தே நானும் செல்ல ஆரம்பித்தேன். அவ்வாறு அவள் போகும் நாட்களில் சில கணங்கள் மட்டும் என்னைப் பார்த்துவிட்டுத் திரும்பிவிடுவாள். அந்தப் பார்வையில் எந்தச் சலனங்களையும் என்னால் அப்போது ஊகிக்க முடிந்ததில்லை. ஆனாலும் அவளைப் பார்த்த கணம் முதல் அவளை அடுத்த தடவை எப்போது காண்பேன் என்ற எண்ணத்தில் வேறு நினைவுகளற்று அலைக்கழிந்து திரிந்திருக்கிறேன். எங்கள் வீட்டிலிருந்து மூன்று காணி தள்ளியிருந்தாலும் அவளை வெளியில் காண்பது மிக அபூர்வமாகவேயிருந்தது. நினைவுகள் அவளேயன்றி வேறொன்றிலும் பற்றில்லாமல் கிடந்து தவித்திருந்த நாட்களே அதிகம். அவளே திரும்பத் திரும்ப நினைவில் வருமளவுக்கு அவளில் தேங்கியிருப்பதென்ன என்று என்னை நானே கேள்வி கேட்டுக் கேட்டுக் களைப்புற்று அதிர்ந்தேன். இரவுகளில் தூக்கமின்றிப் பாயில் புரண்டேன். மீண்டும் மீண்டும் அவள் முகமும் வனப்பான உடலும் கண்முன்னே தோன்றி அலைக்கழித்தது. மனோ அன்ரியின்ர தர்சினிய விட, கண்ணாடி போட்டுச் சுடிதாரில் ஊரைக் கலக்கிற மாலாவைவிட, மாமியாக்கட ரஞ்சிய விட அவளில் அப்படி என்னை ஈர்த்தது என்ன?

வழமைபோல ஒரு விடியற் காலையில் அவள் போகும் பாதையைப் பார்த்தபடியே பல் விளக்கிக்கொண்டு வாசலில் நின்றேன். அன்று அவள் வரவில்லை. காணவேண்டும் என்றே மனசு ஏங்கியது. கண்கள் அவள் வரும் திசையில் சுழன்று தவித்தது. அவள் வரவில்லை. வருவாள் என்றே மனசுக்குள் திரும்பத் திரும்ப அசரீரி போல ஒலித்தது. அப்போது அவள் பேர் தெரியாது. ஊர் தெரியாது. அவள் பிம்பம் மனசில் அழியாச் சித்திரமாய் பதிந்ததேயன்றி வேறொன்றும் தெரியாது. யாரைக் கேட்பது? எப்படிக்கேட்பது? சரி அப்படியே கேட்டாலும் என்ன நினைப்பார்கள். வீட்டுக்குத் தெரிந்தால் கதை அவ்வளவுதான். என்றெல்லாம் மனசு குழம்பி நான் நிலைதடுமாறிக் கிடந்துழன்றேன். அவ்வளவுதானா? அவள் உருவம் பிம்பமாக மட்டும் மனசில் எஞ்சியிருக்க அவள் போய்விட்டாள். தண்ணீர்க்குடத்தில் ரோமங்கள் அடர்ந்த கைகள் வளைந்து கிடக்க குடத்தை ஏந்திய இடுப்பு உயர்ந்தும் மற்றயபக்கம் தாழ்ந்தும் பின்புறம் ஒரு லயம்போல ஏறியிறங்கி அசைய அசைய அவள்போகும் ஒற்றைப் பிம்பம் மட்டும் எஞ்சியிருக்க அவள் போய்விட்டாள்.


ஒரு வாரமாக என் கண்கள் அவளைத் தேடியலைந்து தோற்றது. ஒருநாள் அந்தப் பாதைக்குப் போனேன். அவள் போகும் பாதை ஜீவனின்றிக் கிடந்தது. மைல்கல் வெறும் கல்தான். அப்போதும் வெயில் அலைபோல தகித்தது. செடிகள் படர்ந்த தளிர்ப்பரப்பின் மேல் வண்ணத்துப்பூச்சிகள் தாவித்திரிந்தன. பட்ட மரக் கிளையொன்றின்மேல் படுத்திருந்த ஓணான் என்னைக் கண்டதும் தலையாட்டியது. பூவரசுக் கிளையிலிருந்த அணில் வாலை உயர்த்தி உயர்த்தி 'க்விக் க்விக்' என்று நுனிக்குப் போவதும் வருவதுமாக இருந்தது. அவள் குடியிருக்கும் காணிவரை நடந்துபோனேன். அங்கிருந்தவர்கள் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். நான் குனிந்து ஏதோ பிடுங்குவதுபோலப் பாவனை செய்தேன். ஒரு வயசானவர் "என்ன தம்பி பிடுங்குறீங்கள்?" என்று கேட்டு வாய்க்குள் இருந்த வெற்றிலைச் சாற்றைத் துப்பிவிட்டு வாயைத் துடைத்தார். "முடக்கொத்தான்" என்றேன். அந்தப் பொய் எப்படிச் சட்டென்று வாயில் வந்ததென்று பின்னர் நீண்ட நாட்களாக என்னை பெருமிதமாக எண்ணிக்கொண்டேன்.

"அருமையான மூலிகை தம்பி நாரிப் பிடிப்புக்குச் சொன்ன சாமான். ரசம் வைச்சுக் குடிச்சா உடனே இறங்கிப்போயிடும்" என்று சொல்லி கால்களை அகலப்பரப்பி பின் மந்துக்கு நடந்துபோனார். நானும் 'அப்பாடா' என்று வந்த வழியே நழுவினேன். பிறகென்ன ஒரு முன்பிறை நிலாக்காலம் போல அவள் மறைந்துபோனாள். அவளை முற்றிலுமாக நான் மறந்து விட்டிருந்த ஒரு நாளில் எதிர்பாராத விதமாக நான் வீட்டிற்குள் நுழைந்தபோது ஹோலில் கதிரையில் இருந்தாள். தேநீர் குடித்திருந்தாள் போல ரம்ளர் கதிரைக் காலடியில் கிடந்தது. அம்மா அவளுடன் கதைத்துக் கொண்டிருந்தா. என்னைக் கண்டதும் "தம்பி உன்னட்டத்தான் பிள்ள வந்திருக்குது'' என்று விட்டு சமையலறைப்பக்கமாகப் போனா.

தேடியலைந்தது கைகளில் மின்னியது போல யாருக்காக நான் ஏங்கித்தவித்தேனோ அவளே என்னைத் தேடி என் வீடு வரை... என்ன? என்று நான் கேட்க நினைத்தேன். இல்லை. எப்படிக் கதையைத் தொடங்குவது என்று எண்ணிக் குழம்பும் வேளையில் அவளே" நான் பற்றிக்கலோ கம்பசில பைனலியர் செய்யிறன். வன்னிவள நாட்டார் பாடல் பற்றி ஒரு ஆய்வு செய்யப்போறன். சிலரிட்ட விசாரிச்சதில உங்களப் பிடிச்சா ஆக்களைத் தெரியும் என்றும் சொல்லிச்சினம் எனக்கு நீங்கள் தான் 'ஹெல்ப்' பண்ண வேணும்" என்றாள். முதல் வார்த்தைகள், அவள் என்னோடு பேசிக் கொண்ட முதற் சொற்கள் அவை ஒவ்வொன்றும் ஜொலிக்கும் முத்துக்களைக் கோர்ப்பதுபோல வசீகரம் மிகுந்ததாக இருந்தன.


பிறகென்ன எனக்குத் தெரிந்த ஒருவரையும் விட்டுவைக்கவில்லை. முள்ளியவளையில அரியான் பொய்கையையும், வட்டுவாகலில சேதுபதி அண்ணையையும், ஒட்டுசுட்டானில தில்லையம்பலம் மாஸ்ரரையும் சந்திக்க வைத்தேன். அவளுக்குப் பரம சந்தோசம். ஒவ்வொருவரையும் சந்தித்துவிட்டு சைக்கிளில் புறப்படும்போது ஆயிரம் தடவைகள் நன்றி சொன்னாள். நான் சைக்கிள் மிதித்து தனக்காகத் திரிவதைப் பார்க்க தனக்குப் பாவமாக இருக்குதென்றும் அடிக்கடி சொன்னாள். எனக்கு உள்ளுக்குள் மழையடிக்கும், இதந்தரும் இளங்காலை வெயில்தொடும், ஜிவ்ஜிவ்வென்று காற்று வீசும். புலன்களுக்குள் கோடான கோடிப் புலன்கள் அவளையே யாசித்தபடியிருக்க நான் சைக்கிளில் போய்க்கொண்டிருப்பேன். அவள் என்னோடு அருகருகே சைக்கிளில் வருவது தெருவில் போகும் இளமட்டங்களைப் பொறாமை கொள்ள வைத்தது. அவளது ஆய்வுக்கான சகல விபரங்களையும் சகலரிடமிருந்தும் எடுத்தாயிற்று. இனி அவளுக்கும் எனக்குமிடையில் எந்தத் தொடர்புகளும் இருக்காது என நினைத்தபோது உள்ளுக்குள் வலித்தது. வேறு யாரை அறிமுகப்படுத்துவது என அண்ணாவிமார்களையும் தெரிந்த இலக்கியக்காரர்களையும் ஞாபகத்தில் கொண்டுவர முயன்றபோது மட்டக்களப்புக்குப் பயணம் போகும் செய்தி சொல்ல முன்னால் வந்து நின்றாள். "எனக்காக எவ்வளவு கஸ்ரப்பட்டு இந்த உதவியச் செய்து தந்திருக்கிறீங்கள். ஒருநாளும் இத மறக்கமாட்டன் தேங்ஸ்" என்றாள். வீட்டுக்கு வந்து அம்மாவுக்கும் பயணம் சொல்லி விட்டுப்போனாள். அவள் போவதையே கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டு நின்றேன். கண்களில் அரும்பிய நீர்த்துளியினூடே அவளது உருவம் கலங்கலாய் மறைந்து மறைந்து முற்றிலுமாய் அழிந்துபோனது.

பிறகென்ன தொண்ணூறாம் ஆண்டு முல்லைத்தீவு இடப்பெயர்வோட அவளது பெற்றோர்களும் திருகோணமலைக்குப் போனார்கள். பிறகு ஆறு வருசம் கழித்துத்தான் முல்லைத்தீவு போக முடிந்தது. அப்போது என் ஊருக்குப் போனேன் வீட்டுக்குப் போகுமுன் முதலில் கண்கள் தேடியது 2ஆவது மைல் கல்லைத்தான். அது கிடந்தது. இராணுவ பண்ட் ஒன்றின் கவலரணில்.



# இலக்கியப்பகிர்வு

# புலரி-2



அண்மையில்தான் புலரியின் முதலாவது இதழை பார்க்க படிக்க நேர்ந்தது. இப்போது இரண்டாவது இதழ் புலரி போன்ற சிறு சஞ்சிகைகளின் ஒழுங்கான வரவு என்பது கவலைக்குரியதாகியுள்ள சூழ்நிலையில் இத்தகைய வரவு சந்தோஷமான செய்திதான் எனினும் இது நீடிக்க வேண்டும்.

காலாண்டிதழாக வெளியாகியுள்ள இந்த இதழ் காலாண்டுக்குரிய கனதியைக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு இருப்பதுதான் நல்லது எனினும் ஒரு மாதாந்த இதழுக்குரிய கனதியையே இது கொண்டுள்ளது. விடயங்களின் கனதியை விட பக்கங்களின் அளவினையே இங்கு முதலில் குறிப்பிடலாம்.

"புலரியின் இரண்டாவது இதழோடு இணைவதில் நிறைந்த மகிழ்ச்சி. எமது முயற்சியானது உங்களிடமிருந்து சிறந்த வரவேற்பினைப் பெற்றுள்ளமை எமக்கு மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆரோக்கியமான கலை, இலக்கிய முயற்சிகளுக்கும்ஆதரவுத்தன்மை வெளிப்பட்டு வரும் சூழலில் நம்பிக்கை ஒன்றையே முதலாக்கிய கலை- இலக்கிய- சமூக இதழாகப் புலரி வெளிவருகின்றது.

பொதுப்பாங்கான வாசிப்பார்வத்தை தூண்டுவதோடு தமிழர் தம் பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் முயற்சியில் துணையாக கலை இலக்கிய சமூக விடயங்களைத் தாங்கி காலாண்டிற்கு ஒரு முறை புலரி உங்களை நாடி வரும் என ஆசிரியர் கருத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது. தொலைக்காட்சித் தொடர்களின் பின்னால் அடியெடுத்துத் திரியும் யாழ்ப்பாணத்து தற்போதைய சூழ் நிலையில் வாசிப்பு ஆர்வம் எந்த மட்டத்தில் உள்ளது. என்பது கேள்விக்குரிய விடயமே.

நேர்காணல், கவிதைகள், சிறுகதை, கட்டுரைகள் என்ற இலக்கியப் பரப்புக்குள் பேராசிரியர் அ.சண்முகதாஸ். சோ.பத்மநாதன், ஜெ.சி. ஜெயசீலன், துரைகணேசமூர்த்தி, நவராஜ். றஜனி, தொல்புரம் சி.கதிர்காமநாதன், கலாநிதி, ம.இரகுநாதன். குமரன், அ.குமாரவேல், துணைவியூரான், சிறிபவான், துளசி, தவராணி, குகபரன் போன்றோரின் படைப்புக்கள் உள்ளன.

ஈழத்துத் தமிழ் நாவல்களில் தமிழ்த் தேசிய உணர்வின் வெளிப்பாடுகள் என்ற தலைப்பில் கலாநிதி ம.இரகுநாதன் அவர்களின் கட்டுரை அமைந்துள்ளது.

விரிந்த பரப்பெல்லையைக் கொண்ட இக் கட்டுரையில் தலைப்பின் ஆர்வத்தால் கட்டுரையினுள் புகுந்தால் மிஞ்சுவது ஏமாற்றமே. தலைப்புக்குரிய குணாம்சத்தை இக் கட்டுரை கொண்டிருக்கவில்லை.

அதற்காக அவர் கூறும் காரணம் போதிய வலுவுள்ளதாக இல்லை.

"1980 இன் பின்னர் தமிழர்கள் தமது தாயகப் பகுதிகளிற்கூட வாழ முடியாத நிலை உருவாகியது. தமிழ் தேசிய உணர்வு தளைய சிங்கம் அன்று கூறிய அண்டர் கிறவுண் பயங்கரவாத இயக்கமாக இல்லாமல் அரசை எதிர்த்துப் போரிடும் மரபுப் படையணியாகவே உருவாகியது. இந்த யுத்தத்தின் நியாயங்களை அது விளைவித்த துன்பங்களை 1980 களுக்குப் பின் வந்த பல நாவல்களில் காணமுடியும். அது விரிவான ஒரு ஆய்வின் மூலமே எடுத்துக் காட்டப்பட வேண்டியதால் அந்த ஆய்வு இங்கு தவிர்க்கப்படுகின்றது.

அதாவது இந்த யுத்தத்தின் நியாயங்களை அது விளைவித்த துன்பங்களை 1980 களுக்குப் பின் வந்த பல நாவல்களில் காண முடியும். அது விரிவான ஒரு ஆய்வின் மூலமே எடுத்துக்காட்டப்பட வேண்டியதால் அந்த ஆய்வு இங்கு தவிர்க்கப்படுவது என்று கூறுவது முரண்பாடாகவே உள்ளது.

அதாவது 1980 இற்கு பின்னரான நாவல்கள் போராட்ட நியாயங்களையும், துன்பங்களையும் மட்டுமா கொண்டிருந்தன. 1980 இற்கு பின்னர் வந்த நாவல்களில் கட்டுரையாளரின் தலைப்பிற்கு ஏற்ற நாவல்கள் இல்லையா? என்ற ஒரு எண்ணம் ஏற்படுகின்றது.

நிச்சயம் கட்டுரையாளரின் நோக்கம் அதுவாக இருக்க முடியாது. 1980 இற்குப் பின்னர் ஏராளமான நாவல்கள், குறுநாவல்கள், தமிழ்த் தேசிய உணர்வின் அடிப்படையில் வெளிப்பட்டன. தரவேறுபாட்டு ரீதியில் அவற்றில் வித்தியாசங்கள் இருக்கலாம். அரைத்த உழுந்தை அரைக்கும் பாணியில் அமைத்திருக்கலாம். ஆனால் கட்டுரையாளர்கள் போன்ற அறிஞர்கள் இவை விரிவான விமர்சனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

இன்னமும் அது தொடர்பான சரியான மதிப்பீடுகள் வெளிவரவில்லை. கட்டுரையாளன் இக் கட்டுரையின் நீட்சியை எழுத வேண்டும். அவர் போன்றவர்களை விட வேறு யார் இதனைச் செய்வார்கள்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் செவ்வி பயன் உள்ளது. எனினும் இன்னமும் விரிவாய் இருந்தால் நல்லது. ஒரு இதழில் நேர்காணலை அடக்க வேண்டும் என்பதல்ல. ஞானம் இதழ் செய்வது போல இரண்டு மூன்று இதழ்கள் வரை நேர்காணலை நிகழ்த்தலாம்.

பேராசிரியர் அவர்கள் கூறும் இந்தப் பதில் முக்கியமானது. அவர் கூறுகையில்;

"இது எங்களது தலைவிதி, தமிழ் மொழியின் தனித்துவத்தை பேசமுற்படும் போது பழைய கதைகளைக் கதைக்கக்கூடாது. நவீன இலக்கியங்கள் குறித்தே நாம் பேச வேண்டும் என்று கருதும் கூட்டம் நம் மத்தியில் உண்டு. உலக வரலாற்றில் எழுச்சி பெற்ற பல்வேறு போராட்ட இலக்கியங்களில் போராளிகள், போராட்டங்களில் தாம் பெற்ற அனுபவங்களை மையப்படுத்தி உயிர்ப்போடு எழுதியுள்ளனர். இன்று அவை உலக ரீதியாக உயர்வுபடுத்திப் பேசப்படுவதோடு பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. போராட்டத்தில் புற நிலையாளனாக நின்று எழுதுபவர் சில வேளைகளில் உயர்வு நவிற்சியாக வியந்து கூறும் தன்மைக்கும் ஆட்படலாம். ஆனால் ஒரு போராளி தனது உணர்வுகளைப் பதிவு செய்துள்ளமையை அது உயர்வு நவிற்சியானது என்று கூறுவதற்கு எவருக்கும் அருகதையுமில்லை. உரிமையும் இல்லை. ஏனெனில் நாம் அங்கு நிற்கவில்லை. இவ்வாறு போராட்ட இலக்கியங்களைப் பிசாரப் பாங்கானது என்று கூறுவோர் நவீனம் என்ற முகமூடியைப் போட்ட படி உள்ளவர்கள் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

தொல்புரம் சி.கதிர்காமநாதன் அவர்கள் எழுதிய "பசி" சிறுகதை சரியான வகையில் எழுதப்படவில்லை போல் உள்ளது.

''சுனாமி'' அலைகளால் அள்ளுண்ட பிள்ளைகள் எங்கே இருந்தார்கள். தாய் எங்கே இருந்தார் என்பதையெல்லாம் விட கதை அவசர கோலத்தில் எழுதப்பட்டது போல் உள்ளது. நல்ல கதைகளை எழுதும் கதையாளர் இதனைக் கவனத்திற் கொண்டால் நல்லது.

"என்ன செய்யப் போகின்றோம்" என்ற தலைப்பில் துணைவியூரான் கேட்கும் கேள்விகள் அர்த்தமுள்ளன.

'Petermann என்னும் ஆய்வாளர்




முன் வைக்கும் கருத்துக்கள் எனத் துணைவியூரான் எடுத்துக் காட்டும் கருத்துக்கள் பயனுள்ளன.

கொடூரத்தன்மையான நடத்தையை உருவாக்குவதில் தொலைக்காட்சியினால் உண்டாக்கப்படும் செல்வாக்கு குறுகிய காலத்திற்கானது போன்ற நீண்ட காலத்திற்குமானதாக இருக்கின்றது. தொலைக்காட்சியில் காணும் வன்முறை தமது வாழ்க்கையில் ஏற்படும் மென்மையான அனுபவங்களுடன் (பெற்றோர்களிடமிருந்து பெறப்படும் கடும் தண்டனை) இணையும் போது இவ்வாறான நடத்தை ஊக்குவிக்கப்படுகின்றது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் காரணமாக வன் நடத்தைகளுக்கு வழிப்படும் பிள்ளை இயல்பாகவே இலகுவாக வன்முறைகள் பக்கம் சாரக்கூடியது.

வன்முறை நிலையான நடத்தையாக அமையவும் முடியும். அதனால் பிள்ளை பருவத்தின் வன்முறை இளமைப்பருவத்தில் குற்றங்களாகவும் வளர்ந்த பருவத்தில் கொடூரத் தன்மையாகவும் மாற முடியும்"

"சீரும் சிரிப்பும் கவி நகைப்பு" என்னும் தலைப்பில் வரும் கவிதையினைப் படிக்கும் போது கவலைதான் ஏற்படுகின்றது.

"நம் தேசம் எப்படிப்பட்டது" என்ற தலைப்பில் பின்வரும் கவிதை அமைகிறது.

"ஆமியவன் சென்றியிலே காவல் செய்யும் தேசம் காமி கூட்டம் அரை குறையாய் உலாவி வரும் தேசம். மாமிய வாடையடித்து அரைச் சட்டை போடும் தேசம் சாமி கூட கண்மூடி மௌனம் காத்த தேசம் இன்று சுனாமியலை அடித்தள்ளி அவலப்பட்ட தேசம்"

மேற்குறித்த கவிதையில் கடைசி வரியின் அர்த்தம் என்ன? இயற்கை சீறி எழுந்தது யாருடைய பிழை மற்றைய மூன்று வரிகளுக்கும் யாராவது பொறுப்பேற்கலாம். அவற்றைக் கட்டாயம் கேலியாக்கத் தான் வேண்டும். இயற்கை அழிவையும் கேலியாகப் பார்க்க வேண்டுமா?

"புலரி" தமிழ் இலக்கிய உலகில் தனித்தன்மையுடன் தலை நிமிர வேண்டும். புதிய படைப்பாளிகள் பலரை வெளி உலகிற்குக் கொண்டு வர வேண்டும். இதுவே அனைவரின் வேண்டுகையாகும்.

**இணுவையூர்**
**சிதம்பர திருச்செந்தி நாதன**

## ஒளி பூசும் கூடுகள்

கூடுகளின்
குருட்டு நாடக அரங்கேற்றம்
கேடுகளுக்கே மேடை அமைக்கிறது.
இருட்டுக் கோறைகளுக்குள்
கறைகளின் பராக்கிரமம்
படிமமாக்கப்பட்டும்
பருதிகள் பிரகாசிக்கிறது.
கோடுகளால் இணைத்திருந்தும்
கூடுகள் தனித்தனிதான்
கோடுகள் உதைத்த
வெடிப்பின்
பிளவுக்குள் இறங்கி
வேறு வேறு
கோணங்களுக்குப்போய்
வெட்கப்பட்டு,
அசிங்கப்பட்டு,
அருவருப்பாகி திரும்பியது
மனசு.


தரம் பிரிக்கப்பட்ட
தோலுறைகளுக்குள்
பகிரங்கப்படாத
குறைபாட்டுப் பொதிகள்
அதன் மீதான
நெருக்குதல் வலுப்பேறி
வற்புறுத்துகிறது
தூரங்களுக்கு
வரையறைபோட்டபடி
திசைகளை ஒடுக்கி
நீளும் விரல்களை
முடக்கும்
சத்தமில்லாத சட்டங்கள்.
அதன்
கொடூரங்களை,
துரோகங்களை,
வஞ்சகங்களை புதைக்கலாம் என்று
துமிக் கண்ணீரோடு
போராடும்
பொறுமை தோற்றுப்போய்
மறைத்துவைத்த
வறுமை வாய்வளர்க்கிறது.
வெறுப்பேற்றும்
கூடுகளுக்கிடையில்
ஒளி பூசித்திரிய
ஒத்துக்கொள்ளாததாய்
ஒழுகும்
சில எழுத்தாணிகள்
விரல் பிடுங்கி
எறியப்படும் வரைக்கும்.

ப.அருள்நேசன்


## காற்று

காற்று வீசியடிக்கின்றது...
காற்றின் விரல்கள்
மரங்களை முறித்தெறிகின்றன.
உலாஞ்சித் தெறிக்கும்
ஓங்கி வளர்ந்த பனைகளிலிருந்து
காவோலைகள் உரித்தெறியப்பட
பசியில் தவித்து குஞ்சுகள் இரண்டு
கூட்டுக்குள் அலறுகின்றன...
காற்றை எதிர்த்து
இறக்கைகளை அடிக்க முடியாது
இலந்தை முட்களில் வீழுந்து
தவித்தழுகின்றது தாய்க்குருவி.
நீயோ கற்களை எறிந்தபடியிருக்கின்றாய்
அதன் கால்களை ஒடிப்பதற்காய்
நானோ கவலை கொள்கிறேன்
குருவியின் அலகினுள்ளிருக்கும் இரைகளுக்காய்
தவித்துக்கொண்டிருக்கும்
அந்தக் குஞ்சுகள் பற்றி.
* * * * *
வீட்டுச் சுவர்களில் மோதி வீழுந்தெழும்பிப் போகிறது
காற்று...
முற்றத்தில் முறிந்தழிந்த
மணற்கோடுகளில்
உக்கியலைகிறது ஒரு பொட்டுத்துணி
வாரி யெறிந்த குப்பை மேடுகளில்
பூத்துச் சிரிக்கின்றன.
நொருங்கி விழுந்த வளையல் துண்டுகள்
வீட்டுக் கதவொன்றில் பிசிறியடித்த
ரத்தப் பெருக்குகளில்
வலைகள் பின்னிய சிலந்திக் கூடுகளுக்கு
வாலறுத்த நாயொன்று சலமடித்துச் செல்கிறது.
வீட்டுச்சென்ற வீட்டுக்கு வந்ததும்
வீங்கிப் பெருக்கிறது வேறொரு நினைவு.

கருணைரவி





மறைந்திருக்கும் பொருட்களைக் கண்டுபிடியுங்கள்



# கறையான்கள்

கூட்டு வாழ்க்கை நடத்துவதில் மிக உன்னத நிலையை அடைந்தவைதான் கறையான்கள். இவை ஐஸோப்டெரா எனும் வகையைச் சேர்ந்தது. இவற்றில் 1800 இனங்கள் உள்ளன.

ஒரு புற்றில் ஏறக்குறைய முப்பது இலட்சம் கறையான்கள் வரை காணப்படும். இதில் இனப்பெருக்கத் தகுதிகொண்ட கறையான்கள், படைக் கறையான்கள் பணிக்கறையான்கள் என மூன்று பிரிவுகள் இருக்கும். ஒவ்வொரு பிரிவிலும் ஆணும், பெண்ணும் உண்டு. இனப்பெருக்க பிரிவில் ராணி கறையான், ராஜா கறையான், மாற்று ராணி கறை யான், மாற்று ராஜா கறை யான் இருப்பதோடு படைக கறையானில் புற்றைக் காவல் செய்யும்



கறையான், எச்சரிக்கைக் கறையான் எனும் பிரிவுகளும் காணப்படுகின்றன.

இனச் சேர்க்கைக்கு முன் குறிப்பிட்ட நேரத்தில் புற்றிலிருந்து ஆயிரக் கணக்கான கறையான் கள் வானில் பறக்கும். அதில் ஆயிரத்தில் ஒன்று தான் இனச்சேர்க்கை புரிய தரைக்குத் திரும்பும். ஏனையவை எல்லாம் பல்வேறு உயிரினங்களுக்கு உணவாகிவிடும். பறந்து முடித்து விட்டு ராஜாவும் ராணியும் தரைக்கு வந்து மரத்திலோ, நிலத்திலோ குழியை உருவாக்கி அதன் உள்ளே சென்று வாயிலை அடைத் துக்கொள்கின்றன. பின் அந்தப் படுக்கை அறையில் இனச் சேர்க்கை இடம் பெறும்.

முட்டையிலிருந்து வெளி வரும் கறையான்கள் 1.8மி.மீற்றர் நீளம் கொண்டதாக இருக்கும். வளர்ந்த பின் 6மி.மீற்றர் நீளம் வரை காணப்படும். முட்டையில் இருந்து வெளி வரும் கறையானை இளந்தை என்று அழைப்பர். இது ஏனைய கறையான்களைப்போல் பணி செய்ய ஆரம்பித்து விடுகின்றன.

ஒரு புற்றில் பணிக்கறையான், படைக்கறையான் ஒரு குறிப்பிட்ட அளவுதான் இருக்கும். இது ஏனைய எ்ல்லாம் இளந்தைகளாகவே இருக்கும். படைக் கறையானோ பணிக்கறை யானோ இறந்து விட்டால் உடனே அந்த இழப்பை ஈடுசெய்ய ஒரு இளந்தை கறையான் குறிப்பிட்ட அக்கறையானாக மாறிவிடும்.

மரத்தில் உள்ள செலுலோஸ் எனும் பொருளை எந்த உயிரினத்தாலும் சமிபாடு அடையச் செய்யமுடியாது. ஆனால், கறையான் அவற்றை சமிபாடு அடையச்செய்கிறது.

ஈரப்பதமான மரக்கட்டைகள், சிலவகை மரங் கள், கட்டடங்கள் ஆகியவற்றில் இவை புற்றுக் கள் அமைக்கின்றன. சில கறையான்களால் அமைக்கப்படுகின்ற புற்றுக்கள் பல மீற்றர்கள் உயரமாகவும் உறுதியாகவும் காணப்படுகின்றன. இவை நூற்றுக்கணக்கான ஆண்டுகள் எவ்வித பாதிப்பும் இல்லாமல் இருக்கின்றன.

## சொற்சிலம்பம் - 80

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ண | ப் | ர | சி | ன் | லை | தீ |
| டு | கு | நீ | பா | ந் | மி | ட |
| தி | லா | த் | கோ | னி | ணி | ன் |
| து | அ | பி | ரி | ரோ | சீ | ச் |
| மே | ட் | தா | ஷ் | ர் | ரி | றி |
| ர் | ப் | யா | சா | ய் | ரு | டெ |
| அ | ல் | ன் | ஓ | கி | த் | ம |

கட்டங்களில் காணப் படும் எழுத் துக் களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -78 இன் விடைகள்

01. சானியா மிர்சா

02. அப்துல் காதிர்கான்

## சொற்சிலம்பம் - 78 இன் பரிசுக்குரியவர்

பா.பிரதீபன்,
76/1 மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் - 78 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. பூ.பவனேஸ்வரன், கச்சர்வெளி, பளை.
02. கோ.அருளரசி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.
03. ம.கவிப்பிரியா, 8ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
04. எம்.சதுஷா, நல்லூர், யாழ்ப்பாணம்.
05. க.சுஜிபரன், புளியங்குளம், வவுனியா.
06. ச.கிந்துஜா, இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.
07. ம.தனுஜன், வவுனிக்குளம்.
08. கார்த்திகா, உடையார்கட்டு, முல்லைத்தீவு.

01. தெற்காசியாவிலுள்ள மிகப்பெரிய இயற்கைத் துறைமுகம்?
01) ......................................

02. அமைதிக்காக நோபல் பரிசுபெற்ற பலஸ்தீனத் தலைவரின் பெயர்?
01) ......................................

சொற்சிலம்பம்-80
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- ......................................


முகவரி :-......................................

......................................

# ஆமையாரின் இனிப்புச் சுவை

பகுதி-08






# முயலுங்கள்

இலக்கு இல்லாத மனித வாழ்க்கை துடுப்பு இல்லாத ஓடம் என்றும் ஜன்னல் இல்லாத வீடு என்றும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு இலக்கை நோக்கி எமது வாழ்க்கைச் சக்கரம் சுழலும் போது எத்தனையோ



போராட்டங்களையும் தடைகளையும் எதிர் கொள்ளவேண்டி ஏற்படும். ஒருவன் தனது இலக்கை அடைய வேண்டுமென்றால் அவன் எத்தடையையும் எதிர் நீச்சல் போட்டு புறமுதுகு காட்டி அஞ்சாதவனாக இருக்கவேண்டும். இலக்கு என்பது அவரவர் வாழ்க்கைச் சூழலை பொறுத்து தெரிவு செய்யப்படும்.


ஒருவன் தான் ஏதாவது உயர்ந்தநிலையில் இருக்க வேண்டும் என்று முயலுவான். ஆனால் இடையே குறுக்கிடுகின்ற தடங்கல்கள் அவரது இலக்கை அவரால் அடையமுடியாமல் செய்துவிடும். ஆனால் ஒரு இலக்கை நாம் அடைய வேண்டுமென்றால் எமது சுய முயற்சிதான் அடித்தளம். முயற்சி இன்றி இடையூறுகளால் ஒதுங்கிப் போவதால் இலக்கை எப்படி அடையலாம்? எமது எதிர்காலத்திற்கேற்ப எமது இலக்குகளை நாம் அடைவதற்கான வகையில் எமது பயணங்கள் அமைய வேண்டும். பயணங்களின் பாதைகள் சரியாக அமையுமா? இதுவும் ஒரு வினா தான்? பாதைகள் என்றும் திறந்தபடி தான் உள்ளன. பாதைகள் வழியே தான் நாம் பயணிக்கவேண்டும். நற்சிந்தனை ஒன்று நினைவு வருகிறது. "முயற்சி செய்பவனுக்கு பாதைகள் என்றும் திறந்தபடியே. சோம்பிக் கிடப்பவன் கண்களுக்கு பாதைகள் என்றும் மூடியபடியேதான் இருக்கும்" உண்மைதான். பாதையின் நெளிவு, சுழிவுகளூடாக எப்படி பயணிக்கவேண்டும் என்பது நாம் தீர்மானிக்கவேண்டியதே அப்படியென்றால் நாம் என்ன செய்ய வேண்டும்.

எமது இலக்கு என்ன? எது வரை எனது இலக்கை அண்மித்து விட்டேன்? எனது இலக்கில் என்ன இடையூறுகள்? அவற்றை எப்படி என்னால் தாண்ட முடிந்தது? எந்த வழியால் முயற்சிக்கவேண்டும்? என்று உங்களுக்குள் பல கேள்விகள் எழுப்பப்படவேண்டும். கேள்விகள் தெளிவு பெறப்படும் போது அடுத்த பயணம் சுலபமானதுதானே. பயணம் தொடர்ந்தால் இலக்கு அண்மையில் தடைகளைக் கண்டு ஒதுங்கிப் போவோமானால் இலக்கு என்பது தொலைதூரம்தான். தடைகளை படிகளாகக் கற்றுக்கொண்டு வீழ்ந்தாலும் மீண்டும் எழுந்து நடக்க முயற்சி செய்யுங்கள். தடைக்கற்கள் தான் படிக்கற்கள் பயணங்கள் தொடர முயற்சியுங்கள். இலக்கை அடையவேண்டுமா? புறமுதுகு காட்டி ஓடாதீர்கள் துணிந்து நில்லுங்கள். முயற்சியுங்கள். இலக்கை அடைய விரும்புகிறீர்களா? நம்பிக்கையோடு எதிர்நீச்சல் போடுங்கள். முயன்றால் முடியாதது ஏதும் உண்டா? இலக்கை அடைய உங்களால் முடியும். முடியும் என்றெண்ணி முயலுங்கள். முடியாது என்று பாதைகளை மனக்கண்களால் மறைத்து விடாதீர்கள். முயன்று பயணியுங்கள். இலக்கு உங்கள் அருகில் .

**ஈழவிழி**

# மனமே... மனமே...

மனம் என்னும் மூலக் கருவியை இயக்கிவிட்டால் அதனிடத்தில் இருந்து தோன்றுகின்ற எல்லா எண்ணங்களும் செயலாகவும் பார்வையாகவும் முகர்ந்து பார்க்கும் செயலாகவும் வேறு விதமாகவும விளைகின்றன.



மனிதர்கள் பதவியினாலும் ஆற்றலினாலும் பொருள், கல்வி முதலியவற்றாலும் மேல் கீழ் என்ற வேறுபாடு இருந்து கொண்டே இருக்கும். ஆற்றலில் மேலானவர் கீழானவர் என்று சொல்கிறோம். எத்தனை சமரசம் பேசினாலும் செல்வத்தினால் பதவியினால் உயர்ந்தவர்கள்தான் உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் தம்மை உயர்ந்தவர்கள் என்று நினைப்பது பெரியதல்ல. அவை தமக்கு இல்லாதவர்கள் தம்மை தாழ்ந்தவர்கள். என்று நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் யார் உயர்ந்தவர்களோ அவர்களுக்கு (வந்தனை) சார்பாக இசைந்து வாழ்வதே மனித சமுதாயத்திற்கு இயல்பாய் போய் விட்டது. அவர்கள் உயர்ந்தவர்கள் என்று கீழ் மட்டத்தில் சிந்தித்தால் என்ன?

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்"

சிந்தனையைச் சொல்லி, கண்ணைச் சொல்லி, உடம்பை சொல்லி இவைமாத்திரம் போதுமா. இவைகள் எல்லாம் நாம் செய்கின்ற செயல்கள், செயல்களை செய்கின்றோம். இன்பதுன்பங்களை நுகர்கின்றோம். எத்தனை பிறவி எடுத்தாலும் உலக இன்பத்தில் ஈடுபடுபவர்களுடைய மனம் அப்படி இருப்பதில்லை. படலம் படலமாகப் பற்றும் ஆசையும் கோபமும் பிற தீய குணங்களும் செறிந்து செறிந்து மனம் பாறையாகிப் போய்விடுகின்றது. அது நாளாக நாளாக இறுகுகின்றதே தவிர நெகிழ்வதில்லை.

மனதை நெகிழ்வது எப்படி ஒருவருடைய துன்பத்தைக் கண்டால் இரக்கம் உண்டாகும்.அவர்களுடைய பேச்சில் ஒரு குலைவு உண்டாகும். செயலில் மென்மையும் பணிவும் தோன்றும். அவர்களுடையஉடம்பு உள்ளம் வாக்கு எல்லாமே அதைக்கொணர்வதை உணர்கின்றோம். மனிதர்கள் கூட்டத்தில் இப்படி அன்பான மனம் கொண்டு அழல் சேர்ந்த மெழுகுபோல இருக்கிறவர்களை மற்றவர்கள் காண்கின்றார்கள் பழகுகின்றார்கள். ஆனால் அந்த அன்பு நிலையை உணர்ந்து கொள்வதில்லை ஒருக்கால் அவர்கள் உள்ளத்தில் உறைத்தாலும் மறுகணத்திலே விலகிய பாசி மறுபடியும் மூடிக் கொள்வதுபோல் பழைய கடுமையே வந்து சேர்ந்து விடுகிறது. நாமாக உருகாவிட்டாலும் பிறர் உருகுவதைப் பார்த்தாவது உருகலாம். எவ்வளவுதான் கல் மனம் படைத்தவராக இருந்தாலும் ஒரு வீட்டில் யாராவது இறந்ததற்கு அழுதால் அங்கே செல்லும் போது தம்மையும் அறியாமல் மனம் இளகி கண்ணில் நீர் வருகிறது. சூழ்நிலையில் வசப்பட்டுச் செயல் செய்வது மனிதனுக்கு உரிய குணம்.

**திருமதி சி. சுரேஸ்குமார்.**

## பயனுள்ள வீட்டுக் குறிப்புகள் சில...

★*சமயலறை மேடையை மெழுகும் போது சிறிது கற்பூரத்தைத் தண்ணீரில் கலந்து மெழுகவும். பூச்சிகள் அண்டாது.*

★*அலுமாரி தட்டுக்களில் பேப்பர் விரிக்கும் முன் அதனடியில் சில வேப்பி லைக் கொத்துகளைப் பரப்பவும். கரப்பான் பூச்சிகள், எறும்புகள் அண்டாது.*

★*கொட்டை, நார் நீக்கிய புளியுடன் கல் உப்பை நன்றாகக் கலந்து புளி ஜாடியில் அடைத்து வைத்தால் வருடக்கணக்கில் கெடாமல் இருக்கும்.*

★*வெல்லம் நீண்ட நாட்கள் நீர்த்துப் போகாமல் நிற்க அதனை ஒரு மண் பானையில் போட்டு மூடி விட்டு பானை மூடியையும் கழுத்தையும் சுற்றி மண்ணைக் குழைத்துப் பூசி விடவும்.*

★*கேக், பிஸ்கட்களை ஒரே பாத்திரத்தில் போட்டு மூடிவைத்தால் பிஸ்கட் இளகி விடும். ஆகவே தனித்தனிப் பாத்திரங்களில் பத்திரப்படுத்தி வைக்கவும்.*

## நெய்ச்சோறு:-



**சமையல் குறிப்பு**

தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| சம்பா அரிசி | - 1சுண்டு |
| நெய் | - 100 கிராம் |
| கறிவேப்பிலை/ றம்பை | - அளவாக |
| ஏலம் | - 6 |
| கறுவா, உப்பு | - அளவாக |
| கராம்பு | - 3 |
| முந்திரிகை வற்றல் | - 2 தேக்கரண்டி |
| முந்திரிப்பருப்பு | - 1 மேசைக்கரண்டி |
| தண்ணீர் | - 2 1/2 தம்ளர் |

செய்முறை:-

* அரிசியைச் சுத்தஞ் செய்து கழுவி நீரை வடியவிட்டு சிறிது நேரம் உலர விடவும்.
* பின் ஒரு மேசைக்கரண்டி நெய்யைக் கொதிக்க வைத்து அதில் அரிசியை இட்டு சிறிது நேரம் வறுக்கவும்.(பத்து நிமிடம்வரை) அப்பாத்திரத்தினுள்ளேயே தண்ணீரை விட்டு உப்புஞ் சேர்த்து வேகவைத்து உவித்துக்கொள்ளவும்
* ஒரு மேசைக்கரண்டி நெய்யில் முந்திரிகை வற்றல், முந்திரிப் பருப்பு, ஏலம், கராம்பு, கறுவா, றம்பை, கறிவேப்பிலை இவற்றை இட்டு பொன்னிறமாக வதக்கவும்.
* அதனுடன் சோற்றையும் சேர்த்துக் கலந்து மிகுதி நெய்யையும் சேர்த்து நன்கு கலந்தபின் இறக்கிச் சிறிது நேரம் இறுக்கமாக மூடிவைக்கவும்.

**குமரகுரு பரிசுத் திட்டத்தின் 36 தொடக்கம் 40 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.**

**பரிசுத்திட்டம் -36**
செல்வி க.யமுனா,
இல,538, 7ஆம் யூனிற்,
இராமநாதபுரம்.

**பரிசுத்திட்டம் -37**
செல்வி க.சுதர்சினி
சுப்பிரமணியம்,
16/12, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**பரிசுத்திட்டம் -38**
வ.லலிதா,
சோரன்பற்று,
பளை.

**பரிசுத்திட்டம் -39**
திருமதி. சிவாஜினி
சுரேஸ்குமார்,
8ஆம் வட்டாரம், மந்துவில்,
வடிசாலை அருகாமை,
புதுக்குடியிருப்பு.

**பரிசுத்திட்டம் -40**
த.சாிதா,
E.S.D.C,
அறிவியல் நகர்,
பாரதிபுரம், கிளிநொச்சி.

**பரிசு பெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவோம்.**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—41**

பெயர்:........................................

முகவரி:........................................

........................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# வாங்கின அடிக்குப் பிறகுதான் சில விசயங்கள் விளங்குது

"ம்..ம்.. ம்ம்!." என்ன செய்யிறது, என்ர காலநேரம்... வாயைத் திறந்து உங்களுக்கு வணக்கம் சொல்லேலாத நிலைமை. சே! ஏன் தான் எனக்கு இப்பிடி நடக்க வேணுமோ தெரியேல்லை. அதுவும் வெளிநாட்டுக்கு போறநேரம் பார்த்து வாயைத் திறக்கேலாத நிலைமை வந்திட்டிது. ஏன் நான் கையால வாயைப்பொத்தி வைச்சிருக்கிறன் எண்டு தயவுசெய்து அறியிறதுக்கு வெளிக்கிட்டிடாங்கோ! வெளியால போறதைப்பற்றி எத்தினையைக் கற்பனை செய்துவைச்ச எனக்கு, அங்கினைக்கிளை காணிற தெரிஞ்ச நாலுசனத்தைப் பார்த்துச்சிரிக்கக்கூட இயலாமல் போச்சே! அந்தரமாவத்துக்கு இங்கிலிஷ் கதைக்கிறதுக்கும் இந்தக் கண்றாவியில ஒழுங்கா உச்சரிப்புகளும் வருகுதோ தெரியேல்லை. நான் இஞ்சை வேதனையில இருக்க பேன் எடுக்கிற மாதிரி இன்னுமொருவா வெறுங்காலில குத்தின நிலத்தில கிடந்த ஆணியொண்டை 'விசுக்' எண்டு. இழுத்தெறிஞ்சு போட்டு சண்டை பிடிக்கிறா. ஐயோ அண்டைக்கு ஏ9 வெயிலில குந்தில குந்தி குந்தேலாமல் வெந்து கெந்திக் கொண்டு போன எனக்கெல்லோ தெரியும், வலி எண்டால் எப்பிடியிருக்குமெண்டு. விசர்ப்பெட்டையளாக் கிடக்கு. புள்ளி என்ன பெரிய புள்ளி; இண்டைக்குப் போகும் நாளைக்கு வரும். மூஞ்சை, கீஞ்சை உடைஞ்சிதெண்டால், திரும்ப வருமே! அடிபட விட்டுவிட்டு பார்த்துக்கொண்டிருந்த எங்களையெல்லே தாய்-தகப்பன்மார் நாளைக்குத் திட்டுவினம், "உந்த வயசு வந்தும் போய் நிலைமையைச் சமாளிக்க வேணும் எண்ட அறிவு கூட வரேலையோ?"எண்டு! சண்டை தீவிரமாயிட்டிது. கம்பர், கிம்பர் கிடைச்சிது. "என்ன இருந்தாலும் அவங்கள் ஆம்பிளைச்சிங்கங்கள் செய்யிறாங்கள் எண்டுவிட்டு, இவையளுக்கு என்னத்துக்குந்த தேவையில்லாத கொழுப்பு மிஞ்சின வேலை! பரதநாட்டியம் மாதிரி ஏதாவதொண்டைப் பழகிட்டு ஒரு ஓரமாய் இருக்க வேண்டியது தானே? ஏரம்பர் நல்ல காரியம் செய்தீர்!". அந்தப் பாராட்டைக் கேட்க எனக்கும் வலு குளிர்ச்சியாய் இருந்திச்சு.

அது நடந்து 2,3 நாள் கடந்திருக்கும். உங்களுக்கு நான் ஏற்கனவே சொன்ன வெளியில் போற அலுவலுக்கு ரிக்கற், அதுஇது கைச்செலவெண்டு காசுகள் தேவையெண்டிட்டு, வங்கிப்பக்கமாய் போய் காசும் ரொக்கமா எடுத்தன். ஒண்டரை லட்சம், கொஞ்சம் கூடத் தான்! இந்த வயசில சேமிச்சு வைச்சும் என்னத்தைக் காணப்போறோம்! விடுங்கோடா! நான் வெளியில போறதுக்கெண்டு எடுத்து வைச்சிருக்கிறது", கெஞ்சினன். அப்பை அதிலை ஒருத்தன் பிடுங்கிப்பறிச்ச என்ரை பிளாஸ்ரிக் கைப்பையாலேயே மூஞ்சையில ஒரு விசுக்கு விசுக்க, மற்றவன் காலால ஓங்கி வைத்தில உதைஞ்சான். எனக்கு அஞ்சோடை அறிவும் கெடாத குறையில போய் 'தொபார்' எண்டு ஓரமாய் விழுந்தன். வயித்தில வேண்டினது பத்தாதெண்டு மூஞ்சையிலையும் வேண்டினதில, வாயால வேற ரத்தம் சொட்டிக் கொண்டிருந்திச்சு. என்னால அந்தத் தடியன்களை என்ன செய்ய முடியும்! சால்வையால ரத்தத்தைத் துடைச்சுக்கொண்டு எழும்பின நேரம் தான் இருந்தாப்போல 'ஹூய்! சூய்!' எண்டு ஏதோவொரு சத்தம் கேட்டிச்சிது. சத்தம் 1-2 நிமிசமாய்த் தொடர்ந்திச்சிது. கொஞ்சநேரத்தில கள்ளர்மார் இரண்டு பேரும் மூஞ்சை முழுக்க, என்னைவிட மோசமாய் அடிவேண்டின கோலத்தில, என்ரை பையைப்




உங்களுக்கு புலுப்பியம் அறியிற ஆவலோ? அதுஅது அவையவையளுக்கு வந்தால்தான் தெரியும்.

சரி சரி! இந்த பஸ் கொழும்புக்குப் போய்ச்சேர எப்பிடியும் இரவாகும். எனக்கும் நேரம் போகோணுமெல்லே! பக்கத்திலை இருக்கிற படுபாவி (மெல்லமாக...) முறிகண்டியில வாங்கின 2 கிலோ கச்சானை ஓய்வில்லாமல் கொறிச்சுக்கொண்டிருக்கிறான். நான் இஞ்சை மூண்டு நாளாய் சொதிக்கிள்ளை ஊறப் போட்ட இடியப்பத்தோட இருக்கிறன். பத்தாக்குறைக்கு எனக்கும் வேணுமோ எண்டு வேற அவர் நீட்டிறார். மனுசர் இருக்கிற நிலைமைக்கு... நான் நெற்றிக்கண் திறக்காத குறையா ஒரு பார்வை பார்த்ததில அடங்கிட்டார் அவர்.

ஒண்டுமில்லையுங்கோ, போன கிழமை பக்கத்துப்பள்ளிக்கூடத்திலை விளையாட்டுப்போட்டி எண்டு கேள்விப்பட்டிட்டு, ஒருக்கால் பார்ப்போமெண்டு போனனான். எல்லாம் வழக்கம் போலதான் நல்ல மாதிரி நடந்திச்சிது. இடைவேளைக்குப் பிறகு கராட்டிப்போட்டி தொடங்கிச்சிது. ஷா! அவங்கள் என்னமாதிரி செய்தாங்கள்! என்ன இருந்தாலும் ஆம்பிளைச்சிங்கங்களல்லோ! விண்ணன்மார் அருமையாச் செய்தாங்கள்! பார்க்கப் பெருமையாக் கிடந்திச்சிது. அதுமுடிய சில பொம்பிளைப்பிள்ளையள் கராட்டி உடுப்போட வந்திச்சினம். நான் ஏதோ 'விநோத உடைப்போட்டி' ஆக்கும் எண்டிட்டு சீரியஸா எடுக்கேல்லை. பேந்து பார்த்தால் அவையளும் கையைக்காலை ஆட்டி 'ஹாய் ஹூய்' எண்டேதோ செய்திச்சினம். சரி சரி! ஏதோ உடற்பயிற்சி ஆக்கும். செய்யிறது ஆரோக்கியமான விசயம் தானே, எங்கையாவது செய்திட்டுப்போகட்டும் எண்டு பேசாமல் இருந்திட்டன். ஆனால் பாருங்கோ அதுக்குப் பிறகுதான் அநியாயமே நடந்திச்சிது. மூஞ்சையில அடிச்சால் மூண்டு புள்ளி, மற்றம்படி ஒரு புள்ளியெண்டு நடுவர் சொன்னதுதான் மிச்சம், 'சடார்! படார்!' எண்டு சண்டைப்போட்டி தொடங்கிச்சிது. இதென்னடா கரைச்சலாக் கிடக்கிது! கொஞ்சத்துக்கு முன்னால வரைக்கும் நல்லாய் கதைச்சுக்கொண்டு தானே இருந்த ஆட்கள். 'ஐயோ! அங்கை பாருங்கோ! ஒரு பிள்ளைக்கு வாங்கின அடியில ரத்தம் வேற வருகிது. மற்றவாக்கு கண்ணில காயம். ஐயோ கலிகாலம் இவ்வளவுக்கு வந்திட்டிதோ! ஏதோ சொன்னதெல்லாம் கட்டையில போக இதென்னடாப்பா அநியாயம்! அதுக்கு மேல எனக்கு மனம் கேட்கேல்லை.

பழக்க தோசத்தில பக்கத்து வேலியில நிண்ட கிளுவையில எட்டி நல்ல தடியாய் முறிச்சுக்கொண்டு (உப்பிடியான சந்தர்ப்பத்தில வெறுங்கையனா அதுக்கிளை இறங்கவும், ஆழ்மனம் ஏதோ தடுத்திச்சிது...), "தங்கைச்சியவை! சும்மா அடிபடாங்கோ! சும்மா நாலு காசுக்குப்பெறுமதியில்லாத புள்ளியளுக்காய் உப்பிடி அடிபர்றியள். புள்ளியளை வைச்சு என்ன செய்யப் போறியள் ? கை,கால்,கழுத்து வழியில அதுகளை மாட்டலாமோ? பேந்தென்னத்துக்கு உந்தத்தேவையில்லாத வேலை? சும்மா பள்ளிக்கூடம் வந்தமா, நாலெழுத்து படிச்சமா எண்டிருக்கிறதை விட்டிட்டு ஏன் உதெல்லாம்? பொழுதுபோக்கா ஏதாவது தேவைப்பட்டால் பரதநாட்டியம், வீணை, வயலின், சங்கீதம், கொக்கான் எண்டு ஏதாவதில மினைக்கெடிறதை விட்டிட்டு, அவங்கள் பொடியங்கள் செய்யிறாங்கள் எண்டிட்டு, அவையளும் வெளிக்கிட்டு வந்திட்டினம். பத்து வரைக்கும் எண்ணுவன், அதுக்குள்ளை எல்லாரும் வீட்டை போவிடோணும். இல்லா அலகு பேர்த்துப்போடுவன். ஓம்..! சொல்லிப்போட்டன்.", எண்டவடி கிளுவந்தடியாலை விளாசாத குறையா நான் வெருட்டினதுதான் தாமதம், எல்லாரும் முணுமுணுத்துக் கொண்டு மாறிட்டினம். பார்வையாளர்களுக்கிள்ளை என்ரை வயசில இருந்த இன்னும் நாலைஞ்சு பேரிட்டை இருந்து நான் செய்த நல்ல காரியத்துக்கு பாராட்டுகளும் அப்பிடியே எடுத்துக்கொண்டு வந்து என்ரை குந்தில இருந்துகொண்டு பத்தையும், பலதையும் பற்றி யோசிச்சன். இப்பிடி இந்தக் குந்துச்சந்தோசம் வெளியால போனால் இருக்கப்போறேல்லை, இந்த வீதியையும் கொஞ்சநாள் பிரிஞ்சிருக்க வேண்டி வரப்போகுது. ம்... ம்... இந்த வீதி திறந்ததில இருந்து ஒவ்வொண்டாய் யோசிச்சுப்பார்த்தன்.

இருந்தாப்போல நினைவுகளில இருந்து மீண்ட நேரம் தான் பார்த்தன், நேரம் நல்லாத்தான் செண்டிட்டிது. இனி வீடுவரையும் சைக்கிளும் ஓடோணும் எண்டிட்டு, பக்கத்தில கிடந்த கடையொண்டில நல்ல ஒரு இறுக்கு இறுக்கிட்டு வீட்டை வெளிக்கிட நேரமும் ஒன்பதாயிட்டிது.

சைக்கிளுக்கு லைற்றும் இல்லை, ரோச்சையும் எடுத்துக் கொண்டு வர மறந்திட்டன். இருந்தாலும் பின்னுக்கு வந்துகொண்டிருந்த சைக்கிள் ஒண்டின்ரை வெளிச்சத்தில பிரச்சினையில்லாமல் இருந்திச்சிது. எட வாய்ச்சுப்போட்டிது! இந்த ஒழுங்கைக்கிள்ளை வெளிச்சமில்லாமல் என்ன செய்யிறதெண்டு நினைச்சுக் கொண்டிருந்தனான். பின்னால வந்த சைக்கிள் என்ரை திசையில தான் தொடர்ந்தும் வருகிது. என்ரை சந்தோசத்துக்கு அப்பதான் பாருங்கோ மண் விழுந்திச்சிது. கிட்டையா வந்த சைக்கிள்ளை இருந்து 2 தடியங்கள் இறங்கினாங்கள்; அரைகுறையா எழும்பி வந்த குடிகாரங்கள் மாதிரி இருந்தாங்கள்; ஏதோ தந்து வைச்சவையள் மாதிரி வங்கியில எடுத்த காசு கிடந்த என்ரை கைப்பையைப் பறிச்சாங்கள். "எடேய் எடேய் போட்டிட்டு தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தாங்கள். "அப்பு! இரவு நேரத்தில துணையில்லாமல் ஏன் கனதூரத்துக்கு வெளிக்கிட்டனீங்கள்? இந்தாங்கோ உங்கட கைப்பை! எல்லாம் சரியா இருக்கோவெண்டு பாருங்கோ! இல்லாட்டி அவங்களைக் கலைச்சுக்கொண்டு போய் நாலு தட்டுத்தட்டி வேண்டிக்கொண்டு வர", கடவுள் மாதிரி வந்த அந்தக்குரல் கேட்ட பக்கம் பார்த்தன். 2 நாளைக்கு முதல் நடந்த விளையாட்டுப்போட்டியில கராட்டி செய்த பொம்பிளைப் பிள்ளையளில ஓராள் தான் அங்கை நிண்டிது. ஏற்கனவே கண்ட முகம் எண்டதில வந்த சந்தோசம், நான் செய்த நாரதர் வேலையை நினைக்க அவமானமாய் கிடந்திச்சிது. அதுக்கிள்ளை ஏதோவொரு பதட்டத்தில பையை சோதிச்சுப் பார்த்தன், ஒண்டும் தவறேல்லை. நல்லகாலம் என்ரை வெளிநாட்டுப்பயணம் தப்பிச்சிது. ஆனந்தக்கண்ணீர் வடிய வடிய, வார்த்தையள் வரமறுக்க, சிவாஜி மாதிரி முகக்குறிப்பாலயே எல்லாம் சரியா இருக்கெண்டிறதை உணர்த்தினன். விழுந்துகிடந்த என்ரை சைக்கிளை அந்தப்பிள்ளை எடுத்துக்கொண்டு வந்து, "உங்கட வீட்டுக்குப் பக்கம்தான் நானும். வந்து விட்டிட்டுப்போறன். அடிகிடி பலமாய் பட்டிட்டோ?]". "பதுபாவியள்! வாயைப் பொத்தி அதிச்சுப்போத்தாங்கள்! பள்ளு வேள விழுண்டு போச்சு! ணான் அவங்களுக்கு எண்ண அணியாயம் செய்தணான்! இண்டக் கோளத்திள எண்ணண்டு ணான் வெளிணாட்டிள வாயைத் திடக் கிடது? அவங்கள் ஆடெண்டாளும் உடுப்பட மாட்டாங்கள்! நாசமாப் போவாங்கள்!". "ஐயோ! நல்லாத் தான் காயம் பட்டிட்டுப்போல. வீட்டை போனவுடன உப்புத்தண்ணியால வாயைக்கொப்புளியுங்கோ ! காயம் ஆறும்". "எண்ட காயம் ஆதாது. அவங்களை காது கொள்ள! குடுக்காள போவாங்கள்". "அப்பு! மன்னிக்கோணும். நீங்கள் சொல்லிறது எனக்கு விளங்கேல்லை. அது பரவாயில்லை. நீங்க யோசிக்காங்கோ!". படுபாவியள்! அதுவும் என்னைப்போய் கதைக்கேலாமல் பண்ணிப்போட்டாங்கள். நல்லகாலம் இந்தப்பிள்ளை மட்டும் வராட்டி, காசோட வெளிநாட்டுக்கனவையும் கைகழுவிப்போட்டு இருக்கவேண்டி வந்திருக்கும். "ணல்ல காளம் ணீங்கள் வண்டிடுக்காட்டி ... அடுசடி! இடுட்டிணாப்பிடகு ஏண் தணிய வெளிக்கிட்டணீங்கள்? பயமிள்ளையோ:", பழக்கதோசத்தில அப்பிடியொரு கேள்வியைக் கேட்டாப்பிறகு தான், அது எவ்வளவு விசர்த்தனமான கேள்வியெண்டு என்ரை மூளைக்குத் தட்டுப்பட்டிச்சு. "பரதநாட்டிய வகுப்புக்கு போட்டு வாறன். சும்மா ஊர்ச்சனத்தின்ரை கதையளைக்கேட்டு, மற்ற வகுப்புகள் தேவையில்லையெண்டு வீட்டில மறிச்சிட்டினம். கடைசியா அனுமதிக்கப்பட்டது டாண்ஸ் மட்டும் தான். மற்றதொண்டும் பொம்பிளையளுக்குத் தேவையில்லையாம்! உப்பிடி சொல்லிற சனத்தை நடுத்தெருவில வைச்சு நாக்கைப்பிடுங்கிற மாதிரி கேள்வி கேட்கோணும்". "எனக்கு சரியாய் குத்திச்சிது. ஆனாலும், நாக்கென்ன பிடுங்கிறது. அவங்கள் பல்லையே பிடுங்கினாப்பிறகு! சே அந்தர மாவத்துக்கு கைகொடுக்கிற கராட்டி மாதிரி தற்காப்புக்கலையளை எல்லாரும் பழகியிருக்கோணும் எண்டிறதை விளங்கிக்கொள்ளாமல், அண்டைக்கு ஏதோவொரு முசத்தியில அதுகளைக் குழப்பியடிச்சு உசார்மடையன் வேலை செய்திட்டன்! பரதநாட்டியம் மேலதிகமாய் கற்றுக்கொள்ளக் கூடின கலை, ஆனால் தற்காப்புக்கலை அவசியமாய் கற்றுக்கொள்ள வேண்டின கலை. . தற்காப்பென்ன! தற்காப்பு! இண்டைய மாதிரி மற்றாக்களையும் எல்லே காப்பாற்றலாம். அப்பிடியான கலையள் கட்டாயமாய் கற்கப்பட வேண்டியவையல்லோ! அண்டைக்கு நான் செய்த அநியாயத்துக்கு வாய்விட்டு மன்னிப்புக்கேட்கோணும் எண்டு மனச்சாட்சி உறுத்தினாலும், அடியில எங்கையோ ஆழமாய்ப்பிடிச்சிருந்த ஆம்பிளை கௌரவம் அதுக்கு் விட்டுக்குடுக்கேல்லை". "அப்பு! உங்கட வீட்டுக்கு இனி பெரீசா தூரமில்லைத்தானே. சந்தியில திரும்பினால் வீடு வரப்போகுது! அம்மா வீட்டில பேசப்போறா, உங்களுக்கு பிரச்சினையில்லாட்டி நான் போட்டு வரட்டே?" எனக்கு 'திக்' எண்டிச்சிது. ஓடிப்போன கள்ளர்மார் தற்சமயம் உதுவழியில நிண்டு கவனிச்சிட்டு, அந்தப்பிள்ளையிட்ட வாங்கிக்கட்டின ஆத்திரத்தையும் சேர்த்தெல்லே எனக்கு விளாசிப்போடுவாங்கள். தலைக்கு வந்தது தலைப்பாகையோட போனதா இல்லாமல், தலையை திரும்பக் கொண்டு போய்க்குடுக்கலாமே! பயமாய்க்கிடக்கிதெண்டு வாய்விட்டு சொல்லிறதும் மரியாதைப்பிரச்சினை. ம்..ம்.. "ணான் உம்மட அம்மாவோட ணாளைக்கு வண்டு கதைக்கிடன். பிடச்சினையில்லே! வீடு வடைக்கும் சும்மா பம்பலாய் கதைச்சுக்கொண்டு வாடும்!", வாங்கின அடியில வீங்கின மூஞ்சைக்குப் பின்னால இருந்த மூளை, 'கோடி புண்ணியம், வீடு வரைக்கும் கொண்டுவந்து விட்டுவிட்டுப்போங்கோ!' எண்டிறதை, இப்பிடி கௌரவமான கோரிக்கையாக

(20ஆம் பக்கம் பார்க்க)



# பத்மநாப ஐயருக்கு இயல் விருது

ஐயர் என்ற சொல் உணர்த்துகிற அடையாளத்தை வேறு விதமாக மாற்றியவர் இ.பத்மநாபஐயர். பத்மநாப ஐயரின் அக்கறைகள் சமூக கலை, இலக்கிய அரசியல் துறைகளில் விரிந்திருந்தன. இவைசார்ந்த விடயங்களை சீரிய முறையில் ஒழுங்கும் அழகும் பொருந்த பதித்து வெளியிடும் பணியில் ஐயர் தீவிரத்துடன் இயங்கிவந்தார். இந்த அம்சங்கள் ஐயர் என்ற சொல்லின் பொதுவான அடையாளத்தை மாற்றி படைப்பாளிகள், வாசகர்களிடத்திலே வேறுவிதமாக உணரக்கூடிய தானது. இங்கே நாங்கள் தெரிந்து கொள்வது ஒன்றின் அக்கறையும் அதற்குரிய செயலும் காட்டுகிற அடையாளத்தின் பெறுமதியை.

இப்பொழுது பத்மநாப ஐயருக்கு கனடாவில் இயங்கும் அமைப்பொன்று இயல் விருது வழங்கியிருக்கிறது.

தமிழிலக்கியத்தில் தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் இயங்கிய முக்கிய ஆளுமைகளுக்கு வருடம் தோறும் இயல்விருது வழங்கப்படுகிறது.

ஏற்கனவே பல இடங்களிலும் வழங்கப்படுகிற விருதுகள் மிகவும் கொச்சைப்படுத்தப்பட்ட நிலைக்குத் தாழ்ந்திருக்கின்றன. சார்புகள், அணிகள், குழுக்கள் சார்ந்த தேர்வுகளும் அந்தத் தேர்வுகளுக்குரிய மனப்பாங்கும்தான் பல இடங்களிலும் பரவலாகவுள்ளது. தமிழ்ச் சூழலில் இதுவொரு பேரவலமும் பெருங் கேவலமும்.

இந்த யதார்த்த நிலைமையிலிருந்து விலகியபோது யதார்த்தங்களும் உண்டு. அது குறைவதாக இருந்தாலும் சிறப்புக் கெடாமலும் நோக்குச் சிதறாமலும் தேர்வுகளைச் செய்கிறது.

அவ்வாறு இயங்குகிற வேறு யதார்த்தங்களில் ஒன்றுதான் 'இயல்' விருது மையமும்.

ஏற்கனவே இயல் விருது பெற்ற படைப்பாளிகள் வெங்கட் சாமிநாதன் கே.கணேஸ், இ.சு.செல்லப்பா, பிரமின் சுந்தரராமசாமி இப்படியொரு பட்டியல்.

இப்பொழுது இந்த விருது பத்மநாப ஐயருக்குக் கிடைத்திருக்கிறது.

முன்பு விருது பெற்றவர்கள் படைப்பாளிகள், விமர்சகர்கள்.

இப்பொழுது விருது பெற்ற ஐயர் படைப்பாளியோ விமர்சகரோ அல்ல ஐயரின் அக்கறைகளும் செயற்பாடுகளும் பதிப்பும் பரவலாக்கலும் படைப்பாளிகளிடையே பாலம் போடுதலுமாக விரிந்தது.

இதற்குத்தான் ஐயருக்கு விருது 'இயல்' விருதாளர்களின் தேர்வுகூட முற்றிலும் புதியதானதொரு அணுகுமுறையிலேயே செய்யப்பட்டுள்ளது.

விமர்சகரும்- படைப்பாளியுமல்லாத ஒரு வருக்கு முதல் முறையாக விருது வழங்குகிறது 'இயல்' இம்முறை இந்தமரபை மீறிய இயலின் இந்தத் தேர்வு மிகச் சரியானதும் சிறப்பானது மாகும்.

ஐயர் நல்ல வாசிப்பாளர், நல்ல தேர்வாளர். தன்னுடைய வாசிப்பு, தேர்வு என்பவற்றினடியாக வளர்ந்த ஐயர் பதிப்பில் ஆர்வங் கொண்டு முக்கியமான வெளிப்படுத்தல்களைச் செய்திருக்கிறார். தமிழியல் என்ற பதிப்பு மையம் ஐயரின் முக்கிய உருவாக்கம். சிறுபத்திரிகைகளுடன் பரிச்சயமான உறவு ஐயரை இலக்கியப்பரப்பில் நல்ல அறிமுகத்துக்கு வளர்த்துள்ளது. மரணத்துள் வாழ்வோம், ஊரடங்கு வாழ்வு.

ஈழத்துப் பதினொரு கவிஞர்கள், தேடலும் படைப்புலகமும் என்று தொடங்கிய தமிழியலின் பதிப்பு முயற்சிகள் இன்று பல முக்கிய புத்தகங்களை வெளியிடுமளவுக்கு விரிந்துள்ளது.

ஐயர் புலம் பெயர்ந்து இப்பொழுது ஐரோப்பாவில்-லண்டனில் இருக்கிறார். அங்கே பலரும் உழைப்பில் ஆர்வங்கொண்டிருக்க ஐயர் பதிப்பு நடவடிக்கைகளிலும் புத்தகங்களை வாங்கி அறிமுகப்படுத்துவதிலுமாக ஈடுபட்டு வருகிறார். இன்னுமொரு காலடி, கிழக்கும் மேற்கும் போன்றவை ஐயரின் இன்னொருபக்க உழைப்பு.

ஐயரின் அக்கறைகள் பற்றி எழுதுவதை விட அவருடைய செயல்களை தொகுத்து இனங்காண்பதுதான் சிறப்பானது.

சிங்கள அரசின் ஒடுக்குமுறைக்கெதிரான குரல்களைப் பதிவு செய்வதில் அவற்றைத் தொகுத்து வெளிப்படுத்துவதிலும் இருந்த கவனம்தான் மரணத்துள் வாழ்வோம் முதல் ஊரடங்கு வாழ்வு. மீண்டும் வரும் நாட்கள் வரையானது. இதே போல தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் புலம் பெயர் நாடுகளுக்குமான ஒரு துலக்கமான அடையாளமும் ஐயர்தான்.

ஐயருக்குக் கிடைத்திருக்கிற சிறப்புக்கு வாழ்த்துகள்.

கருணாகரன்

---

## குமரகுரு புடவை அழகுப் பொருள் வாணிபத்தினரின் மாபெரும் பரிசளிப்பும் வாடிக்கையாளர் கௌரவிப்பும்

### கல்வி மேம்பாட்டு நிதிக்கு ஆண்டுக்கு ஒருலட்சம் ஒதுக்கீடு

குமரகுரு புடவை அழகுப் பொருள் வாணிபத்தினரின் மாபெரும் பரிசளிப்பு விழாவும் வாடிக்கையாளர் கௌரவிப்பு நிகழ்வும் 20-03-2005 ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் குமரகுரு புடைவை அழகுப் பொருள் வாணிபத்தினரின் வாடிக்கையாளர் சார்பில் கல்வி மேம்பாட்டு நிதிக்கு ஆண்டுக்கு ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வன்னேரி முதியோர் இல்லத்திற்கு இல்லத்தில் இருக்கும் அனைத்து முதியோருக்குமான ஆடைவகைகள் அன்பளிப்பு செய்து ஒரு நாள் உணவுச் செலவையும் வாடிக்கையாளர் சார்பில் வழங்கி அத்துடன் அனைத்து வாடிக்கையாளருக்கும் மதிய விருந்துபசாரத்துடன் மாபெரும் பரிசளிப்பு நிகழ்வும் இவ்வாண்டில் தமது வாணிப நிலையத்தில் பத்தாயிரம் ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்த வாடிக்கையாளர் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கி அவர்களுக்குள் அதிர்ஷ்டசாலிகளாக மூவரை தெரிவு செய்து தங்கப்பதக்கம் பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெற்றது. இந் நிகழ்வானது ஒரு வாணிபரால் முதன் முதலாக வன்னி மண்ணில் நிகழ்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.





குமரகுரு புடைவை அழகுப் பொருள் வாணிபத்தினரால் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கிளிநொச்சி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் பரிசில் வழங்குவதை படத்தில் காணலாம்.


(சி-11472)

---


## 7ஆம் வருட "வசந்த" நினைவுகள்

கண்ணில் நீரைத் துளித்தோம்!
எம்மை உன்னில் விதைத்தோம்!

அன்னை மடியில் 29 09 1971



தீவகக் கடலில் 02 04 1998

### மேஜர் எழிலரசன் / வசந்தன்

(நவரெத்தினம் வசந்தன்-வேலணை)

தாயைவிட "தாயகம்" பெரிதென
விலங்குடைக்கும் பணிக்காய் நடந்தவனே!
நாடு உனை இழந்து ஆண்டுகள் ஏழு ஆனதா
இனியும் உன் நினைவுடன்தான் எம்மீதிக் காலம்.

"கலையகம்" வேலணை.

பெற்றோர், சகோதரர், உறவினர், நண்பர்கள்.

(சி-11471)

---

எல்லைப்படை மாவீரர்களின்

## குழந்தைகள் கௌரவிப்பும்




(காலை 11.00 மணி)

தமிழவளின் - எல்லைகாக்கும் இல்லங்கள் நூல் வெளியீடும்

(மாலை 3.00 மணி)

இடம்:கிளிநொச்சி கலைபண்பாட்டு மண்டபம்
காலம்: 02.04.2005 சனிக்கிழமை

மனையாள் மக்களென பாசப்பிணைப்பில் கலந்திருந்தவர்கள் சமர்க்களத்தில் விதையாகிப் போக, அவர்களின் நினைவுகளோடு பொறுப்புக்களையும் சுமந்தபடி வாழ்ந்துகொண்டிருக்கும் இல்லங்களின் கதைகள், அனைவரின் வீடுகளிலும் இருக்கவேண்டிய அரிய நூல். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

விளம்பர அனுசரணை:- ஈழநாதம்

கப்டன் வானதி வெளியீட்டகம்.



நெல் அறுவடைக்குப்பின்னர் எங்கள் வயல்கள் சிலவற்றில் நீங்கள் காணக்கூடிய காட்சிதான் இது. அறுவடையின் பின்னர் நெற்பயிரின் அடிக்கட்டை மற்றும் வைக்கோல் போன்றவற்றை எரிப்பதுதான் அது.

இவ்வாறு வைக்கோலை வயலில் எரிப்பது என்பது எவ்வளவு மோசமான செயல் என்பதை எங்கள் விவசாயிகள் பலர் உணருவதில்லை.

## பொருண்மிய வாசல்

# எங்கள் மண்ணின் மாண்பு

**சிதம்பரதிரு**

வைக்கோலை எரித்துக்கொண்டே இரசாயன உரவகைகளை வயல் நிலங்களுக்கு இடுவது மரபாகிவிட்டது. உண்மையில் நெற் பயிருக்கு இரசாயன உரவகைகள் மட்டும் போதுமானவை. அது மாத்திரம் அல்ல. இரசாயன உரவகைகளைக் கூட அளவுக்கு மிஞ்சியவகையில் பாவிப்பதும் இயல்பாகிவிட்டது.

இரசாயன உரப்பாவனை மண்ணுக்கு ஏற்படுத்தும் கேட்டினை யாருமே கவனத்தில் கொள்வதில்லை. மண்ணை நீண்டகால நோக்கில் பாதுகாக்கவும் வளப்படுத்தவும் இயற்கைப் பசளைகளை கூடியளவில் பாவிப்பது அவசியமானதாகும்.

இயற்கைப் பசளைகளில் பிரதானமானது குறிப்பாக வயல்களுக்கு வைக்கோல் ஆகும். அறுவடைக்குப் பின்னர் வயல்களில் சேரும் வைக்கோலை வயல்களுக்கே மீள் உரமாக்கவேண்டும்.

இதன் மூலம் வைக்கோலிலிருக்கும் பெறுமதி மிக்க போசனைப் பொருட்களை நிலத்திற்கே மாற்றக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறான நடவடிக்கையானது மண்ணை நாசமாக்காது நீண்ட கால நோக்கில் மண்ணை வளப்படுத்தும்.

எனவே விவசாயிகள் பெறுமதி மிக்க வைக்கோலை மனம் போன போக்கில் எரித்து நாசமாக்காமல் வயல்களுக்கு மீள் உரமாக்குங்கள். இதனால் நெல் விளைச்சல்களில் கூட அதிக நன்மைகளைப் பெறமுடியும்.

இது தொடர்பாக அடிக்கடி விவசாயத்துறையைச் சேர்ந்த நிபுணர்கள் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார்கள்.

விவசாயப் பெருமக்கள் இந்தக் கருத்துக்களைக் கரிசனையுடன் கேட்டு பயன்பெறுவதுடன் எங்கள் மண்வளத்தையும் பாதுகாக்க வேண்டும்.

# சொட்டு நீர்ப்பாசனமும் அதன் நன்மைகளும்

பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு தண்ணீர் அவசிய மானதொன்றாகும். எமது பிரதேசத்தில் யூன், யூலை, ஆகஸ்ட் மாதங்களில் கடும் வரட்சி காணப்படும். இக்காலத்தில் எம்மால் பயிரிடப் படுகின்ற பயிர்களுக்கு வரட்சி காரணமாக, நீர் பற்றாக்குறை காரணமாக பயிரழிவு ஏற்படுகிறது. நீர் தட்டுப்பாடு காணப்படும் பிரதேசங்களுக்கு சொட்டு நீர்ப்பாசனம் சிறந்த வழிமுறையாகும்.

அண்மைக்காலத்தில் வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் நடைபெற்ற விவசாயக் கண்காட்சியில் வன்னி வேளாண் சேவை சொட்டு நீர்ப்பாசன முறையை அறிமுகம் செய்ததோடு நீர்பாசன முறைகளையும் அதன் நன்மைகளையும் எடுத்துக் கூறியது.

பயிர்களுக்குத் தேவையான நைதரசன், ஒட்சிசன் ஆகிய இரு தாவர ஊட்டச்சத்துக்களுக்கு தண்ணீரே மூலகாரணமாகின்றது. மண்ணில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துக்களும், நிலத்தில் இடப்பட்ட உரப் பொருட்களிலிருந்து வெளிப்படும் தாவர ஊட்டச்சத்துக்களும் பயிருணவுப்பொருட்களும் நீரில் கரைந்து அதன் பின்னரே பயிர்களுக்குப் பயன்படுகின்றன.

அச்சத்துக்கள் எல்லாம் நீரில் கரைந்த நிலையிலேயே பயிர்களின் வேர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டு பயிர்களின் ஏனைய பாகங்களுக்கு எடுத்துச்செல்லப்படுகிறது. நீரின் முன்நிலையில்தான் ஒட்சிசன், ஐதரசன், நைதரசன் முதலிய ஊட்டச்சத்துக்களும் சக்கரை, மாபுரதம் முதலியன உணவுப்பொருட்களாக மாறுகின்றன.

பயிரில் அடங்கியுள்ள நீர் வரட்சிக்காலத்திற்கும், பனிக்காலத்திற்கும் வெப்பநிலை மாற்றத்திற்கும் ஈடுகொடுக்க உதவுகிறது. பயிர்களுக்கு நீர் நன்கு பயன்பட வேண்டுமானால் அவற்றுக்குத் தேவையான அளவில் ஊட்டச்சத்துக்கள் இடப்பட வேண்டும். அவ்வாறு இடப்பட்ட ஊட்டச்சத்துக்கள் பயிர்களுக்கு பயன்படுத்துவதற்கு போதுமான அளவில் நீர் வழங்கப் படவேண்டும்.

பயிர்களுக்கு இத்தனை அவசியமான நீரினை விரயம் செய்யாது பயன்படுத்தப் படக் கூடிய ஒரு முறையே சொட்டு நீர்ப்பாசன முறையாகும். இன்று விஞ்ஞான வளர்ச்சியிலும், பொருளாதாரத்திலும் முன்னேற்றம் கண்டுள்ள நாடுகளில் இந்தச் சொட்டு நீர்ப்பாசனமுறை வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. நம் நாட்டு விவசாயிகள் இந்தப் புதிய நீர்ப்பாச முறைபற்றி அவ்வப்போது கேட்டறிந்தும், சொல்விளக்கங்களைக் கண்டறிந்தும் வருகின்றன. அவ்வாறிருந்தும் விவசாயிகள் தங்கள் தோட்டக்காணிகளிலும் நிலங்களிலும் இப்புதிய நீர்ப்பாசன முறையை மேற்கொள்ளாமல் இருக்கின்றனர்.

இச் சொட்டு நீர்ப்பாசன முறையினால் பல நன்மைகள் உண்டு. அவையாவன,

1. இப்புதிய பாசன முறையால் தண்ணீர் மீதப்படுத்தப்படுகிறது.

2. வாய்க்கால் பாசனத்தில் ஒரு ஏக்கருக்குத் தேவையான நீரை நீர்ப்பாசன முறைமூலம் நான்கு ஏக்கர் நிலத்திற்கு எளிதாகப் பாசனம்செய்து பயனடையலாம்.

3. இப்பாசன முறையால் நீர் பெருமளவில் விரயமாகாது.

4. இப்பாசன முறைமூலம் பயிர்களுக்குத் தேவையான தண்ணீரை நேரடியாக வழங்க முடிகின்றது.

5. வாய்க்கால் பாசனம் மூலம் ஏற்படும் நீர் சேதாரம், காலவிரயம், நீர்ப்பாய்ச்சும் கூலியான செலவு ஆகியவை தவிர்க்கப்படுகின்றன.

6. தண்ணீர் பயிர்களுக்கு மட்டுமே அவற்றின் வேர்களுக்கு நேரடியாகச் சென்றடைகின்றது. அவ்வாறு சென்றடைவதால் களைகள் முளைக்க வழியற்றுப்போகிறது.

7. களைகள் முளைக்காமையால் களையெடுப்புக்கூலி மிச்சமாகிறது.

8.களைகள் முளைக்காமையால் பயிர்களின் வளர்ச்சியும் விளைச்சலும் சிறப்பாக அமைகின்றது.

9. களைகள் முளைக்காமல் இடப்படும் உரங்களின் ஒரு பகுதியை களைகள் எடுத்துக் கொள்ளும் நிலை ஏற்படுவதில்லை.

10. இப்பாசனமுறை மேற்கொள்ளப்படும் பயிர்களுக்கு சற்றுக் குறைவாக உரம் இட்டாலும் நல்லபலன் கிடைக்கும்.

**த.சிவலிங்கம்**

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வெளிவரும் கதிர்கள் பிலிமை பூரண செறிவுடன் முழுமையாக தாக்குவதால் முதலைப் பற்றிய எந்தவொரு அடையாளத்தையும் இது பிலிமில் விடாது.

விண்வெளியில் முதலுக்கும் கமராவிற்கும் இடையில் பல பில்லியன்மைல்கள் இடைவெளி இருப்பதால் விண்வெளிக் கமராவால் முதலைப் படம் பிடிக்கமுடிகிறது. விண்வெளிக் கமராவானது முதலை மட்டுமன்றி வைத்தியத்துறை கமராவைப் போன்று முதலுக்கும் கமராவுக்கும் இடையில் உள்ள விண்வெளிப் பாகங்களைக் கூட படம் பிடிக்கக்கூடியது.

பல பில்லியன் மைல்களுக் கப்பால் உள்ள ஒரு கலக்சியில் இருந்து வெளிவ்ரும் எக்ஸ்றே கதிரானது பிரபஞ்சத்திலுள்ள பலவிதமான வாயுக்கலவைகளாலான பிரம்மாண்டமான முகில்களைத் (Gasclouds) தாண்டியே எக்ஸ்றே கமராவை வந்தடைகின்றது. இந்த வாயுமுகில்கள் பல எக்ஸ்றே கதிர்களை உறிஞ்சிவிடுகின்றன. இதனால் கமராவில் இந்த முகில்களின் படம் ஒன்றுபடிகின்றது.

எக்ஸ்றே கதிர்கள் சாதாரண ஒளிக்கதிர்களைப் போல் கண்ணாடியில் பட்டு ஊடுருவிச் செல்லக் கூடியன. ஆனால் இக்கதிர்கள் கண்ணாடிகளினூடு ஊடுருவிச் செல்லும் போது ஒரு நேர்பாதையில் பயணம் செய்யாததால், பரப்பளவுப் பாதையில் பயணம் செய்யும் கதிர்களை ஒரே இடத்தில் சந்திக்கவைத்து ஒரு பொதுக்குவியப் புள்ளியை ஏற்படுத்துவதற்காக எக்ஸ்றே தொலைக்காட்டிகளில் தடித்த பெரும் குழாய்போன்ற வடிவிலான கண்ணாடிகள் கிட்டத்தட்ட கதிர்களுக்குச் சமாந்தரமாக, ஆனால் உள்நோக்கிய சிறிய கோணத்தில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன.

இதன் மூலம் தொலைக் காட்டிகள் மூலம் கைப்பற்றிய எக்ஸ்றே கதிர்களைக்கொண்டு படங்களை எடுப்பது மட்டுமன்றி, கதிர்களின் வேகம், சக்தி, இலத்திரனியல் மாற்றங்கள் போன்றவற்றினைப் பெறுவதனூடாக பிரபஞ்சம் பற்றிய பல விடயங்களை ஆய்வாளர்களால் அறிந்துகொள்ளமுடிகின்றது.

இத்தகைய ஆய்வுகளின் முடிவே வேற்றுக்கோள்கள் பற்றிய தகவல்களையும் அதில் மானிட வாழ்விற்குரிய இயல் தன்மையினையும் அறிந்துகொள்ள உதவுகின்றது. அப்படி வேற்றுக்கோள்களுக்கு கோள்விட்டு கோள் நகரும் மானிட வாழ்வினை ஏற்படுத்திக்கொடுக்கும் சக்தியானது எதிர்காலத்தில் உருவாகுமாக இருந்தால்,

அதற்கான ஒரு தொழில்நுட்ப முன்னேற்றம் வருமாக இருப்பின் இனி மானிட இடப்பெயர்வுகள் எல்லாம் கோள்விட்டு கோள் நகர்தலாகவே அமைந்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை எனலாம்.

அப்படியானால் கண்டம் விட்டு கண்டம் நகர்ந்து தமது பெயர்களுக்குப் பின்னால் அமெரிக்கா, அவுஸ்திரேலியா என இணைத்துக் கொண்டதுபோல் இனிவரும் காலங்களில் சந்திரன், செவ்வாய்... எனக் கூறிக்கொண்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

அன்று அறிவையும் அறிவியலையும் ஆன்மீகம் அழித்தது.

இன்று அறிவியலும் அறிவும் ஆன்மீகத்தை அழிக்கின்றது. நாளை யாருக்கு யார் முடிவாவது.

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்திச்சிது. இப்படிச் சொல்லிப்போட்டு படக்கெண்டு நான் “அங்கை பாடுங்கோ! நச்சச் சத்திரங்கள் வடிவாயிடுக்கு ஏன்!”, எண்டு மேல ஆகாயத்தைக்காட்டி கதையை மாத்தீட்டன். கொஞ்ச நேரத்தில என்ரை வீடும் வந்திச்சிது. ரத்தம் வந்துகொண்டிருந்த வாயைத் திரும்ப ஒருக்கால் சால்வையால துடைச்சுப்போட்டு சொன்னன், “தங்கைச்சி! என்னண்டு நண்டி சொல்றதெண்டு எணக்குத் தெடியுதில்லை. பெடியதொடு உதவி செய்திடுக்கிறீயள். வாழ்க்கையில உம்மை ஒடுநாளும் நாளும் மடக்க மாட்டன்”. “அதெல்லாம் பரவாயில்லை. ஒருத்தருக்கொருத்தர் உதவிறது சகஜம் தானே! நானும் உங்களை என்ர வாழ்க்கையில மறக்கவே மாட்டன்”, எண்டிட்டு விடைபெற்றுக்கொண்டு வீட்டை திரும்பிச்சிது அந்தப்பிள்ளை. எனக்கு அந்த கடைசி வசனம் சுருக்கெண்டு தைச்ச மாதிரி இருந்திச்சிது. ஆறப்போடாமல் தாய்-தகப்பனோடை ஒருக்கால் போய் நான் கதைச்சு, கராட்டி வகுப்புக்கு தொடர்ந்தும் போகவிடப்பண்ணோ ணும் எண்டு நினைச்சுக்கொண்டு வீட்டுக்கை போனன்.

உதுதான் பாருங்கோ நடந்தது. இனிமேல் காலத்தில நீங்களும் என்னை மாதிரி அவசரப்படாமல், கிழட்டு ஞாயங்களை(?) கதைச்சு சின்னனுகளின்ரை (கூட எங்களின்ரையும் தான்) எதிர்காலத்தில மண்ணைப்போடாமல், உருப்படியான காரியங்களைப் பாருங்கோ! சரி சரி! தையல் போட்டது, அதிகமா வாய் அசைக்கக்கூடாதெண்டு டொக்ரர் சொன்னவர். கவனமாய் எல்லாரும்

தமிழன் போரியலை மறந்ததால் அடிமைப்பட்டான் - நாம்
போரியலைக் கற்போம் சுதந்திரமாக வாழ்வோம்
என முழங்கியவாறு வெளிவந்து விட்டன

**போர்ப்பறை வெளியீடுகள்**

போரியல் வரலாற்றில் நிகழ்ந்த மயிர்க்கூச்செறியும் உண்மைச் சாகசச் சம்பவங்களைத் தாங்கியவாறு வெளிவந்துவிட்டன.

**ஸ்கோர்ஸனியின் சிறப்பு நடவடிக்கைகள்**

1940 இல் பிரான்சுக்குள் நடந்த மின்னல்வேக நடவடிக்கை, 1941இல் இரசிய எல்லையில் நடந்த வலிந்ததாக்குதல், இரண்டாம் உலகப்போரில் இத்தாலியின் தலைவரான முசோலினியை மீட்டல் போன்ற பல்வேறு தீரம்மிகு நடவடிக்கைகளை எடுத்துக்கூறும் நூல்.

தமிழாக்கம்
மார்சல்



**தப்பியவன்**

வளைகுடாப் போரில் மறைமுக நடவடிக்கைக்காக சென்ற எட்டு பிரித்தானிய சிறப்புப் படை (SAS) வீரர்களில் தப்பி வந்த ஒரு வீரனின் கதை

தமிழாக்கம்
சந்திரமதி

**கமிகாசிகள்**


ஜப்பானிய தற்கொடை வீரர்களின் வீரஞ்செறிந்த தீரம்மிக்க வீரவரலாறு.

தமிழாக்கம்
ந. சுரேந்திரன்

(5500)

குமுதினிப் படுகொலையின் பின்னரும் அது நெடுந்தீவு மக்களை ஏற்றிப் பயணித்துக்கொண்டேயிருந்தது.அந்தக் காலத்தில் குமுதினிக்கு சகோதரப்படகுகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. கப்பலின் வடிவிலான உருக்கினால் உருவாக்கப்பட்ட வசதி மிக்க மணிமேகலை, வடதாரகை ஆகிய படகுகளும், எலரா என்ற மரத்தினாலான படகும் சேவையில் இறங்கின.இவற்றில் எலரா வல்வெட்டித்துறையைச்சேர்ந்த தனியார் ஒருவரின் படகு. கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது அது சிறிலங்கா படையினரால் பிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டு அரச உடமையாக்கப்பட்டது. அரசுடைமையாக்கப்பட்ட அந்த இழுவைப்படகு அரசால் நெடுந்தீவுக்கு போக்குவரவுக்காக வழங்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய படகு திருத்தத் தளம் காரைநகர் சிறிலங்கா கடற்படைத்தளத்துக்கு மேற்காக நீலாங்காடு என்ற இடத்தில் இருந்தது. கடலில் இருந்து படகை துலாவினால்(வின்ச்) டொக்கில் ஏற்றப்பட்டு தண்டவாளம் மூலம் திருத்த வேலைத்தளத்திற்கு கொண்டுசெல்லக்கூடிய வசதியினை இந்த வேலைத்தளம் கொண்டி




# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

ருந்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை முன்னர் பொதுவேலைத்திணைக் களம் என்ற பெயரில் இயங்கிவந்தது. அப்போது இந்தத் தளம் பி.டபிள்யு.டி வேலைத்தளம் என்ற பெயராலேயே அழைக்கப்பட்டது.

1986இல் மணிமேகலை, வடதாரகை ஆகியன திருத்தப்பணிக்காக நீலாங்காடு தளத்துக்குக் கொண்டுவரப்பட்டன.இவற்றில் மணிமேகலை டொக்கில் ஏற்றப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது.

வடதாரகை டொக்கில் ஏற்றப்படுவதற்காக கடலில் நீலாங்காடு தளத்தின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்தது.

ஈ.பி.டி.பி டக்ளஸ்தேவானந்தா ஈ.பி.ஆர்.எல்.எவ் இராணுவத்தளபதியாக(?) இருந்தபோது 1986இல் காரைநகர் கடற்படைத்தளத்தை தாக்கியழிக்கிறேன் என்று ஒரு தாக்குதலை நடத்தினார். தாக்குதல்களுக்குரிய உபாயங்கள் இரகசியம் பேணும் தன்மை என்பவற்றை கொண்டிராத நிலையில் அந்த தாக்குதல் தோல்வியடைந்தது.இதில் இவர்களை காப்பாற்றியதில் விடுதலைப்புலிகளின் பங்கு இருந்துள்ளது.

இந்த தாக்குதலையடுத்து காரைநகர் கடற்படைத்தளத்தில் நின்ற சிறிலங்கா கடற்படையினர் சரமாரியாக நீலாங்காடு திருத்தத் தளம் மீது தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் மணிமேகலையும் வடதாரகையும அழிந்து போயின.திருத்தத்தளமும் அழிந்துபோனது. இந்த வசதி மிக்க இரு படகுகளும் அழிந்துபோனநிலையில் குமுதினிதான் நெடுந்தீவின் போக்குவரவிற்கான உயிரானது. எலரா படகும் பழுதடைந்து கைவிடப்பட்டது.

இதற்குப் பிறகு 1980களின் கடைசியில் மீளவும் ஒரு உருக்கினாலான வசதிமிக்க வேகமாக பயணிக்கத்தக்க படகு ஒன்று வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்டது.

அதற்கு இடப்பட்ட பெயர் வலம்புரி.இந்த பெயர் பரீட்சயமான ஒன்றாக இருக்கிறதா. ஓம், போரில் சிறிலங்கா கடற்படையின் பயன் பாட்டில் இருந்து தமிழ் மக்கள் அழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தவேளையில் வலம்புரி பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்கரும்புலித் தாக்குதலில் அழிக்கப்பட்ட தகவலை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.அந்த அதே வலம்புரிதான் நெடுந்தீவுக்கு வழங்கப்பட்டது.

அதன் கதையைப் பார்ப்பம். 1980களின் கடைசியில் கையளிக்கப்பட்ட வலம்புரி சிறிது காலமே மக்களுக்கு சேவையாற்றியது. வசதியான இந்தப்படகு தமிழ் மக்களுக்கு ஓடுவது சிறிலங்கா கடற்படையின் கண்களை உறுத்தியது. அதனை தாம் கைப்பற்றவேண்டும் என திட்டமிட்டனர். நயினாதீவு சிறிலங்கா கடற்படையினர் இதன் மீத கண்வைத்தனர்.ஆயினும் கைப்பற்றும் சந்தர்ப்பம் கிட்டவில்லை. இந்திய இராணுவக்காலம் என்பது அதன் காரணம்.1990 மார்ச்சில் இந்திய இராணுவம் போய்விட்டது. அதற்குப் பிறகு கொஞ்சக்காலம் பிரேமதாசவுடனான சமாதானக் காலம். 1990 யூனில் 2ஆம் ஈழப்போர் தொடங்கிவிட்டது. அப்போது வலம்புரியை கடற்படை பறிக்கும் என்று தெரிந்த காரணத்தால் வலம்புரியை மாவலித்துறையில் கட்டிவிட்டு, குமுதினியையும் கட்டிவிட்டு சாதாரண போக்குவரவுப்படகுகளில் பயணம் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டது. இருந்தும் வலம்புரியை அவசர பயணமொன்றிற்காக குறிகாட்டுவான் கொண்டு செல்லவேண்டிய தேவை ஏற்பட்டது. வலம்புரி குறிகாட்டுவான் சென்றது. அதனை நயினாதீவிலிருந்து கடற்படையினர் கண்டுவிட்டனர். அவர்கள் பார்த்துவிட்டது படகுப்பணியாளர்களுக்கு தெரிந்து விட்டது. அதனால் அவர்கள் வலம்புரியை குறிகாட்டுவான் துறையில் கட்டிவிட்டு அதனை பூட்டிவிட்டனர். அவர்கள் வேறு படகில் அதாவது நெடுந்தீவு கூட்டுறவுச் சங்கப்படகில் நெடுந்தீவு திரும்பினர். அந்தப்படகை கடற்படையினர் நயினாதீவுக்கு வருமாறு அழைத்தனர்.

அப்போது குறிகாட்டுவான் விடுதலைப்புலிகளிடம் இருந்தது.நயினாதீவு குறிகாட்டுவான் இரண்டும் கால் மைல் இடைவெளியில் நேருக்கு நேர் தெரியும் வகையில் உள்ளன.

இந்தப்படகு நயினாதீவு சிறிலங்கா கடற்படை இறங்குதுறைக்கு சென்றது. வலம்புரிப் படகுப் பணியாளர்களை கடற்படைக்குத் தெரியும் அவர்களை அழைத்து வலம்புரியை பார்க்கவேணும் கொண்டு வரும்படி அவர்களிடம் கேட்டனர் கடற்படையினர்.

அதற்கு அவர்கள் வலம்புரியில் எஞ்சினியர்களை கொண்டு வந்தனாங்கள்.அதில சின்னப்பழுது.எஞ்சினியர் பூட்டித் திறப்புக்கொண்டு போயிற்றார் என்றனர் அவர்கள்.

அரைகுறை மனதுடன் கடற்படையினர் அவர்களை விட்டுவிட்டனர்.

துருவன்





மகாவம்சம் நூலைக்கொண்டு சிங்கள பேரினவாதிகள் தமிழ் மக்களை வந்தேறுகுடிகளாக்கினர். இது தொடர்பாக தமிழ் வரலாற்றாய்வாளர்கள் மனக்கொதிப்புற்றுள்ளனர். வரலாற்றாய்வாளர் ப.புஷ்பரட்ணம் இது தொடர்பில் தெரிவித்த கருத்தை இங்கு பார்ப்போம்.

இலங்கையின் ஆதிகால வரலாறு தொடர்பாக கடந்த இரு தசாப்தங்களுக்கு முன்னர் நிலவிய கருத்துகளுக்கும் சமகாலத்தில் நிலவுகின்ற கருத்துக்களுக்குமிடையே அடிப்படை வேறுபாடுகள் இருப்பதனை அவதானிக்கலாம். இலங்கையில் தொல்லியல் மானுடவியல் முதலான விஞ்ஞான பூர்வ ஆய்வுகள் ஆரம்பமாகின்றதெனவும் இக்காலத்திற்கு முன்னர் இலங்கையில் நாகரிகமுடைய மனிதப் பிறவிகள் வாழவில்லையெனவும் கூறுகின்றன. இவ்வாறு குடியேறிய விஜயன் வழி வந்தோரே சிங்கள மக்கள் எனவும் தமிழர்கள் இலங்கைக்கு அக்கரையிலிருந்து அவ்வப்போது படையெடுப்பாளராக ஆக்கிரமிப்பாளராக வந்து குடியேறிய சிறு பிரிவினர் எனவும் கூறுகின்றன. இக்கட்டுக்கதைகளை உண்மை வரலாறு என ஏற்றுக்கொண்ட பரணவிதான போன்ற சிங்கள அறிஞர்கள் விஜயன் வருகை பற்றிய கதை வடஇந்தியாவிலிருந்து ஏற்பட்ட ஆரியர் குடியேற்றமெனவும் இவர்களே இலங்கையில் நாகரிகத்தை அறிமுகப்படுத்தினர் எனவும் விளக்கமளித்தனர்.

ஆனால் கடந்த இரு தசாப்தங்களாக இலங்கையில் வளர்ச்சியடைந்துள்ள தொல்லியல் ஆய்வுகள் இலங்கையின் ஆதிகால வரலாறு தொடர்பாக நம்பகத்தன்மை வாய்ந்த புதிய முடிவுகளை முன்வைத்துள்ளன.

இலங்கையின் வரலாறு விஜயன் வருகையோடு ஆரம்பிக்கவில்லை. மாறாக இற்றைக்கு 28ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இடைக்கற்கால பண்பாட்டுடன் இலங்கையின் நாகரிகத்தை வடஇந்தியாவிலிருந்து குடியேறிய விஜயன் அறிமுகப்படுத்தவில்லை. மாறாக தென்னிந்தியாவுடன் தொடர்புடையதாயிருந்த பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய திராவிட மக்களே அறிமுகப்படுத்தினர்.

பாளி இலக்கியங்களின் செல்வாக்குக்கு உட்பட்டு எழுந்த பிற்கால வரலாற்று நூல்களில் தமிழர் வரலாறு புறக்கணிக்கப்பட்டதைப்போல் அரச ஆதரவில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் கூடத் தமிழர்



பிராந்தியங்களில் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டே காணப்படுகின்றன.

# பண்பாட்டுச் சான்றுகளை வெளிக்கொண்டு வர வேண்டும்

வளர்ச்சியடையாத காலகட்டத்தில் தீபவம்சம், மகாவம்சம் முதலான பாளி நூல்களில் இடம்பெற்றுள்ள கட்டுக்கதைகளும் ஐதீகங்களும் இலங்கையின் உண்மையான வரலாறு என நம்பப்பட்டன. இப்பாளி இலக்கியங்கள் இலங்கையின் வரலாறு கி.மு.6 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய விஜயன் கூட்டத்தாரோடு தொடங்குகிறது. இப்பண்பாட்டிற்கும், தமிழ் நாடு திருநெல்வேலி பண்பாட்டிற்குமிடையே பல்வேறு அம்சங்களில் ஒற்றுமைத்தன்மை காணப்படுகிறது.


மகாவம்சம் கூறும் விஜயன் வருகை பற்றிய கதை வெறும் கட்டுக்கதை. அவ்வாறான குடியேற்றம் இலங்கையில் நடந்ததற்கு எதுவித தொல்லியல் சான்றுகளும் காணப்படவில்லை.

பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய சான்றுகள் தமிழரின் பூர்வீக வரலாறு தமிழ்ப் பிராந்தியங்களில் இருந்து வெளிக்கிளம்ப வேண்டும் என்பது எமது வரலாற்று ஆய்வாளர் ப.புஸ்பரட்ணம் கூறுகின்றார். மேலும் எமது வரலாற்றுச் சான்றுகளை அறிந்து கொள்வோம். நாம் யார் என அறிவோம்.

குரலோன்

# சொல்லின் பரிமாணங்கள்

மொழிகளில் புரிந்துகொள்ளமுடியாததும் சக்தி கூடியதுமானது மௌனம் ஒன்றே. மற்றும் ஒவ்வொரு சொல்லும் சொல்பவரினதும் கேட்போரிடமும் மூன்று விதமான பிரதிபலிப்பை ஏற்படுத்துகிறது. பண்பான வேண்டுகோள் என்று ஆங்கிலத்தில் May I come in? என்றாலும் கூட அதைச் சொல்பவர் ஆதங்கத்துடன் சொல்பவரால் பணிவுடன் சொல்லல், வெகுளித்தன்மையால் சொல்லல் போன்ற பிரதிபலிப்பை ஏற்படுத்தும். அதைக் கேட்பவர் மனநிலைக்கேற்ப பிரதிபலிப்பைக் காட்டுவார். ஆனால் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வகைத் துலங்கலையே வெளிப்படுத்துவர். அது அவர் சார்ந்த சமூக விழுமியங்களின் பிரதிபலிப்பைக்காட்டும். எனவே சொல்லானது மூன்றுவகையான பிரதிபலிப்பை ஏற்படுத்துகிறது. ஆரோக்கியமான சிறப்பான சமூகத்தின் பிரதிபலிப்பு எப்போதும் சரியானதும் சிறந்ததுமாகவே இருக்கவேண்டும். அதற்கமைவாக உண்மையை விளங்கிக்கொள்ளமுயலுதல், தன் தவறுகளை ஏற்றுக்கொள்ளல் தவறுகளிலிருந்து விடுபட முயற்சித்தல், விட்டுக்கொடுப்பு, மன்னிப்பு, நன்றி அறிதல், நன்றி சொல்லல், தட்டிக்கொடுத்தல், ஒற்றுமைக்குக்குரல் கொடுத்தல், தவறிற்கான அடிப்படைக்காரணம் நுணுகி ஆராய்தல், பெரிய பிரச்சினைகளை சிறு நடவடிக்கை மூலம் கட்டுப்படுத்தல் போன்ற நற்பண்புகள் வளர்க்க உலகின் முன்னேற்றம் நாகரிகம் சிறக்கும்.




சுயநலம், பொதுநலம், வெகுளித்தன்மைகளும் மனிதனிடம் குடிகொள்கின்றன. அவை அவர்களின் செயற்பாட்டிற்கான பிரதிபலிப்பை ஏற்படுத்துகின்றன.

ஒரு தனி மனிதனின் திறமைகளை பலரும் தங்களிற்குச் சாதகமாக்கிக்கொள்கிறார்கள். தங்களின் சுயநலத்திற்காக குறுக்கு வழிகள், குழிபறிப்புக்களிலும் ஈடுபடுவதால் திறமைசாலி பல சிக்கல்கள் கஷ்டங்களில் சிக்குகிறான். சுயநலவாதியே மகிழ்வதுடன் தன்னைச் சுதாகரித்து மற்றவர் துன்பத்தில் இன்பங்காண்கிறான். வெகுளித்தனமானவனுக்கு ஒன்றும் புரிவதில்லை. சிறந்த பொதுநலவாதி தன் இலட்சியப்பிடிப்பில் உறுதியாகவும் சிறந்த ஒழுக்கம் கடைப்பிடிக்கும் போது தடைகள் படிக்கல்லாகிறது. அவன் சேவையால் அவன் குலம், கோத்திரம், மொழி, நாடு, இனம் உலகம் என மகிழ்கிறது.

தனியவனின் திறமையே குலம் முதல் உலகம் வரை போற்ற மகிழக் காரணமாகிறது. மாறாக இவை எதுவுமே அவன் சிறப்பிற்கு விசேட காரணமாகாது.

சொல், செயல், சிந்தனை சிறந்ததாக்க முயல்வதுடன் அதைச் சிறப்பிக்கக் கரம்கொடுப்போம். சொல்லின் பிரதிபலிப்பு ஒன்றாக்க அதுவே நன்றாக அமைக்கக் கரம் கொடுப்போம். அதன் மூலம் சிறந்த பண்பாடு, கலை, கலாச்சாரம் வளப்படட்டும். வளமான வாழ்விற்கு ஒத்துழைப்போம். வாழ்வோம் வழிகாட்டியாய் வளப்படட்டும் சமுதாயம். இதன் மூலம் உலகின் வழிகாட்டிகளாக வழிநடத்துபவராக முன்னெடுப்பாளர்களாவோம். சிறந்த இலட்சியங்கள் அழிவதில்லை. இலட்சியவாதி சாவதும் இல்லை.

ந.கருணைதாசன்



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 08

### பகுதி -41

எந்த ஒரு ஆரம்பச் சந்திப்புடையவும் மிகக் கடினமானதும் முக்கியமானதுமான வேளையாக இதுதான் இருக்கும். முழு பட்டறிவினுடையவும் பயன் விளைவுத் தன்மையை நிர்ணயிப்பதில் அது பெரும் பங்கு வகிக்கும். பல சந்தர்ப்பங்களிலே, இவ்வாறான சந்திப்பு ஒன்றினுடைய நோக்கம் பற்றி விளக்குவதும் பயனற்றதாகவே இருந்திருக்கிறது. எனவே தான் நான் எந்த விளக்கத்தையும் தர அல்லது சில சமயங்களில் அது அழைக்கப்படுவது போல் "பட்டறிவைக் கட்டமைப்புச் செய்தல்" ஐ (structuring of the experience) மேற்கொள்ள முயலவில்லை. அங்கு நிலவிய அமைதி, எனக்கு அசௌகரிய உணர்வைத் தரவில்லை. ஒரு உரையாடலைத் துவக்கி வைப்பதற்காகவென்றே நான் மேற்கொள்ளக்கூடிய எந்த முயற்சியையும் விட மிக ஆக்கபூர்வமான முறையிலே அவள் அதற்குத் தாக்குப்பிடிப்பாள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. உரையாட வேண்டும் என்பதற்காகவே ஒரு உரையாடலை நடத்த வேண்டிய தேவை எங்களுக்கு இருக்கவில்லை. ''எங்கே தொடங்குவது என்று எனக்குத் தெரியவில்லை " என்றாள் அவள். "எனக்குப் புரிகிறது. சில சமயங்களிலே தொடங்குவது என்பது மிகக் கடினமானதாக இருக்கும்" என்றேன் நான். அவள் புன்னகைத்தாள். ஆனால் உயிர்த் துடிப்பு இல்லாத புன்னகையாக அது இருந்தது. "சொல்லக் கனக்க இருக்கு" என்றவள் தொடர்ந்து, ''சொல்லாமல் விடவும் கனக்க இருக்கு." என்றாள்.

"பல சந்தர்ப்பங்களிலும் இதுதான் நிலைமை." என்றேன்.


"சிலதுகள் சொல்லாமல் விடுறதே நல்லது." என்னை நேராகப் பார்த்தபடி அவள் சொன்னாள்.

"சில சந்தர்ப்பங்களில் அப்படியும் தோன்றும்" என்று பதிலளித்தேன்.

"ஆனா சொல்லாம விடுற கன விஷயங்கள் சுமையாக ஆகிவிடும்"

"ஓம். அப்பிடியும் நடக்கலாம்." எனது கருத்தைச் சொன்னேன்.

எதுவுமே பேசாமல், ஜன்னலுக்கு வெளியே பார்வையைச் செலுத்தியபடி நீண்ட நேரம் அமர்ந்திருந்தாள். அவள் இயல்பு நிலைக்கு மீளத் தொடங்கியிருந்தாள். "இந்த ஜன்னலுக்கூடாக பார்க்கும்பொழுது மிக அழகாக இருக்கிறது..... அதோ அந்த ஆலயம் மிக அழகாக இருக்கிறது. பெரிதானதும் பெலமானதும்.... அமைதி தருவதாகவும் தோன்றுகிறது." என்றாள்.



"ஓம். அப்படித்தான் தோன்றுகிறது" என்றேன். இறுக்கமாக கோர்க்கப்பட்டிருந்த கைகளைக் குனிந்து பார்த்தாள். தலையை நிமிர்த்திய அவள் என் கண்களை நேராகப் பார்த்தாள். அவளுடைய கண் கலங்கியிருந்தது. " நான் டிப்ஸைப் பற்றி சரியாகக் கவலைப்படுறன்....ஆழமாக் கவலைப்படுறன்" என்றாள்.

இப்படிச் சொல்வாள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு இயல்பாக அவள் கூறியதை உள்வாங்க முயன்றேன்.

''அவனைப் பற்றிக் கவலைப்படுகிறீங்களா?'' என்று கேட்டேன். இந்தமட்டில் வேறு எதுவும் கேட்கவில்லை. ஏன் என்று அவளைக் கேட்கவில்லை. "ஓம், சரியாக் கவலைப்படுறன். இப்பயெல்லாம் அவன் சரியான கவலையில இருக்கிறான். திரும்பி என்னப் பார்த்தபடி நிற்பான். எப்போதும் ஊமையாக நிற்பான். அவன் இப்ப அடிக்கடி தன்ர அறைய விட்டு வெளியில வாறான். ஆனா... விலகியே நிற்கிறான். ஆட் கொள்கிற ஒரு நிழலப்போல. நான் ஏதாவது கதைக்க முயன்றா ஓடிவிடுகிறான். ஆனா திரும்பவும் வந்து என்னப் பார்த்தபடி நிற்பான். அப்ப அவன்ர கண்களில அவலமான துக்கம் 'தெரியும்'' என்றவள் மேசையிலிருந்த பெட்டியிலிருந்து ஒரு ருசுத் தாளை எடுத்து கண்களை ஒற்றிக்கொண் டாள்.

இது உண்மையில் ஒரு ஆர்வமூட்டும் அவதானிப்பாக இருந்தது. முன்னையை விட அதிகமாக டிப்ஸ் தன் அறையை விட்டு வெளியே வருகிறான். அவள் சொல்வதன்படி 'அண்மைக்காலங்களில்' அவன் 'அதிக துக்கமாயிருக்கிறான்.' அவள் இப்போது முன்னரை விட அதிகமாக அவனுடைய துக்கத்தை உணர்வதாகவும் இது இருக்கலாம். டிப்ஸ் வீட்டில் தன் உணர்வுகளை முன்னரை விட அதிக வெளிப்படையாகக் காட்டுவதாகவும் இது இருக்கலாம். அவ்வளவு மொழி ஆளுமை அவனுக்கு இருக்கும் பொழுது எதுவுமே பேசாமல் இருப்பதானது அவன் பிரம்மாண்டமான அகவலு வையும் கட்டுப்பாட்டையும் கொண்டிருப்பதையே எடுத்துக்காட்டியது.

நீண்டநேர மௌனத்திற்குப் பின், "அவன் அப்படிச் செய்யும் பொழுது எனக்கு சரியான அந்தரமா இருக்கும்" என்றாள். "ஏதோ அவன் என்னிடம் கேட்பது போல்.... என்னால் தரமுடியாத ஏதோ ஒன்றைக் கேட்பது போலிருக்கும். புரிந்துகொள்வதற்கு கடினமான பிள்ளையவன். நான் முயற்சி செய்து பார்த்திருக்கிறன்.




எனக்குத் தோல்வியே கிட்டியது. ஆரம்பத்தில இருந்தே... அவன் குழந்தையாக இருந்த காலத்தில இருந்தே அவனை என்னால புரிஞ்சு கொள்ள முடியேல்ல. உண்மையைச் சொல்லப்போனால் டிப்ஸுக்கு முதல் எந்தக் குழந்தையோடயும் எனக்கு பரிச்சயமில்ல. பிள்ளைகளோட அல்லது குழந்தைகளோட இருக்கிற பெண் என்ற வகையில எனக்கு உண்மையிலயே எந்த அனுபவமும் கிடையாது. அவர்கள் எப்படியிருப்பார்கள் என்று அதாவது ஆட்கள் என்ற வகையில எப்படி இருப்பார்களென்று எனக்குத் துளிகூடத் தெரியாது. உயிரியல் ரீதியாக, உடல் ரீதியாக மருத்துவ ரீதியாக அவர்களைப் பற்றிய எல்லாம் எனக்குத் தெரியும். ஆனா டிப்ஸ் ஒருபோதுமே என்னால புரிஞ்சு கொள்ள முடியல்ல. அந்த மாதிரியான ஒரு உளவலியாக அவன் இருந்தான். அவன் பிறந்த காலத்திலிருந்தே அந்த மாதிரியொரு ஏமாற்றமாயிருந்தான். பிள்ளையொன்றை பெற நாங்கள் திட்டமிட்டிருக்கவில்லை. அவன் கருத்தரித்தது ஒரு விபத்துத்தான். அவன் எங்கள் திட்டங்களை எல்லாம் குழப்பிவிட்டான். என்னுடைய தொழில்சார் பணிகள் காத்துக் கொண்டிருந்தன. என்னுடைய சாதனைகள் பற்றி என்ர கணவர் பெருமை கொண்டிருந்தார். டிப்ஸ் பிறக்க முன்னதாக எனது கணவரும் நானும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தோம். அவன் பிறந்த பின் மிகவும் வித்தியாசமானவனாக இருந்தான். மிகவும் பெரிதாகவும் மிகவும் அலங்கோலமாகவும் இருந்தான். பெரிய, ஒழுங்கான உருவமில்லாத பிண்டமா... எந்த பதில் வினையும் காட்டாதவனாக... இருந்தான். உண்மையைச் சொல்லப்போனால் அவன் பிறந்த கணத்திலிருந்தே என்னை நிராகரித்து விட்டான். எப்ப நான் அவனைத் தூக்கினாலும் உடலை இறுக்கிக் கொண்டு குழறி அழுவான்..." என்ற அவளது கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது. அவள் கதைக்கும் பொழுதே ருசுத் தாள்களை எடுத்து கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள் கிட்டத்தட்ட விம்மலும் அழுகையுமாக தன் கதையைக் கூறிக்கொண்டிருந்தாள். நான் கதைக்க முயற்சி செய்தபோது வேண்டாம் என்று தடுத்துவிட்டாள்.

"தயவு செய்து எதையும் பேசாதீர்கள்" கெஞ்சுவது போல் வேண்டினாள். "நான் இத வெளியில் கொண்டுவர வேண்டும்... ஆகக் குறைந்தது இந்த ஒரு முறை எண்டாலும் இத வெளியில கொண்டு வரவேணும். மிக நீண்ட காலமா என்னோடேயே இத சுமந்து கொண்டு திரியுறன். மனதின்ர நடுவில பாரமான கல்லு இருக்கிறபோலதான் இது. என்னப் பற்றி நீங்க எப்பிடி வேணுமெண்டாலும் நினைச்சுக்கொள்ளுங்கோ... ஆனா... தயவுசெய்து உங்களுக்குச் சொல்ல விடுங்கோ.

(தொடரும்)

---

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவை எதற்கென்றால், சம்பந்தப்பட்ட விடுதலை யமைப்பு விமானத்தை தாக்குதலுக்கு பயன்படுத்தும்போது, விமானம் தரையிலிருந்து கிளம்பியதிலிருந்து மிகக்குறைவான நேர அவகாசத்தில் தனது முதலாவது தாக்குதலை செய்யவேண்டிய கட்டாயத்திலிருக்கும், அப்படியான சமயங்களில் Single control உடைய விமானமென்றால் அந்தக்குறுகிய நேரத்தில் விமானத்தின் AIRBORN ஐயும் கவனித்துக்கொண்டு, தாக்குதலையும் செய்வது ஒரு Flight controller ஆல் முடியக்கூடிய காரியமல்ல!

6. குறுகிய தூரமுடைய runway யில் take-off & landing செய்யக்கூடிய விமானமாக இருக்க வேண்டும். அதற்கு கவனிக்கப்பட வேண்டியவை விமானத்தின் MTW (maximum takeoff weight) மற்றும் thrust,h ydraulically operated sperated speed breaks இருந்தால் விசேஷம்.


7. Low claiming altitude இல் திருப்பப்படக்கூடிய வகை விமானமாக இருக்க வேண்டும். அதாவது விமானம் runway யின் முனையிலிருந்து மேலெழும் நேரத்திலிருந்து (இதை wheels up time என்று சொல்லுவார்கள்.) பாதுகாப்பான உயரத்தை அடைவதற்கு எடுக்கும் நேரம் 3இலிருந்து 5 நிமிடங்களாக இருந்தால், அந்த நேரப்பகுதிக்குள் குறைந்தபட்சம் விமானத்தை 70 பாகை அளவிலாவது திரும்பக்கூடிய வகை விமானமாக இருக்க வேண்டும்.

இது எதற்கென்றால் விடுதலை அமைப்பு அமைக்கும் runway யின் அமைப்பின் சுட்டெண் N23 என்றால் (வடக்கு 23பாகை) அதை ராணுவத்தால் ஊகிக்க முடியும். (இடவசதி, வானிலிருந்து எடுக்கப்படும் புகைப்படங்கள், உளவுத் தகவல்கள் ஆகியவற்றை வைத்து ஓரளவுக்கு runwayயின் indexஐ ராணுவம் ஊகித்து வைத்திருப்பார்கள்) அந்தத் திசையில் குறுகிய தூரத்தில் நிச்சயம் அவர்களது ராணுவ முகாம் இருக்காது. ஒருவேளை இருந்தாலும் runway index point பண்ணும் திசையை நோக்கி anti aircraft ஏவுகணைகளைத் தயாராக வைத்துக்கொண்டு காத்திருப்பார்கள்.

விமானம் கிளம்பி குறுகிய நேரத்தில் திசை திருப்பப்படக் கூடிய விமானமென்றால் முகாமின் Airspace க்குள் இடது புறமாகவோ வலது புறமாகவோ நுழையமுடியும்.


கடைசியாக Very low main tanence விமானமாக இருக்க வேண்டும். இலகுவாக பயிற்சி பெறக் கூடிய விமானமாகவும் இருக்கவேண்டும்.

விடுதலை அமைப்புக்கள் விமானங்களை வாங்கும் போது அநேகமாக இந்த விஷயம் எல்லாவற்றிலும் கவனம் செலுத்தியிருப்பார்கள். இவற்றைத் தவிர அந்த விமானங்களுக்கு நேர்மாறான model விமானங்களின் dummy களையும் அநேகமாகத் தயாரித்திருப்பார்கள். (மேலேயிருந்து எடுக்கப்படும் புகைப்படங்களின் குழப்பம் விளைவிக்க செய்யப் படும் பொம்மை விமானங்கள் தான் இந்த dummy models)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



*பாவலா!*

*வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு நம்மூரில் சந்தையில் கேள்வி அதிகமாக இருக்கிறதே இது எதனால்?*

*சுகந்தினி,*
*இரத்தினபுரம்.*

இறக்குமதி கழுதைக்கு உள்ளூர் குதிரையை விடவும் விலை அதிகம் தான்...

*பாவலா!*

*தமிழீழ தொலைக்காட்சிச் சேவை ஆரம்பித்ததை அறிந்த சிங்கள அரசு அதனையும் போர் நிறுத்த மீறல் என புலிகள் மீது குற்றம் சாட்டுவார்களா?*

*மயூரன்,*
*சிறுப்பிட்டி.*

நன்றாக நூறாயிரம் முறை குற்றம் சாட்டட்டுமே நமக்கென்ன... நம் கடன் தேசப்பணி செய்து கிடப்பதே...!

*பாவலரே!*

*தாய் தந்தை சொல் கேட்டு நடக்காதவர்களை பற்றி என்ன நினைக்கின்றீர்?*

*பரமேஸ்வரி,*
*அச்சுவேலி*

அவர்களின் பிள்ளைகள் அவர்களின் சொற்களை உதாசீனம் செய்யும் போது 'மலரும் நினைவுகளில்' மனவருத்தம் கொள்வர் அவ்வளவு தான்....

*பாவலா!*

*ஒடியல் புட்டும், பனாட்டும் சுவைத்த எனது அம்மம்மா தற்போது குளிர் சோடாவும் கோழிப் புரியாணியும் தருமாறு அடம் பிடிக்கின்றார் இவருக்கு என்ன செய்யலாம்?*

*பத்மசுதந்திரா,*
*உடையார்கட்டு.*

அந்த ஒடியல் புட்டும் பனாட்டும் கொடுத்த உறுதியில் இந்த வயதில் ஐஸ்கிரிம் குடிக்கும் வலுவுடன் இருப்பதற்காகச் சந்தோஷப்படுங்கள்

*பாவலா!*

*திருடர்களை விழிகளில் கண்டறியலாம் என்கிறார்கள் அப்படியானால் துரோகிகளை எதனூடாக அறியலாம்.*

*மதன்,*
*கிளிநொச்சி.*

அவர்கள் பேசும் மொழிகளை வைத்தும் அவர்கள் சொல்லும் வழிகளை வைத்தும் கண்டறியலாம்...

*பாவலா!*

*சந்திரிகா அம்மையாருக்கும் ஜே.வி.பி யினருக்கும் இடையில் ஏற்படும் முறுகல் நிலையைத் தணிப்பதற்குத் தங்களை சமாதான தூதராக அனுப்புவதற்கு முடிவெடுத்துள்ளேன் இதைப்பற்றி என்ன கூறவிரும்புகிறீர்?*

*பத்மசுதந்திரா,*
*உடையார்கட்டு.*

அவர்களின் ஊடலுக்குள் என்னை ஊடுருவ வைப்பதில் உமக்கு என்னதான் திருப்தியோ?... ஊடல்கள் எல்லாம் கூடல்களில் தான் முடியும்... கவலைப்படாதீர்கள்.

*பாவலா!*

*நீரும், நானும் துறவியாகப் போவோம் வாரீரா?*

*பிரியங்கா,*
*யாழ்ப்பாணம்*

துறவிக்கு துணை தேவையில்லை... தனிமைதான் தேவை.

*பாவலா!*

*இந்த உலகில் இனி அமைதி நிலவுமா?*

*துஷியந்தி,*
*உருத்திரபுரம்.*

சுனாமி சொல்லும் சேதி அவ்வளவு சாதகமானதாக இல்லை. ஆபத்து அச்சுறுத்தல் அமைதிக்கான சமிக்ஞையல்ல.

*பாவலா!*

*அந்தாட்டிக்கா பனிக்கட்டிகள் எல்லாம் உருகத் தொடங்குகின்றன நாங்கள் பாதுகாப்பாக இருக்க எங்கு போகலாம்.?*

*பிரபா,*
*கிளிநொச்சி.*

இப்போது சமுத்திரத்தை விட பாலைவனம் பரவா யில்லை போலிருக்கிறது!

*பாவலா!*

*சினிமா பக்கம் அச்சு ஊடகங்களில் வருவது தடை செய்யப்பட்டால் நிலைமை எப்படி இருக்கும்.*

*சிவானி.*
*திருவையாறு.*

பல பத்திரிகைகளை பார்ப்பதையே (படிப்பதையல்ல) விட்டு விடுவார்கள்.. தமிழகத் தொலைக்காட்சிக்கு தலையைப் புகுத்திக் கொள்வார்கள்.

*பாவலா!*

*விஞ்ஞானம் சாதித்தது எவ்வளவு? சாதிக்காதது எவ்வளவு?*

*தர்சிகா,*
*யாழ்ப்பாணம்.*

சாதித்தது உலகளவென்றால் சாதிக்காதது பிரபஞ்சமளவு.

*காவலா!*

*இன்று எமது பிரதேசத்தில் உள்ள சில அரச உத்தியோகஸ்தர்கள் மக்களிடம் எரிஞ்சு விழுகின்றார்கள் இவர்களை என்ன செய்யலாம்.*

*சதீஸ்குமார்,*
*கிளிநொச்சி.*

இதுவும் அரசபயங்கரவாதத்தின் ஓர் அங்கம்தான்.

*பாவலா!*

*நீர் யார் என்று தெரியுமா?*

*தர்மினி,*
*கோணாவில்.*

உமக்குத் தெரிந்தால் சொல்லுமேன்.




மெய்யே சி[illegible]னக்கா காணியொண்டு சி[illegible]போகக் குத்தகைக்குப் போ[illegible] எடன்.

"என்னவாம் றேற்று"

'ஐயாயிரம்... அஞ்சேக்கர் கிடக்கு எடு எனக்கொரு ஏக்கரத்தா... உன்ர காணியும் பாத்துத்தாறன்"

"எனக்குத் தெரிஞ்ச நிலம்... தண்ணிப் பிரச்சினையில்லை"

"அது சரி இஞ்ச பங்கு மூவாயிரத்தைநூறு தானே"

விசர்க்கதை மல்லாவிக்க ஏழாயிரம் போகுது இது மலிவுதானே.

அது சரியடா ஐயாயிரத்துக்கு ஒரேக்கரெடுத்து அதிலயென்ன வரப்போகுது கூலியும் இப்ப நெருப்புமாரித்தானே.

எண்டாலுமக்கா எடுக்கலாம் நான் நிக்கிறன் வேலையளச் செய்து தரலாம் தானே.

அது பிரச்சினையில்லயடா நாமள் நிண்டு பாடுபடாம எல்லாம் கூலி குடுத்தா கமஞ் செய்யிறதில என்ன வரப் போகுது. ஏன் உனக்கே காலபோகம் நட்டமெண்ணுறாய்.

பாழ்பட்ட கதைய அவ்வளவும் மாடு பூந்து ஒரேக்கருக்கு மேல திண்டிட்டுதே.

ஏன் மாட்டுச் சட்டம் முடிஞ்சே விதைச்சனி.

இல்லையே எனக்குப் பிறகும் விதைச்சவங்கள் தானே.

வெட்டியாச்சே.

மாடெண்டுறன் பிறகு சொல்லுறாய்.

ஏன்ரா அப்ப உவளவுக்கும் அழிவுகாசை வாங்காதையன்.

ஆரெட்ட வாங்கிற - அதிகாரியும் அவன்தான் மாட்டுக்காறனும் அவன்தான்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 113



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 113

.............................................................................
.............................................................................
.............................................................................
.............................................................................

பெயர் : .....................................................
முகவரி : .....................................................
.....................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 112



**எஸ்.சுகந்தி,**
**இல:-315, உதயநகர்,**
**கிளிநொச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

*அரவணைக்க அன்னையின் கரம் தேடியவன்*
*இன்று தமிழ் அன்னை அரவணைப்பில்*
*மகிழ்வாக பருகுகின்றான் குளிர்களி*
*நாளை நிமிர்வான் தமிழ் மானம் காத்திட!*

### பாராட்டுக்குரிய வரிகள்

*பார் போற்றும் தமிழ் மரபில் உதித்த பாலகனே*
*பாதையிலே குளிர்களியை பாதகம் இல்லை என்றோ*
*பார்த்து சுவைத்து பருகுகின்றாய்- கவனம்*
*பாரிய கொடிய நோய்க் காவியாகவும் இருக்கலாம்.*

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*பாணிப்பாகு எனக்கு*
*இனிப்பாக இருக்குது*
*களிப்பாக இருக்கிறேன்*
*கரிகாலன் பாதையில்.*

எஸ்.சிவா,
யாழ்ப்பாணம்.

*வளரும் பயிரே வளர் பிறையே*
*வளரும் தமிழீழத்தின் வலக்கரம் நீயே*
*அன்னைத் தமிழை ஐஸ்கிறீமின் சுவையப்போல*
*எண்ணத்தில் எந்நாளும் கொல்வாய் கண்ணே!*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*உன் மூத்த குடியின் பழுத்த அரசியல் வாதிகள் அரசைக்*
*குளிர வைத்தே 'அரோகரா' ஆனார்கள்- தம்பி*
*குளிர்மை அறியா மனதுடன் குளிர்களி உண்ணு[illegible]*
*எதிரியை போல தொற்று நோய்களும் ஒளிந்தே இருக்கும்.*

சு.ராஜசெல்வி,
சென் திரேசா பெண்கள் கல்லூரி.

*அப்பா இருந்தால் இரண்டு வாங்கித் தருவாரே!*
*அம்மா குளிர் கூடாது என்பாளே!*
*தங்கை பாப்பாவும் சேர்ந்து உண்பாளே!*
*சிறுவன் மனது பழையதை அலசுதே!*

க.மதிவதனன்,
புதுக்குடியிருப்பு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு



நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என்ற நிலையில் கைப்பற்றிய அவுஸ்திரேலியா அணி வெற்றிக்கிண்ணத்துடன்..




இந்திய-பாகிஸ்தான் டெஸ்ட் தொடர் சமனிலையில் முடிந்ததால் வெற்றிக்கிண்ணத்தைப்பகிர்ந்து கொள்ளும் இரு அணி தலைவர்களையும் படத்தில் காணலாம்.


இப்பொழுது இலங்கையில்

அக்யூரேட்007
ஜாக்குவார் 009

சாரங்கள்
பெனியன்கள்
உள்ளாடைகள்
கைக்குட்டைகள்



Lungies(Sarongs)
Vests
Briefs
Kerchiefs

Direct
Importers
Wholesalers
&Retailers



Sole Distributors

OCEANICK IMPEX

Specialist in Wedding Sarees
WHOLE SALE & RETAIL DEALERS IN TEXTILES
192, MAIN STREET, COLOMBO - 11 Ph: 2336720, 2327168
FAX:2326961, Email: oceanick192@yahoo.com





177D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த

சிறி கருமாரி நகையகம்

தற்போது புதிய இடத்தில்...
அசல் 22 கரட் தங்க நகைகளை
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

சிறி கருமாரி நகையகம்

205/6, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம்
தொ.பேசி: 021-222 5385 (C-11475)



YAMAHA
Touching Your Heart

யமஹா இலவச மெக்கானிக் சேவிஸ்

இடம்- யமஹா பிளாஸா
காலம்- இன்றும் நாளையும்
நேரம்- காலை9.00-மாலை5.00
யமஹா மோட்டார் கம்பனியும் யாழ்.ஏக விநியோகஸ்தர்கள் யமஹா பிளாஸாவும் இணைந்து நடாத்தும் அனைத்து ரக யமஹா மோட்டார் சைக்கிள்களுக்கான இலவச மெக்கானிக் சேவிஸ் யமஹா கம்பனியின் விசேட தொழில்நுட்பவியலாளர்கள் கலந்துகொள்கின்றனர் இந்நிகழ்வில் அனைத்து யமஹா உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்



YAMAHA PLAZA
யமஹா பிளாஸா
298 KKS Road, Jaffna.
021 4590 200
0777 563 803
(C-11473)



# நன்றி கூறுகின்றோம்



20-03-2005 ஞாயிற்றுக்கிழமை குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபத்தினரால் தியாகதீபம் அன்னைபூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட மாபெரும் பரிசளிப்புவிழாவும் வாடிக்கையாளர் கௌரவிப்பும் நிகழ்வுக்கு தலைமை தாங்கி நடாத்திய முன்னாள் கிளிநொச்சி வர்த்தக சங்கத்தலைவர் திரு.சரவணபவானந்தன் அவர்களுக்கும் அவருக்கு உதவியாக செயலாற்றி நிகழ்வைச்சிறப்பித்த திரு.திருலோகமூர்த்தி ஐயா அவர்களுக்கும் எமது நிகழ்வுக்கு சிறப்புவிருந்தினராக வருகை தந்த திரு.பொன்.தியாகம் அப்பாவும் அவர் துணைவியாருக்கும் விசேட ஆணையாளரும் வன்னேரி முதியோர் இல்லத்தின் தலைவருமாகிய திரு.நித்தியானந்தன் ஐயா அவர்களுக்கும் காவல்துறை உறுப்பினருக்கும் கிளிபிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் அவர்களுக்கும் கிளி கிராமசேவையாளர் செல்வரத்தினம் அவர்களுக்கும் கிளி வர்த்தக சங்கத்தலைவருக்கும் எமது நிகழ்வுக்கு வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் என் அழைப்பை ஏற்று நிகழ்வினை சிறப்பித்த அனைத்து வாடிக்கையாளருக்கும் எமது வியாபாரநிலையம் சார்பில் பல கோடி நன்றியினைத்தெரிவிப்பதோடு எமது பொதுநோக்கு சிந்தனைக்கு ஊக்குவிக்கும் முகமாக நேரிலும் கடிதமூலமும் வாழ்த்தும் நன்றியும் தெரிவித்த வாடிக்கையாளர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரிமையாளரும் பணியாளர்களும்

## குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே: 021-228 5971

(C-11474)



EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



(C-10120)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 01 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.